பக்கங்கள்: இருபத்தெட்டு+II

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 25 புதன்கிழமை (12.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 320



14 வீழினும் எழுந்து



21 தாஜ்மகாலுக்கு ஆபத்து இல்லை



25 அசத்தும் அன்டி முரே

## தீர்வு தொடர்பில் இணக்கம் ஏதுமின்றி தெரிவுக்குழுவுக்கு வராது கூட்டமைப்பு

### அரச தரப்பிடம் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 12

அரசியல் தீர்வை எட்டுவது தொடர்பான பேச்சில் காத்திரமான இணக்கம் ஒன்று எட்டப்படுவதற்கு முன்னதாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தாம் ஒருபோதும் அங்கம் வகிக்கப்போவதில்லை என்று அரசிடம் ஆணித்தரமாகத் தெளிவுபடுத்தியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. எனவே தெரிவுக் குழு யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக தீர்வு விடயத்தில் காத்திரமான முடிவுகளை எடுக்குமாறும் அது அரசிடம் வலியுறுத்தி உள்ளது.

முன்னதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான நோக்கம் பற்றிய கருத்துரையை (Terms of Reference) மாற்றியமைப்பதற்கு அரசு தலைமை இணங்குமானால் தெரிவுக்குழுவில் பங்குபற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்திருந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த இணக்கம் எட்டப்பட்டிருந்தது.

போர் முடிந்து விட்டது; சமாதானம் பிறந்துவிட்டது. நாட்டை அபிவிருத்தி செய்வது எப்படி என ஆலோசித்து உரிய சிபாரிசுகளைச் செய்வதற்கு இந்தக் தெரிவுக் குழுவை

பக் 27

## திருமலையில் தமிழ்ப் பெண்ணின் சடலம் மீட்பு

திருகோணமலை, ஒக்.12

திருகோணமலை - மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிகுளம் பிரதேசத்திலுள்ள அரச காணி ஒன்றிலிருந்து பெண் ஒருவரது சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

பொன்னம்பலம் தங்கம்மா என்ற 57 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9ஆம் திகதி மாலை 6 மணிக்கு வீட்டிலிருந்து வெளியே சென்றிருந்த குறித்த பெண், கடந்த இரண்டு தினங்களாக வீடு திரும்பாத நிலையில், பிரதேசவாசிகள் குறித்த பகுதியில் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் போது, நொச்சிகுளம்

பக் 27

## இலங்கை அரசின் நடவடிக்கைகளால் பொறுமை இழந்த நிலையில் பான் கீ-மூன்

### நோர்வேயில் வைத்து அவரே கூறினார்

கொழும்பு , ஒக்.12

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் நிகழ்ந்த சம்பவங்களாலும், இலங்கை அரசின் நடவடிக்கைகளாலும் தான் பொறுமை இழந்துள்ளார் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் திங்கட்கிழமை ஆரம்பமான 'உலகில் அனைவருக்கும் 2030ஆம் ஆண்டுக்கிடையில் மின்சாரம்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக வந்தபோது விசேடமாக தெரிவுசெய்யப்பட்ட சர்வதேச பத்திரிகையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின்போது இலங்கை தொடர்பாக நீண்டநேரம் கருத்துத் தெரிவித்த ஐ.நா. செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை விடயத்தில் நான் ஒரு விசேட நிபுணர் குழுவை அமைத்திருந்தேன். அது உங்க

பக் 27

## முல்லேரியா சம்பவம்; மேலும் ஐவர் கைது

கொழும்பு,ஒக்.12

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் ஐவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்றுமுன்தினம் 16கைத்துப்பாக்கிகளுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதாகி இருந்தார். இவர் தெரிவித்த தகவலின் படியே இந்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பக் 26

## மீனவர் மீதான தாக்குதல் விவகாரம் இலங்கையைக் கண்டிக்க வேண்டும்

### ஜெயலலிதா மன்மோகனுக்கு காட்டமாகக் கடிதம்

கொழும்பு, ஒக்.12

தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படும் விவகாரத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உடனடியாகத் தலையிட்டு இலங்கையிடம் கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கவேண்டும். மேலும் தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதை, இந்தியர்களுக்கு எதிரான தாக்குதலாக மத்திய அரசு கருதவேண்டும்.

- இவ்வாறு முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு -

*(முற்கொண்டு வந்த செய்தி 21 ஆம் பக்கத்தில்)*

பாக் ஜலசந்தி பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையாலும், சிங்களமீனவர்களாலும் தொடர்ந்து தாக்கப்படுவதையும் துன்புறுத்தப்படுவதையும் உங்கள் கவ

பக் 26

## முல்லேரியா சம்பவ விசாரணை அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவு

### படுகாயமுற்ற துமிந்த தேறி வருகிறார்

கொழும்பு, ஒக்.12

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கான காரணத்தைக் கண்டறிந்து முழுமையான விசாரணை அறிக்கையை விரைவில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோனுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை முல்லேரியா பகுதியில் இரு அரசியல்வாதிகளின் குழுக்களுக்கிடையே பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் ஆதரவாளர்களுக்கும், ஆளும்தரப்பு எம்.பி. துமிந்த சில்வாவின் ஆதரவாளர்களுக்குமிடையே இவ்வாறு துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட

பக் 27

## பிரமுகர் பாதுகாப்பு பொலிஸார் இனி சீருடையுடன் கடமை

கொழும்பு, ஒக்.12

பிரமுகர்களுக்கான பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மெய்பாதுகாவலர்களும் இனி கண்டிப்பாக சீருடை அணிய வேண்டும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு உடனடியாக நடைமுறைக்கு

பக் 26

## அனைத்து தமிழ்க் கட்சிகளுடன் பேசிய மாத்தாய் ஈ.பி.டி.பியைப் புறக்கணிப்பு

### ஆனால் டக்ளஸ் ஜனாதிபதியுடன் இணைந்து சந்திப்பு

கொழும்பு, ஒக்.12

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய் முதல் நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் மறுநாள் ஏனைய மூன்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

ஆனால் அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்க நேரம் ஒதுக்கிக் கொடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

கூட்டமைப்பினருடனான சந்

பக் 27

## கடற்படையினர் - முஸ்லிம் இளைஞர்கள் மோதல்; ஐவர் காயம்

கொழும்பு, ஒக்.12

அம்பாந்தோட்டையில் தெற்காசிய கடற்கரை விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சி ஒன்றின் போது கடற்படையினருக்கும், முஸ்லிம் இளைஞர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த மோதலில் 3 முஸ்லிம்

பக் 27

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னல் நிலவுவதற்கான சாத்தியம்

# கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி வாக்காளர் இடாப்பில் பெயரைப் பதியுங்கள்

## பிரதேச சபை உறுப்பினர்கள் மத்தியில் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக். 12

பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காமல் எல்லோரும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டால் தான் மறுக்கப்பட்ட உரிமைகளை மீளப் பெறமுடியும். எனவே இன்று கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி அனைவரது பெயர் களையும் வாக்காளர் இடாப்பில் பதிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பிரதேச சபை தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றும்போதே இப்படிக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத் திய நிலையமும் (கபே) இணைந்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கபே அமைப்பின் பிரதிநிதி உசுறு, தமிழரசுக்கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கடந்த 2011 ஆம்ஆண்டு ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவின் போது வாக்காளர் இடாப்பில் பதியப்படாமல் விடப்பட்டவர்களின் பெயர்களை மீள் பதிவு செய்வதற்கான விசேட வேலைத் திட் டம் தொடர்பாக பிரதேச சபையினர்களுக்கு விளக்கம் அளிக்கும் முக மாகவே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு தலைமையுரை ஆற்றிய சரவணபவன் எம்.பி. மேலும் கூறியதாவது:

2009 ஆம் ஆண்டில் 8 லட்சத்து 16 ஆயிரத்து ஐந்தாக இருந்த யாழ். மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் ஐம்பது வீதம் அதாவது 4 லட்சத்து 84 ஆயிரத்து 791 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது.

யுத்தம் மற்றும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இடம்



பெயர்ந்தவர்கள், அகதி முகாம்களிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள், வெளி நாடுகளில் தங்கி இருப்பவர்கள் எனப் பல்வேறு காரணங்களால் அவர்களுடைய பெயர்கள் வாக்காளர் இடாப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆறாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**பல்வேறு வழிமுறைகளிலும் எமக்குப் பாதிப்பு**

இங்கே ஒன்றை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மட்டும் குறையவில்லை.

- எமது பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படும்.
- பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையில் வெட்டு விழும்
- விகிதாசார அடிப்படை யில் கிடைக்க வேண்டிய தொழில் வாய்ப்புகளும் கிடைக்காமல் போகும்.

இதனால் நீங்கள் ஒவ்வொருவரும் இந்த விடயத்தில் உணர்வு பூர்வமாக உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். வீடு வீடாக ஒவ்வொரு குடும்பத்தவர்களையும் சந்தித்து, இடம் பெயர்ந்துள்ளவர்கள், வெளி நாடுகளில் இருப்பவர்கள், சிறைச்சாலைகளில் இருப்பவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் அனைவரது பெயர்களையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண் டும். பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கக் கூடாது. - என்றார்.

(த-2)

# காணாமற் போனோர் விடயத்தில் அரசு அக்கறை காட்டவில்லை

## போராட்டம் நடத்தவுள்ளதாக காணாமற் போனோரைத் தேடியறியும் குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் காணாமற் போனோர் தொடர்பில் அரசு எந்த விதமான அக்கறையும் செலுத்தவில்லை.

இந்த நிலை தொடருமானால் மக்களைத் திரட்டி அரசுக்கு எதிராகத் தொடர் போராட்டங்களில் ஈடுபடுவோம். இவ்வாறு காணாமற்போனோரைத் தேடியறியும் குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணாமல்போய் மூன்று வருடங்கள் கடந்திருந்தால் அவர்களுக்கு மரண அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும் என்று நாடாளுமன்றில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணாமற்போயுள்ளனர். அவர்கள் சார்பில் இதுவரை எந்த ஒரு நபருக்கோ மரண அத்தாட்சிப்பத்திரம் என்று விண்ணப்பிக்கப்படவில்லை.

பதிலாக அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றனர் என்ற நம்பிக்கையுடன் உறவினர்கள் வாழ்கின்றனர்.

சிறைகளில், தடுப்புமுகாம்களில், இராணுவ முகாம்களில், சட்டரீதியற்ற தடுப்பு முகாம்களில் தமது உறவுகள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை காணாமல் போனவர்களது உறவுகளுக்கு இப்போதும் உள்ளது.

இவ்வாறான மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே நாம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

எமது அமைப்பிடம் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் உள்ளன. இவர்களது குடும்பங்கள் எங்களிடம் வந்து புனர்வாழ்வு பற்றியோ, மறுதிருமணம் பற்றியோ கோரவில்லை தமது உறவுகளை எப்படியா வது மீட்டுத்தாருங்கள் என்றே கோருகின்றனர்.

அதற்காகப் போராடவும் தயார் என்று தெரிவிக்கின்றனர். எனவே யதார்த்த நிலையை உணர்ந்து நாம் காணாமல் போனவர்கள் தொடர்பாக குரல் எழுப்புவோம். - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# தனியார் பல்கலைக் கழகங்கள் பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தினர் இலங்கையில் தனியார் பல்கலைக் கழகங்கள் என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளனர்.

நாளை வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல்துறை விரிவுரை மண்டபத்தில் பி.ப.2 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்தக் கலந்தரையாடலில் பொது மக்களும் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தி.சிறிதரன், கு.குருபரன்,வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா, கலாநிதி செ.அறிவழகன் ஆகியோர் கருத் துரை வழங்குவார்கள்.

தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படுகின்றது.

# அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம் ரூ.50 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஒக்.12

அனுமதிப்பத்திரமின்றி டிறக்டரில் மணல் ஏற்றிச் சென்ற நபர் சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

பாலாவி தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் அந்தப் பகுதியில் இவ்வாறு மணல் ஏற்றிக்கொண்டு சென்ற சமயமே கொடிகாமம் பொலிஸார் கைது செய்து அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர்.

நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று பொலிஸார் அவரைமுன்னிலைப் படுத்தினர்.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-4)

# நிகழ்வுகள்

### சிறுவர், முதியோர் தின விழா

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர், முதியோர் தினவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கராஜா கலந்து கொள்வார். (வ-313)

### பகவான் கடாட்ச பூசை

ஸ்ரீ பகவதி பகவான் கடாட்சபூசை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள இல.35 இல் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகல் 4 மணிக்கு விசேட பூசையும் பஜனையும் இடம்பெறும். (வ-313)

### ஆசிரியர் தின விழா

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் சா.ஜமால்தீன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார். (வ-313)

### திறன் விருத்தி செயலமர்வு

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யுனிசெப் நிறுவனம் வழங்கும் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வு இன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் காலை 7.30 மணிமுதல் யாழ்.ரில்கோ ஹோட்டலில் இடம் பெறவுள்ளது. (வ-38)

### மாணவர்கள் கௌரவிப்பு

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 13 மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 52 மாணவர்களையும் பாடசாலைச் சமூகத்தால் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும், மறவன்புல சகல கலா வித்தியாலய உப அதிபர் நா.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-207)

# கூட்டமைப்புடன் தொடர்ந்து பேசி விரைவில் தீர்வைக் காணுங்கள்

## அரசுக்கு அழுத்தமாகக் கூறியுள்ளார் மாத்தாய்

கொழும்பு, ஒக். 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுக்களின் மூலமும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவும், இனப்பிரச்சினைக்கு பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்று விரைவாக எட்டப்பட வேண்டும் என்று இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய் இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்று சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்பட்டு தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையுடன் இருப்பதாகவும், ரஞ்சன் மாத்தாய் இலங்கை அரசிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்திய அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புப் பணிகள் மந்தகதியில் இடம்பெறுவது குறித்து ரஞ்சன் மத்தாய் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு 50,000 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான பணிகள் ஆரம்பித்து ஓர் ஆண்டுக்கு மேலாகியும், இதுவரை 52 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



பளைப் பகுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளை ரஞ்சன் மாத்தாய் பார்வையிடுகிறார்.

முன்னோடியாக 1000 வீடுகளை அமைக்கும் திட்டத்தில் 600 வீடுகள் இன்னமும் கட்டி முடிக்கப்படாத நிலையில் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் 200 வீடுகளை அமைப்பதற்கான காணிகள் இன்னமும் தெரிவு செய்யப்படவில்லை என்றும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

பளைப் பகுதியில் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளைச் சென்று பார்வையிட்டுள்ள ரஞ்சன் மாத்தாய், அந்த வீடுகளை பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுடனும் கலந்துரையாடினார். அப்போது கட்டப்பட்ட வீடுகளில் சமையலறைப் புகைபோக்கிகள் அமைக்கப்படாத குறைபாட்டை பயனாளிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, வடக்கில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் காங்கேசன்துறைத் துறைமுக புனரமைப்பு மற்றும் ரயில்வே பாதை புனரமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டுள்ள அவர் அந்தத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து திருப்தி வெளியிட்டுள்ளார்.

மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள மாத்தாய், இது இரு நாடுகளின் மீனவர்களினதும் வாழ்வாதாரப் பிரச்சினை என்றும், இருநாடுகளின் மீனவர் அமைப்புகள் இணைந்து பேசி முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்களை தமது கடற்படை தாக்குவதாக கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கை அரசு நிராகரித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-323)

# பலாலி ஆசிரியர் கலாசாலையில் பாலியல் துன்புறுத்தல் நடந்ததா?

## விசாரணைக்குத் தயார் என்கிறார் அதிபர்

யாழ்ப்பாணம், ஒக். 12

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்றிருந்தால் அது குறித்து அரச அதிபரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் விசாரணைக்குழுவோ நேரடியாக அனைத்துத் தரப்பினரிடமும் விசாரிக்க முடியும். அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நான் தயார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.இக்னேசியஸ்.

கடந்த 10 ஆம் திகதி ஊடகங்களில் வெளியான பலாலி ஆசிரியர் கலாசாலையில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான செய்தி குறித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இது ஒரு பாரதூரமான குற்றச்சாட்டு இது எமது கலாசாலையில் பணியாற்றும் எல்லோரையும் அவர்களது குடும்பங்களையும் அவமரியாதைக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாக்கியுள்ளது.

எனவே இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அனைவரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளும் உடன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். விசாரணைகள் இடம்பெற்று உண்மை நிலை வெளிக்கொண்டு வரப்படும் வரை கலாசாலையுடன் தொடர்புடைய அனைவரும் பொறுமை காக்கும் படி கேட்டு நிற்கிறேன் - என்றுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக அரச அதிபர் நேரடியாகவோ அல்லது அவரினால் நியமிக்கப்படும் விசாரணை மூலமாகவோ, பெண் உரிமை சார்ந்த அமைப்புக்களோ, ஊடகவியலாளர்களோ கலாசாலைக்கு நேரடியாக வருகை தந்து கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் அனைவரிடமும் விசாரணையை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்கவும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

### சமூகத்தை மிரட்ட முயற்சிக்கிறார் அதிபர்

இதேவேளை -

பாலியல் தொந்தரவு தொடர்பாக பெண்கள் இனிவரும் காலங்களில் அரச அதிபராகிய என்னிடம் முறைப்பாடு தெரிவிக்கக்கூடாது என்பதற்காகவும் சமூகத்தை மிரட்டுவதற்காக்வுமே, பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

என்னை நம்பியே பல பெண்கள் தமக்கு நேர்ந்த பாலியல் கொடுமைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்கள் யாரென்பது தொடர்பாக நான் காட்டிக் கொடுக்க மாட்டேன். பாலியல் தொந்தரவை நிரூபிக்குமாறு கேட்பதன் மூலம், எனக்கு தகவல் தந்த பெண்களை அடையாளப்படுத்த முயற்சிக்கிறார் அதிபர் இக்னேஷியஸ்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றார் அரச அதிபர். (ஒ-த-15)

# ரூபா கருணாதிலக்க நேற்று காலமானார்

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரூபா கருணாதிலக்க தமது 79ஆவது வயதில் நேற்று காலமானார். ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும்,பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராகவும் இவர் பதவி வகித்திருந்தார். 2002 - 2004ஆம் ஆண்டு காலப் பகுதியில் நெதர்லாந்து தூதுவராகக் கடமையாற்றிய ரூபா கருணாதிலக்க, காலி மஹிந்த வித்தியாலயம் மற்றும் கொழும்பு நாலந்தா கல்லூரி என்பவற்றின் பழைய மாணவராவார். இவரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை எல்பிட்டியில் நடைபெறவுள்ளது.

# எல்லை நிர்ணயம் குறித்து பொதுமக்களிடம் ஆலோசித்து அறிக்கை சமர்ப்பிக்குக!

## பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 12

எல்லை நிர்ணயங்கள், பிரதேச செயலக எல்லைப்பிரிவு என்பன தொடர்பாக பொதுமக்களிடம் கலந்தாலோசித்து பிரதேச செயலர்கள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பான கூட்டம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் 60 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளதால் போக்குவரத்துப் பிரச்சினைகள், நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் சில பிரதேச செயலக எல்லைகளை. பிரித்தல், தனியாக விடுபட்ட எல்லைகளை ஒன்றிணைத்தல் சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் எல்லை நிர்ணய குழுத்தலைவர் புலுமில்ல யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் கே.கணேஸ், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில்வேஸ்திரி அலன்ரின், அபிவிருத்திக் குழுக்களின் தலைவர் மு.சந்திரகுமார், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் இறுதியில் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் எல்லை நிர்ணயக்குழுத் தலைவர் ஆகியோர் பிரதேச செயலர்கள் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பாக திறமையாகச் செயற்பட்டிருக்கின்றனர் எனக் குறிப்பிட்டதுடன் பொதுமக்களின் கருத்துக்கள் இதுவரை பெறப்படவில்லை அவர்களுடன் கலந்தாலோசித்து பிரதேச செயலக எல்லைப் பிரிப்பு சம்பந்தமாக தெளிவான காரணங்களுடன் 10 நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கலந்து கொண்ட பிரதேச செயலர்களிடம் கூறினார். (ஒ-319)

# வெள்ளைக்கொடி விவகாரம் உண்மையென அமெரிக்காவிடம் தெரிவித்தார் பொன்சேகா

## விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஒக். 12

சிறையில் அடைக்கப்பட முன்னர் சரத் பொன்சேகாவை தாம் சந்தித்தார் எனவும், அப்போது வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளிவந்த செய்தி உண்மையானது என்று பொன்சேகா தன்னிடம் தெரிவித்தார் எனவும் அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா பூட்டின்ஸ் அமெரிக்கத் தலைமையகத்துக்கு அனுப்பியுள்ள கேபிள் செய்தியில் தெரிவித்திருந்தார் என விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அமெரிக்க தலைமையகத்துக்கு அனுப்பிய பாதுகாப்புச் செய்திகள் சிலவற்றை தற்போது விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு கேபிள் ஊடாக அனுப்பப்பட்ட இந்தச் செய்தியில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா பூட்டின்ஸ் தாம் சரத் பொன்சேகாவோடு பேசியதாகத் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கையில் இருந்து வெளிவந்த 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெள்ளைக்கொடியோடு சரணடைந்த புலிகள் இயக்கத்தின் அரசியல் தலைவர்கள் குறித்த செய்திகள் வெளியாகியிருந்தன.

''சரணடையும் புலிகளின் தலைவர்களைச் சுட்டுத் தள்ளுமாறு கோத்தபாய உத்தரவிட்டார்'' என்ற செய்தியை சரத் பொன்சேகா தெரிவித்தார் என அந்தப் பத்திரிகை வெளியிட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பெரும் சர்ச்சை ஏற்பட்ட நிலையில் பின்னர் சரத் பொன்சேகாவை இலங்கை அரசு சிறையில் அடைத்தது.

ஆனால், அவர் சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்னர் அமெரிக்கத் தூதுவர் சரத் பொன்சேகாவைச் சந்தித்தார் எனவும், சண்டே லீடர் பத்திரிகையில் வெளிவந்த செய்தி அனைத்தும் உண்மையானது என அவர் தன்னிடம் தெரிவித்தார் எனவும் அமெரிக்கத் தூதுவர் பூட்டின்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விவரங்களை அவர் தனது அமெரிக்க தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கேபிள் விவரத்தையே தற்போது விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது. (ஒ-சி)

# மனோவின் ஆதரவு தேவையில்லை; நிபந்தனைக்கு ஐ.தே.க. அடிபணியாது

''கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தை கொண்டுநடத்துவதற்கு மனோ கணேசனின் ஆதரவு எமக்குத் தேவையில்லை. ஜனநாயக மக்கள் முன்னணியின் நிபந்தனைகளுக்கு ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சி அடிபணியாது.''

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன்.

மக்களுக்காகப் பேரம் பேச மக்கள் சக்தி அவசியம் எனக் கூறி தேர்தல் பிரசாரம் செய்தவர்கள் இன்று தேசியப்பட்டியல் எம்.பி. பதவிக்காகப் பேரம் பேசுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவை துரோகி என விமர்சித்து வசைப் பாடியவர்கள் இன்று விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்து சமரசம் பேசுவது ஏன்? இதுதான் மக்களுக்காக பேரம் பேசுதலா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சிகொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றினால், மனோ கணேசனுடன் பேரம் பேசாது என தேர்தலுக்கு முன்னர் யோகராஜன் எம்.பி. தெரிவித்திருந்தார்.

ஆனால், தேர்தல் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாநகர சபையின் நிலையான ஆட்சிக்கு ஒத்துழைக்குமாறு மனோ கணேசனிடம் ஐ.தே.க. தலைமை பேச்சு நடத்தியது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. திருமதி.
சத்தியலோகேஸ்வரன் (சிவா) கமலாதேவி
தம்பதியரின் செல்வப் புதல்வன்

### ச.தாமிரவரன்

(யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)
2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற
புலமைப்பரிசில் பரீட்சையில்
161 புள்ளிகளைப் பெற்றுச்
சித்தியடைந்தமையையிட்டுப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அண்ணா லிங்கேஸ்வரன்,
அம்மம்மா, மாமாமார்,
மாமிமார், பெரியப்பாமார்,
பெரியம்மாமார், அண்ணாமார்,
அக்காமார், மச்சான்மார்,
மச்சாள்மார், தம்பிமார்,
அதிபர், ஆசிரியர்கள்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

# பணிப்புறக்கணிப்பு: போக்குவரத்து ஊழியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வடமாகாண ஜனநாயக போக்கு வரத்து ஊழியர் சங்கம் ஒரு நாள் பணிப் புறக்கணிப்பை நாளை வியாழக்கிழமை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை ஊழியர்களுக்கு கடந்த 10 மாதங்களுக்கு மேலாக குறிப்பிட்ட திகதியில் மாதாந்தச் சம்பளம் வழங்கப்படாததால் குறித்த திகதியில் அதனை வழங்கக் கோரியே ஒரு நாள் பணிப் புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளதாக அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பள விவகாரம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், இலங்கைப் போக்குவரத்துச் சபைத்தலைவர், வட பிராந்திய சாலை முகாமையாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அந்தச்

# இலங்கை வங்கிக் கிளை பூநகரியில் வெள்ளி திறப்பு

பூநகரி, ஒக்.12

இலங்கை வங்கியின் பூநகரி விரிவாக்கல் கிளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.ரி.டி. சுமணசிறி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கிளையைத் திறந்து வைக்கவுள்ளார். (எ-207)

## ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

An ISO 9001:2000 Certified Company

## Spoken English

**veta** Experts in English Training

ஆங்கில பயிற்சி மையம்

Foundation, First Step மற்றும் Next Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.



| யாழ்ப்பாணம் | | சாவகச்சேரி | | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|
| Sat, Sun | 9.00 a.m. | Sat, Sun | 10.30 a.m. | Sat, Sun | 1.30 p.m. |
| Mon, Wed, fri | 8.30. a.m. | Wed, Fri | 10.30 a.m. | Tue,Thu | 8.30 a.m. |
| Tue,Thu | 3.30 p.m. | | | Wed,Thu | 3.30 p.m. |

இலகுவான முறையில் ஆங்கிலப் பயிலுங்கள்.

**UK** Student Visa, Settlement Visa மூலம் UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.

City & Guilds Approved Centre

## DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தரும் எமது சங்க அங்கத்தவரும், சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனும், சிறந்த விளையாட்டு வீரனுமாகிய

### H.H. யோன்

அவர்கள் கடந்த 03.10.2011 இல் இருந்து பாதுகாப்புப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு மனம் மகிழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாதுகாப்புத் திணைக்களம், யாழ். பல்கலைக்கழகம்.
பாதுகாப்பு உத்தியோகத்தர், நலன்புரி சங்க அங்கத்தவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர்

### கா.அ.ஜெயக்குமார்


அவர்கள் இந்தவருட ஆசிரியர் தினத்தில் நல்லதிபர் விருதை மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளி கையில் பெற்றுக் கொண்டதையிட்டு மகிழ்வதுடன் மேலும் பல

வாழ்த்துவோர்:
ந.இராசேந்திரன் குடும்பத்தினர்,
ச.நேசராசா

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பத்மநாதன்



480/1, கனகசபை அவெனியூ, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்மநாதன் நேற்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரட்ணதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-சுந்தரம் தம்பதியரின் மருமகனும், பக்தவத்சலன், யசோதா, ராதை, பரந்தாமன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

480/1, கனகசபை அவெனியூ,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பக்தவத்சலன் (கண்டு-மகன்).

## நாய்க்குட்டி விற்பனைக்குண்டு

58 நாள்கள் நிறை[illegible] குட்டி (Brown) நிறம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: வவா
41, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

## வீடு விற்பனைக்கு

பயன்தரு மரங்கள், சுற்றுமதில் ஆகியவற்றுடன் கூடிய 1½ பரப்புக் காணியில் அமைந்த புதிய வீடு கோண்டாவில் கிழக்கில் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: 0779633993**

## VACANCY

கணனி கல்வி நிறுவனத்திற்கு பகுதி நேர விரிவுரையாளர்கள் (இருபாலாரும்) தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**NORTH LEAD EDUCATIONAL CENTER**
328 A, Stanly Road, Jaffna.
Tel: 222 4459, 0772 533390 Fax : 222 4460
e-mail : northlead@gmail.com

## சமையல் உதவியாளர் உடன் தேவை

விருந்தினர் விடுதி ஒன்றுக்கு
சமையல் உதவியாளர் ஒருவர்
உடன் தேவை.
திருநெல்வேலியை அண்மித்து
வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு
0773068855, 0771331784

## ENGLISH, SINHALA & COMPUTER CLASSES

**IELTS, SPOKEN ENGLISH வகுப்புக்கள்**

வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

**சிங்கள வகுப்புக்கள்**

பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

**கணனி வகுப்புக்கள்**

MS Office, DTP, Internet & E-mail, Web & Graphic Designing, Hardware & Networking, Kids Programe, ICT, GIT, C,C#, Java, VB.Net etc... பூரண தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.

*அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்*

**NORTH LEAD**
**EDUCATIONAL CENTER**
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜகிளி பரஞ்சோதி



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜகிளி பரஞ்சோதி 09.10.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வாரி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜகிளியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூரணச்சந்திரன், கோவிந்தராசா ஆகியோரின் சகோதரியும், சுரேஸ் (இத்தாலி), கீதா, லதா, சுதா, ராதா (சுவிஸ்), ஐதா ஆகியோரின் பாசமிகு தாயும், லதா (இத்தாலி), இராஜமோகன், சந்திரசேகர், றெஜி, சிறீகரன் (சுவிஸ்), குணசீலன் ஆகியோரின் அன்பு மாமியும், றொமினா (இத்தாலி), சுகன் (இத்தாலி), பானுஷன், திரோகிஷன், தனிஸ்ரிகா, சிந்துஷன், சிந்துஷா, ஜெனோஷன், ருக்ஷன், வாதுஷா, பிறிட்டிஷா, லக்கிஷா, விதுஷன், வினோசிகா, அபினதாப் (சுவிஸ்), அபிகாயில் (சுவிஸ்), வர்ணிகா, வருணிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

656, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னப்பு மரியரட்ணம்



சக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு மரியரட்ணம் நேற்று முன்தினம் (10.10.2011) திங்கட்கிழமை அகாலமரணமானார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - பிரான்சிஸ்கா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜொய்சியின் அன்புக் கணவரும் சூசானம் - கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கருணரட்ணம் (ஆஸ்திரேலியா), ராஜகுலேந்திரன் (ஆஸ்திரேலியா), இரஞ்சிதரட்ணி, ஜீவரட்ணம் (Paster) இன் அன்புச் சகோதரனும் கஜன் (மக்கள் வங்கி - கன்னாதிட்டி), பெனிற்றன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாகிறேற் (ஆஸ்திரேலியா), மல்லிகா (ஆஸ்திரேலியா), யோகேந்திரன் (புகையிரத திணைக்களம்), லிசியா அமலன், விமலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தனுஜா (ஆசிரியை - புனித பத்திரிசியார் கல்லூரி), மியூறின் சிந்துஜா (மக்கள் வங்கி - பிரதான வீதி), நிரோஜன் (UK) ஆகியோரின் அன்பு மாமனும் ஆதவனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (12.10.2011) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் புனித யுவானியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.29/53, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
மகன்.

### செல்லத்துரை இராசலிங்கம்



ஏழலை மத்தியைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் சோடாக்கம்பனி வீதியில் தற்காலிகமாக வசித்தவரும், தற்போது பருத்திக்கலட்டி, சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை இராசலிங்கம் நேற்று (11.10.2011), செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அருந்தவநாயகியின் (அன்பு) பாசமிகு கணவரும், இரவீந்திரன், உமாகாந்தன் (ரூபன்-சவுதி), யாழினி, சுபாசினி, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சாரதாதேவி, கிருபா, காலஞ்சென்ற சரத் மற்றும் நந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், சோபிகா, சுதர்சன், சிந்துஜா, கிரிசாந், பவீந்திரன், பிரசாந், நவகாந் ஆகியோரின் அன்புப் பேரனும், சுகன்ஜா, அபிசாளினி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகேஸ்வரி வித்தியாசாலை ஒழுங்கை,
பருத்திக்கலட்டி, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்மக்கள் தெளிவுற வேண்டிய கலப்பற்ற உண்மைகளில் ஒன்று

★ வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும். அதற்கு இந்தியாவின் அழுத்தம் அவசியம்.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், அரசாங்கம் வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தி வருகிறது.

★ இனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் அரசு திட்டமிட்டுக் கடைப்பிடித்து வரும் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் காரணமாக,போரின் பின்னரும், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

தமிழ் மக்களைப் பாதிக்கும் மேற்சொன்ன அரசின் சமகால விடயங்களை, பிரச்சினைகளை கொழும்புக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாயிடம் மூன்று தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து எடுத்துக் கூறியுள்ளனர்.

அதேவேளை -

போரினால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவில்லை. இந்தியாவில் சுமார் இரண்டு லட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்கிறார்கள். அத்தோடு போரின் காரணமாக, பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் தமது காணிகளை இழந்துள்ளனர். இத்தகைய சந்தர்ப்பம் பார்த்து அரசாங்கம் காணிகளை மீளப்பதிவு செய்யும் பணியை வேகமாகச் செய்கிறது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் இந்திய வெளியுறவுச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கை நாட்டில் அறுபது வருடங்களாக புரையோடி இருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில், இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் நியாயபூர்வமாகவோ, தாராள மனத்துடனோ செயற்பட்டதில்லை. சுதந்திர இலங்கை, ஜனநாயகக் குடியரசு என்ற பட்டிகளைக் கட்டிக்கொண்டு, தமிழர்களுக்கு எதிரான இனவிரோத நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு , அவர்களின் மண்ணைப் பறித்து இருப்பைக் கபளீகரம் செய்யும் கட்டத்துக்கு வந்திருக்கிறது.

இப்போதுள்ள பெரும் அரசியல் தகிடுதத்தம் என்னவென்றால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அவர்களுக்கான உரிமைகளை வழங்கப் போவதாக சர்வதேசத்துக்கு மணி அடித்து ஓசையிட்டுக் கொண்டு, தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் வாழ்வியல் நலன்களுக்கும் வேட்டு வைத்து வருகிறது.

ஆகப் பிந்தி, போர்க் குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள் என்ற அம்புகளைச் சர்வதேசம் தன்மீது எய்யத் தொடங்கி உள்ளதால், தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில் திடீர்த் தோசை சுடப்போவதாக 'பிடில்' வாசிக்கத் தொடங்கியுள்ளது.

ஆனால் செயலில் - மேலே, ஆரம்பத்தில் காட்டப்பட்ட உரிமை பறிப்புகளில் - தட்டிக் கேட்பார் எவருமின்றி சண்டப் பிரசண்டத் தனமாகச் செயற்படுகிறது. தீர்வு என்ற ஒன்றை உருவாக்குவதற்கு முன்னர், தமிழ் மக்களுக்கு உரித்தான எல்லாவற்றையும் வேரறுத்துவிடும் உச்சக் கபடத் தனத்தில் களமிறங்கி உள்ளது.

அதனால் தமிழ் மக்கள், தமது முந்தையர் நாடு என்று கருதும் இந்தியாவின் உதவியை நாட வேண்டிய நிலையும் அதற்கடுத்து அமெரிக்கா போன்ற வல்லமை உள்ள நாடுகளின் பக்க பலத்தையும் பற்றிக்கொள்ளும் நிலையும் தோன்றி வருகிறது; தவிர்க்க முடியாததாகிறது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து இராணுவத்தை அகற்றுமாறு தமிழ்த் தலைவர்கள் கேட்கும் அதேவேளை, அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் நிலையானவைகளாக மாற்றப்படும் என்று இராணுவத் தளபதி அறிவித்திருக்கிறார்.

வடக்கு, கிழக்கில் அரச அனுசரணையுடன் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. அதனை நிறுத்த உதவ வேண்டும் என்று இந்தியாவிடம் என்று தமிழர் தரப்பில் கேட்கப்படுகிறது. ஆனால் முல்லைத்தீவில் - வெலி ஓயாவில் -சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு நிறுவப்பட்டு அந்தப் பிரதேசம் முழுவதிலும் அரச அனுசரணையுடன் பெரும்பான்மை இனத்தவர் குடியேற்றம் வெகுவேகமாக நடைபெறப் போகிறது.

நாம் இப்பத்தியில் ஒரு தடவை குறிப்பிட்டது போன்று வடக்கு - கிழக்கு தொடர் நிலப்பரப்பு சிங்களக் குடியேற்றம் என்ற கத்தரிக்கோல் கொண்டு துண்டாடப்படப் போகிறது. அந்த வரிசையில் முன்னோக்கிச் சென்று தமிழ் மக்களின் இனப் பரம்பலை மாற்றிவிடும் செயற்பாடுகள் அரசினால் திட்டமிட்டு நிறைவேற்றப்படுகின்றன.

வடக்கு, கிழக்கின் சிவில் நிர்வாகத்தில் படைத் தரப்பின் தலையீடு அதிகமாகி வருகிறது. அது மட்டுமன்றி வடக்கில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் மாகாண சபை ஆட்சி இல்லாததால் முழுக்க முழுக்க, அரச தரப்பின் ஊடுருவலே உயர்ந்து நிற்கிறது.

தமிழர்களை காலால் மிதிக்கும் அநியாயங்கள், கேட்போர் இன்றி, தடுப்பார் இன்றிப் பல வடிவங்களில் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் பிந்தியதே காணிகளின் மீள் பதிவு என்ற அட்சர ஆயுதம். தமிழர் பிரதிநிதிகளுடன் அரசியல் தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தை என்று தொடங்கி, காத்திரமான எந்த முடிவுக்கும் வராமல், தனது நிலைப்பாடு அல்லது நோக்கு எது, என்ன என்று இதுவரை வெளிப்படுத்தாது -

அந்தக் கம்பளத்தின் கீழ் நச்சுப் படிமங்களைப் பதித்து வைத்துள்ளது. அதில் இப்போது வெளியே தெரிவது காணி மீள் பதிவு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் மீள் பதிவின் தேவைக்கான அவசரமும் அவசியமும் ஏன் என்பது இன்னமும் தெளிவாக்கப்படவில்லை.

சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட உரிமை உறுதி இருக்கும் போது, மீள் ஆய்வு எதற்காக? அதுவும் அவசர அவசரமாகச் செய்யப்படுவது ஏன்? காணி உரிமை மாற்றங்கள் செய்யப்படும் போது ஏன் இந்தத் திட்டத்தைச் செய்யக் கூடாது? என்ற கேள்விகள் பதிலற்றுக் கிடக்கின்றன.

பிணக்குகளோ, பிரச்சினைகளோ இல்லாது சட்ட பூர்வமான உரிமை உறுதிகளை வைத்திருப்போரை அசௌகரியப் படுத்துவதன் உள்நோக்கம் என்ன? அரச காணிகளை இனம் காண்பதற்காகவே இந்த ஏற்பாடு என்பது வெறும் புலுமாசு! அவற்றை, வடக்கு, கிழக்கில் மட்டும் தான் இனங்காண வேண்டியுள்ளதா என்பவற்றுக்கு பதில் இல்லாத விவகாரமாக இது உருவாக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் தமிழர்களிடம் ஏற்கனவே உள்ள சிவில் உரிமைகளையும் பறித்தெடுக்கும் பயங்கரமான, மறைமுகமான நச்சு நடவடிக்கைகள் ஆங்காங்கே அரசினால் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தக்க தீர்வு ஒன்றைக் காண்பதில் காலத்தை வாங்கிக் கொண்டு, தனது நச்சுத் திட்டங்களை நிறைவேற்றுவதே அரசின் நோக்கம் என்பதில் தவறு என்ன?

அரசின் இவ்வழி காலவரையறை இன்றி நீண்டு செல்லும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது. அதனால் இந்தியா, அமெரிக்கா மற்றும் சர்வதேச நாடுகளின் உதவியும் ஆசீர்வாதமும் தமிழர் தரப்பின் தவிர்க்க முடியாத தேவைகளாகின்றன. இதுவே இன்றைய கலப்பற்ற உண்மை என்றாகி வருகிறது.

# 87,980 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வடக்கில் காலபோக நெற்செய்கை

## மாகாண விவசாயப் பணிப்பாளர் தகவல்

தென்மராட்சி, ஒக்.12

எதிர்வரும் காலபோகத்தில் வட மாகாணத்தில் 87 ஆயிரத்து 980 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இதன் மூலம் 2 லட்சத்து 88 ஆயிரத்து 669 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் இது குறித்து மேலும் கூறுகையில், கடந்த கால போகத்தில் வெள்ளத்தினால் முற்றாக அழிவடைந்த நெற் செய்கையாளருக்கு இலவசமாக விதை நெல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மத்திய விவசாய அமைச்சும் மத்திய விவசாய திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருள்கள் நிலையமும் இணைந்து விதை நெல்லைக் கொள்வனவு செய்து மாகாண விவசாய திணைக்களத்திடம் கையளித்து வருகின்றன.

இந்தத் திட்டத்தில் மொத்தம் 60 ஆயிரம் புசல் விதை நெல் விநியோகிக்கப்படவுள்ளது.

அதேபோன்று மறுவயல் உற்பத்திகளான நிலக்கடலை, உழுந்து, கௌபி, பயறு ஆகிய விதைகளும் விவசாயிகளுக்கு வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் மொத்தம் 115 ஆயிரத்து 400 கிலோ விதைகள் விநியோகிக்கப் படவுள்ளன-என்றார் அவர். (த-7)

# சுண்டுக்குளி மகளிர் மாணவிகள் இருவர் இந்தியாவுக்குப் பயணம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

இந்தியாவில் உள்ள சங்கம் அமைப்பின் 45 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின்- பெண் சாரணியர் இருவர் மும்பை சென்றுள்ளனர்.



டனுசினி அனிஸ்ரா

இந்தியாவின் மும்பாய் நகரில் கடந்த 8 ஆம் திகதி முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை இந்தக் கொண்டாட்ட நிகழ்வு இடம் பெறுகின்றது.

பெண் சாரணியர்களின் வடக்கு மாகாண ஆணையாளர் திருமதி என். தர்மகுலசிங்கம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி துஸ்யந்தி ஆகியோரின் வழிகாட்டலில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளான அனிஸ்ரா தியோஜினஸ் றெஜிமன்ட், டனுசினி கிறிஸ்ரி ஜெயநாயகம் ஆகியோரே வடக்கு மாகாணத்தின் சார்பில் இந்த விழாவில் கலந்து கொள்ள மும்பாய் சென்றுள்ளனர். (த)

# அனைத்துப் பாடசாலைகளிலும் 14 ஆம் திகதி கல்வித் தர தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

சர்வதேச கல்வித்தர தினம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சகல பாடசாலைகளிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமெனக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளை உயர்ந்த தரமுடைய நிறுவனங்களாக ஆக்குவதற்காகவும், பாடசாலைக் கல்வியின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்காகவும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் விழிப்புணர்வூட்டுவதே இந்தத் தினத்தை அனுஷ்டிப்பதன் நோக்கமாகும் எனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினம் காலைப் பிரார்த்தனையின் போது ''தரமான சமுதாயத்துக்குத் தரமான கல்வி'' என்ற தொனிப் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்தல், பாடத்திட்டமிடல் தொடர்பாக ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வூட்டும் பிரயோக நிலையிலான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-38)

# விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்க பொதுச்சபைக் கூட்டம் சனியன்று

யாழ்ப்பாணம்,ஒக்.12

விவசாய உற்பத்திக்கு முக்கியமான உள்ளீடு தரமான விதையாகும். இந்த விதை உற்பத்தியில் ஈடுபட்டு வரும் யாழ் குடா விதை உற்பத்தி கூட்டுறவுச்சங்க (சீட்கோ) வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு சங்கத் தலைவரும் மாகாண விவசாயப்பணிப்பாளருமான எஸ்.சிவகுமார் தலைமையில் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் யூ.ஐ.எம். ஹால்டீன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக விவசாயப் பீடாதிபதி திருமதி சி.சிவச் சந்திரன், பிரதி விவசாயப்பணிப்பாளர் சி.சிறிபாலசுந்தரம், கமநலதிணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.மோகனேஸ்வரன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.சர்வேந்திரனன் ஆகியோரும் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினராக பிராந்திய இணைப்பாளர் சி. ஞானச்சந்திரன், உதவி விவசாயப்பணிப்பாளர் ச.சதீஸ்வரன், விவசாய அபிவிருத்திப் பொறுப்பதிகாரி ஆ.றமணிதரன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். இந்த நிகழ்வில் சங்கத்தின் உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-7)

# யாழ். மாவட்டத்தில் வீடமைப்புப் பணிக்கு ரூ.100 மில்லியனுக்கும் அதிகமான கடன்

## வீடமைப்பு அதிகார சபை வழங்குகிறது

யாழ்ப்பாணம், ஒக்.12

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தால் 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான கடன் இந்த வருடம் நீண்ட காலத் தவணை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட முகாமையாளர் ஜே.நோயல் ஜெயசந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

புதிய வீடு அமைப்பதற்கு அல்லது வீட்டைத் தரமுயர்த்துவதற்கு என்ற அடிப்படையில் இந்தக் கடன் வழங்கப்படுகின்றது. இவையனைத்தும் இந்த வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மக்களுக்கு வழங்கப்படும்.

அரச சேவை அல்லது நிரந்தர வருமானம் பெறும் 94 பேருக்கு 36.05 மில்லியன் ரூபா பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நாளாந்த வருமானம் பெறும் சாதாரண மக்கள் 187 பேருக்கு 26.725 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மேசன் மற்றும் தச்சுத் தொழில் செய்வோருக்கு வீடமைப்புக்கடனாக 37 பேருக்கு 4.8 மில்லியன் ரூபாவும் முதல் கட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக நிரந்தர வருமானம் பெறும் 117 பேருக்கு 46.55 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 435 பயனாளிகளுக்கு 114.125 மில்லியன் ரூபா நிதி இந்த வருடம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய வர்க்கக் குடும்பத்தினர் அதிகளவாகப் பயன்களைப் பெறுவர்- என்றார். (த-15)

# வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## நல்லூர் பிரதேச சபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.12

நல்லூர் பிரதேசத்தில் 11 வீதிகளின் திருத்தப் பணிகள் முடிவடைந்த பின்னர் மிகுதிப் பணத்திலேயே ஏனைய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளமையால் அதற்குப் பொதுமக்களின் பங்களிப்பு அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்த மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள பதினொரு வீதிகளின் புனரமைப்புப் பணிகள் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மீதியாக உள்ள நிதியை நாராயாணன் வீதி (500 மீற்றர்), நெட்டிலிப்பாய் வீதி (375 மீற்றர்), முனீஸ்வரன் வீதி (100 மீற்றர்), பாடசாலை வீதி, திருநெல்வேலி (600 மீற்றர்), கோட்டை விநாயகர் வீதி (600 மீற்றர்), முதலி கோயில் வீதி (1380 மீற்றர்), பழைய தபால் கந்தோர் வீதி (600 மீற்றர்) ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்யப் பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குமாறு பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் கேட்டுள்ளார். (த-7)

# கோழிப் பண்ணையில் பெரும் துர்நாற்றம்

தென்மராட்சி, ஒக்.12

வரணி- குடத்தனை வீதியில் செல்வோர் அங்குள்ள கோழிப் பண்ணை முடியும் வரை மூக்கைப் பொத்திக் கொண்டு செல்கின்றனர்.

அந்தப் பகுதியில் நடத்தப்படும் கோழிப் பண்ணையிலிருந்து வெளியேறும் துர்நாற்றம் பொதுமக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சுகாதாரச் சீர்கேடு தொடர்பாக அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் ஆகியோருக்கு முறையிட்டும் இதுவரை பயன் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

வரணியில் நீண்ட காலமாக இந்தப் பண்ணை நடத்தப்பட்டு வருவதாகவும் அண்மைக்காலமாக அங்கிருந்து வரும் துர்நாற்றம் சகிக்க முடியவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## கல்வி அறிவுக்காக...




வாசிப்பின் பயன்- தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை தனிமனித ஆளுமை தொடர்பான பயிற்சிப் பட்டறையைக் கோண்டாவில் பொது நூலகத்தில் கடந்த வாரம் நடத்தியது. இந்த நிகழ்வில் பொது நூலகர் செல்வி அனிதா கிருஷ்ணசாமி உரையாற்றுகிறார். பிரதேசசபைத்தலைவர் ப.வசந்தகுமார் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் அமர்ந்திருக்கின்றனர். (த-7)

# வாக்காளர் இடாப்பு பதிவுகள் இன்றுடன் நிறைவு

நவாலி, ஒக்.12

சாவற்கட்டு கிராமசேவையாளர் பிரிவு ஜே/131 பிரிவில் கபே அமைப்பால் மேற்கொள்ளப்படும் வாக்காளர் இடாப்புப் பதிவுகள் இன்றுடன் நிறைவடைகின்றன.

பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் மேற்படி கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு இன்று வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிராம சேவையாளர் வை.சந்திரராசா அறிவித்துள்ளார். (த-100)

# 'அரஸ்கோ' தொழிற்சாலையை கையளிக்க இராணுவம் இணக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.12

இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த தனியாருக்குச் சொந்தமான அரியாலையிலுள்ள 'அரஸ்கோ' தொழிற்சாலைக் கட்டடத்தை அதன் உரிமையாளரிடம் கையளிக்க இணங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முன்னர் சிறப்பாக இயங்கி வந்த தொழிற்சாலைகளில் அரஸ்கோவும் ஒன்று. வடபகுதியில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையால் 90 காலப்பகுதியில் இயங்க முடியாத நிலை காரணமாக அந்தத் தொழிற்சாலை செயலிழந்து போனது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் அது இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இராணுவம் இந்தத் தொழிற்சாலையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இந்த நிலையில் தொழிற்சாலையை மீள ஒப்படைக்குமாறு அதன் உரிமையாளர் பலமுறை பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பித்திருந்தார். கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அந்த தொழிற்சாலையை உரிமையாளரிடம் கையளிக்குமாறு இராணுவத்துக்குப் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருந்தது.

எனினும் தொழிற்சாலையை உரிமையாளரிடம் கையளிக்க இராணுவம் மறுத்து வந்தது. இதன் பின்னர் அதன் உரிமையாளர் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி, யாழ். அரச அதிபர் ஊடாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குத் தொழிற்சாலையை விடுக்குமாறு விண்ணப்பித்திருந்தார்.

இதனையடுத்து உரிமையாளரிடம் தொழிற்சாலைக் கட்டடத்தை கையளிக்க இராணுவம் இணங்கியுள்ளது. விரைவில் அது உரிமையாளரிடம் கையளிக்கப்படவுள்ளது. (த-14)

# தென்மராட்சியில் மேலும் இரு தவறணைகள்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் மேலும் இரு கள்ளுத் தவறணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த வேளையில் நிர்மூலமாக்கப்பட்ட மறவன் புலோ (கிளை இல.187) கனகன் புளியடி (195) ஆகிய கள்ளுத் தவறணைக் கட்டடங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் சங்கத் தலைவர் கி.பூபாலசிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டன. கனகன்புளியடி கிளை நவீன கள்ளுத் தவறணையாக இயக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு கிளைகளும் இதுவரை காலமும் அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைந்திருந்ததால் இந்த கிளைகளின் அங்கத்தவர்கள் நாவற்குழி, மற்றும் மட்டுவில் சரசாலை கிளைகளுடன் இணைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# வெட்டிய விறகையும் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பியது திருட்டுக் கும்பல்

சண்டிலிப்பாய், ஒக்.12

மாதகல் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத காணிகளிலுள்ள பயன்தரு மரங்களைத் திருட்டுத்தனமாக விறகுக்காக வெட்டிச் சென்ற கும்பல் ஒன்று பொதுமக்களிடம் மாட்டிக் கொண்டது.

இவர்களைச் சுற்றி வளைத்த பொது மக்கள் இது குறித்துப் பொலிஸாருக்கு அறிவிக்க முற்பட்ட போது விறகை மட்டுமல்ல தங்களுடைய சைக்கிள்களையும் கோடாரிகளையும் அந்த இடத்தில் போட்டு ஓடி மறைந்தது கும்பல். ஸ்தலத்துக்குச் சென்ற பொலிஸார் சைக்கிள்களையும் கோடாரிகளையும் கைப்பற்றிப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

வலி.தென்மேற்கில் மாதகல் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத 152 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குத் தந்திரமாகச் செல்லும் திருடர்கள் அங்குள்ள பயன்தருமரங்களை விறகுக்காக வெட்டி எடுத்துச் செல்வது வழக்கம்.

இவர்களின் நடவடிக்கை குறித்து அவதானமாகவிருந்த அந்தப் பகுதி மக்கள் சம்பவதினம் இவர்களின் வருகைக்காக மறைந்திருந்தனர். பல சைக்கிள்களில் விறகை ஏற்றி வந்த திருடர்கள் மறைந்திருந்தவர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

இவர்களைச் சுற்றி வளைத்த பொதுமக்கள் இது குறித்து இளவாலைப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் ஸ்தலத்துக்கு வர முன்பே தங்கள் சைக்கிள்களையும் கோடாரிகளையும் அந்த இடத்தில் போட்டு விட்டு ஓடி விட்டனர். அங்கு வந்த பொலிஸார் இவர்களின் சைக்கிள்களையும் கோடாரிகளையும் கைப்பற்றிச் சென்றனர். (த-115)

# நவீன தொழில்நுட்ப வளங்கள் அஞ்சல்துறைக்கு அவசியம்

## அஞ்சல் அத்தியட்சகர் ஜெபரட்ணம்

யாழ்ப்பாணம், ஒக்.12

அஞ்சல் துறையானது அரச ஏகோபித்த உரிமையைக் கொண்டுள்ள போதிலும் தனியார் நிறுவனங்களின் போட்டிகளுக்கு முகம் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு சில நவீன தொழில்நுட்ப வளங்கள் அவசியமாகிறது. அந்த வளங்களுடன் அஞ்சல் துறையை மேலும் விஸ்தரிக்கவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ஆ. ஜெபரட்ணம்.

137 ஆவது சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ். பிரதம தபால் திணைக்களத்தில் அஞ்சல் தின நிகழ்வு யாழ். பிரதி பிரதம தபால் அதிபர் ஐ.லோகஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

192 நாடுகள் அங்கம் வகிக்கும் சர்வதேச அஞ்சல் ஒன்றியம் மூலமாக ஒவ்வொரு நாட்டிலும் ஒக்ரோபர் 9 ஆம் திகதி சர்வதேச அஞ்சல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அஞ்சல்துறையின்வளர்ச்சிக்கு அதிகளவான போட்டிகளும் எதிர்பார்ப்புகளும் உண்டு. இருந்தாலும் அஞ்சல் துறை பல சவால்களுக்கு முகம் கொடுத்துச் செயற்பட்டு வருகிறது.

தொழில்நுட்ப வசதிகள், கைத்தொலைப்பேசி, இணையம் என விஸ்தரித்துச் சென்றாலும் தபால் சேவை முன்னிலை வகிக்கின்றது. நகர்ப்புற வாசிகள் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தினாலும் கிராமப்புற மக்கள் அதிகளவு அஞ்சல் துறையை, தபால் பொதிகளை நம்பியே உள்ளனர். உலகம் முழுவதும் 80 வீதமான மக்கள் தபால் மூலம்தான் தமது தொடர்புகளை ஆற்றி வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இனிவரும் காலங்களில் நவீன தொழில்நுட்ப வலைப்பின்னல்களினூடாக சேவையாற்றி மக்களின் தேவைகளைப் பூர்த்தியாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்- என்றார். (த-311)

# நிலத்தடி நீர் மாசடைவதால் புற்றுநோய் வாய்ப்பு அதிகம்

## எச்சரிக்கிறார் டாக்டர் துஷ்யந்தி

யாழ்ப்பாணம், ஒக்.12

யாழ். குடாநாட்டில் நிலத்தடி நீர் முற்றுமுழுதாக மாசுபட்டுள்ளது. இதனால் வலி. தெற்கு, வலி.கிழக்கு, வலி. வடக்கு மற்றும் நல்லூர் பகுதிகளில் வாழும் மக்கள் புற்றுநோயின் தாக்கத்துக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகம்.

இதற்கு முழுக்காரணம் நிலத்தடி நீரில் கலக்கும் நைதரசன். விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் அதிகரித்த உரப்பாவனையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி துஷ்யந்தி.

யாழ். குடாநாட்டின் நீர்வள முகாமைத்துவம் தொடர்பான விசேட மாநாடு நேற்று முன்தினம் யாழ். பொதுநூலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நிகழ்வைத் தொடங்கி வைத்து நீரின் அவசியம், எதிர்காலப் பயன்பாடு குறித்து விளக்கினார். நீர்வளச் சபையின் பொது முகாமையாளர் ஆர்.எஸ். விஜயசேகர வரவேற்புரையை வழங்கினார்.

இதில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக விவசாய பொறியியல்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன் மேலும் தெரிவிக்கையில்,

குடாநாட்டில் நைதரசனின் பயன்பாடு மிக அதிகமாக உள்ளது. விவசாயிகளின் விவசாய உற்பத்திக்கான உரப்பாவனை ஊடாக நைதரசன் நீரில் கலக்கிறது.

இதனால் வலி.கிழக்கு, வலி. தெற்கு, வடக்கு மற்றும் நல்லூர் பிரதேசங்களில் புற்று நோய் தாக்கம் அதிகளவில் உள்ளது ஆய்வுகளில் முடிவாகியுள்ளது.

குறிப்பாக ஒரு லீற்றர் நிலத்தடி தண்ணீரில் 10 மில்லிகிராம் நைதரசன் கலந்துள்ளது. இது மிகவும் ஆபத்தான விடயம். இதனை விட வேறொரு ஆய்வில் 44 கிணறுகளைக் குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஆய்வு செய்துள்ளேன்.

இதன் மூலமும் நிலத்தடி நீரில் நைதரசன் கலந்துள்ள வீதம் அதிகமாக உள்ளமை தெரிய வந்துள்ளது. -என்றார்.

இதில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:

குடாநாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் விவசாய செயற்பாடுகளாலும் மற்றும் மக்களின் செயற்பாடுகளாலும் நிலத்தடி நீர் மாசடைந்து வருகின்றது. குடாநாட்டில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நிலத்தடியில் நீர் பக்ரீரியாத் தாக்கத்துக்குட்படுத்தப்பட்டுள்ளது.

நிலத்தடி நீரானது அதிகளவில் பயன்படுத்தப்படுவதன் காரணமாக, நிலத்தடி நீரின் மட்டம் கீழிறங்கியுள்ளது. அத்துடன் அபிவிருத்திச் செயற்பாடுகள் காரணமாகவும் நீரின் தேவைப்பாடு அதிகரிக்கின்றது.

எனவே நிலத்தடி நீர் முகாமைத்துவத் திட்டத்தை அமுல்படுத்துவது இன்றியமையாததாகும். இதனால் இந்தப் பெறுமதியான வளத்தை உயர்த்துவது மிக முக்கியமானது. இதை அமுல்படுத்தாவிடின் எதிர்காலத்தில் பாரிய நீர்ப் பிரச்சினையை குடாநாடு எதிர்கொள்ள வேண்டியேற்படும். இதனால் நீர்முகாமைத்துவத் திட்டத்தை அமுல்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

தற்போது சாவகச்சேரி, யாழ் நகரம், நல்லூர், பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களில் தொடர்ச்சியாகக் கிணறுகளில் நீர் நிலைமட்டம் ஏற்ற இறக்கம், நீரின் நிறம் என்பனவற்றை அவதானித்து வருகிறோம் 2012 இல் யாழ். குடாநாடு முழுவதையும் உள்ளடக்கும் விதத்தில் நிலத்தடி நீர்க்கண்காணிப்புத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளோம்.

அடுத்து 200 லட்சம் ரூபா செலவில் மழை நீரை நிலத்தினுள் புகுத்தும் திட்டம் அதாவது இயற்கையாக வழிந்தோடுவதற்கு மேலதிகமாக இது செயற்படுத்தவிருக்கிறது. இது இன்னும் இரண்டு மாதங் களில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-15-302)

## இரத்ததானம்

தென்மராட்சி, ஒக்.12

சுகாதார அமைச்சின் தேசிய சுகாதார வாரத்தின் இறுதி நாளான கடந்த 9 ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பெருமளவு படையினரும் பொலிஸாரும் பொதுமக்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் நடமாடும் பிரிவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-207)

## வரணி வீதி புனரமைப்பு இல்லை

கொடிகாமம்,ஒக்.12

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ள வரணி அம்மா கடை வீதியின் வேலைகள் இதுவரை தொடங்கப்படவில்லை எனப் பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதன் ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதுவரை இந்த வீதிக்குக் கற்கள் பறிக்கப்பட்டுள்ள நிலையில் வேலைகள் தொடங்கப்படவில்லை என்றும், இந்த வீதியின் புனரமைப்பு வேலைகளில் மக்கள் பங்களிப்புக்கான வேலைகள் முடிவடைந்துள்ளதாகவும் புனரமைப்பு வேலைகள் தான் இதுவரை தொடங்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது.

மாரிகாலம் தொடங்கவுள்ள நிலையில் இந்த வீதியை உடனடியாகப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

.(த-122)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் விடுதிக் கட்டடப் பணிகள் பூர்த்தி

தென்மராட்சி, ஒக்.12

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கான மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தில் நான்கு வைத்திய அதிகாரிகளுக்கு வதிவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வதிவிடங்களுக்குத் தேவையான அனைத்துத் தளபாடங்களும் பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்பட்டுள்ளன.

சகல வசதிகளும் கொண்ட வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வதிவிடங்களில் அடுத்த வாரம் வைத்தியசாலை அத்தியட்சகர், பொது மருத்துவ நிபுணர் உட்பட ஏனைய வைத்திய அதிகாரிகள் குடியமரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-207)

## மாதகல் சம்பில்துறைக் கடலில் வான் தோண்டுமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக்.12

மாதகல் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் வசதி கருதி சம்பில் துறையிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்துக்கு வான் தோண்டித் தருமாறு மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். சுப்பிரமணியம் வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார்.

மாதகல் கடற் பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான மீனவர்கள் நாளாந்தம் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். சம்பில் துறையிலிருந்து தொழிலுக்குச் செல்லும் இவர்கள் கடற்பாதையின் அடியில் வளர்ந்திருக்கும் கற்களினாலும் மண் மேடுகளினாலும் வள்ளங்களை இலகுவாகக் கடலுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

போர்க் காலச் சூழ்நிலையால் இந்தப் பிரதேசத்தில் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் சம்பில் துறையிலிருந்து கடலுக்குச் செல்லும் வான் பல வருடங்களாக பராமரிக்கப்படவில்லை. இதனால் கற்கள் வளர்ந்து காணப்படுகின்றன.

எனவே கடற்றொழிலாளர்களின் நலன்கருதி சம்பில் துறையிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்துக்கு வான் தோண்டித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-115 )

## சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலாகும் பொலித்தீனைத் தடை செய்யுங்கள்

### அரசிடம் கோருகிறது வலி.தென்மேற்குப் பிரதேச சபை

சண்டிலிப்பாய், ஒக்.12

பொலித்தீன்பாவனைநாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதும் மட்டுமல்லாமல் டெங்கு போன்ற உயிர்க் கொல்லி நோய்களும் ஏற்படக் கூடிய வாய்ப்பும் அதிகமாகவுள்ளது.

எனவே நோய்களிலிருந்து முற்கூட்டியே மக்களைக் காப்பாற்றும் நோக்குடன் பொலித்தீன் பாவனையை அரசு முற்றாகத் தடை செய்ய முன்வர வேண்டுமென்று வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் அ.கணேசவேல் மேற்படி தீர்மானத்தைச் சமர்ப்பித்துப் பேசும் போது கூறியவை வருமாறு:

பொலித்தீன் பாவனை கட்டுப்பாடின்றி நாளுக்குநாள் அதிகாரித்து வருவதால் வீதியோரங்கள் மட்டுமல்ல வயல் நிலங்கள், மேய்ச்சல் தரைகள் போன்ற பரந்த நிலப்பரப்பை பொலித்தீன் பைகளும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களும் ஆக்கிரமித்துள்ளன. இந்த நிலையால் சுற்றுச் சூழலுக்கு மட்டுமல்ல கால்நடைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மழை காலங்களில் இவற்றில் மழை நீர் தேங்கி நின்று டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய வாய்ப்பும் இருக்கின்றது. எனவே மனித சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாகவிருக்கும் பொலித்தீன் பாவனையைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (த- 115)

## 'உயிர் காத்த மைந்தர்கள்' நான்கு பேருக்குக் கௌரவம்



யாழ்ப்பாணம், ஒக்.12

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் நால்வருக்கு 'உயிர் காத்த மைந்தர்கள்' விருது வழங்கிக் கௌரவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 2006 ஆம் ஆண்டு அல்லைப்பிட்டியில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது காயமடைந்த மக்களைத் துணிவுடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதில் இந்த நால்வரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். அத்துடன் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை ஊரங்கு நடைமுறையில் இருந்து சமயம் குடாநாட்டில் 24 மணித்தியாலமும் உயிர் காக்கும் சேவையில் இவர்கள் ஈடுபட்டனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் இளைஞர் இணைப்பாளர் தோ.ரமேஸ், சாரதிகளான எஸ்.சண்முகதாசன், ஜோதி, தொண்டர் திலிப்குமார் ஆகிய நால்வருமே இந்தக் கௌரவத்தைப் பெற்றுக் கொண்டவர்களாவர்.

இந்த நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்க ஆளுநர் சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-7)

# ஐரோப்பிய திரைப்பட விழா இம்முறை யாழ்ப்பாணத்திலும்

ஐரோப்பிய ஒன்றியப் பேராளர் குழு, கோத்தே நிறுவனம் பிரிட்டிஸ் கவுன்சில், அலயனஸ் பிரான்சே



Sniff the dog
*Snuf de Hond in Oorlogstijd*
Netherlands 2008
**இயக்குநர்: பரி ஸ்ரோன்**
**நேரம்: சனி.பி.ப.3.30**

டீ கோட்டே, பிரெஞ்சு, டச்சு, சுவிஸ், இத்தாலி மற்றும் நோர்வேத் தூதரகங்கள் அத்துடன் இலங்கையில் உள்ள போலந்து மற்றும் பெல்ஜிய துணைத்தூதரங்கள் ஆகியன ஐரோப்பிய திரைப்படவிழா 2011 யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதை அறிவித்துள்ளன.

இலங்கையில் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக இடம்பெறுவதுடன் இந்த ஆண்டு ஒழுங்



Fancy Rains
*Arumosam Vehi*
Sri Lanka 2002
**இயக்குநர்:பிரியந்த கொலம்பகே**
**நேரம்: வெள்ளி பி.ப 3.30**

கமைப்புக் குழுவுக்கு கோத்தே நிறுவனம் தலைமை வகிக்கின்றது. முதலில் இரு பகுதிகளாக திரைப்பட விழா பிரிக்கப்படும். முதற் கட்டமாக கொழும்பில் ஒக்ரோபர் ஒன்று முதல் 10 வரை திரையிடப்பட்டுள்ளது. இரண்டாம் பிரிவு சிறுவர் மற்றும் இளைஞர் சினிமாவை மையமாகக் கொண்டிருப்பதுடன்



The Illusionist
UK 2009
**இயக்குநர்: சில்வான் சோமே**
**நேரம்: ஞாயிறு மு.ப. 10.30**

கொழும்பில் திரையிடப்பட்ட பின் யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் மற்றும் காலியிலும் திரையிடப்



Princes and Princesses
*Princes et Princesses*
France 2000
**இயக்குநர்: மிசல் ஒசலோ**
**நேரம்: சனி மு.ப 10.30**

படும்.

இளம் சினிமா இரசிகர்களின் அக்கறைகள், ஆவல்கள் மற்றும் பிரச்சினைகள் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட வேறுபட்டதும் உயர்தரத்தினாலதுமான நிகழ்ச்சியை சிறுவர் மற்றும் இளைஞர் திரைப்படப் பிரிவு வழங்குகின்றது.

திரைப்படங்கள் எம்மை அறியப்படாத உலகங்



Raise Your Head
*Alza la testa*
Italy 2009
**இயக்குநர்: அலோசான்றோ அஞ்சலினி**
**நேரம்: ஞாயிறு பி.பி. 1.30**

களுக்குக் கொண்டு செல்கின்றன. அல்லது முற்றிலுமே பரிச்சயமான சூழல்களின் புதிய காட்சிகளை எமக்கு வழங்குகின்றன.

எமது வாழ்க்கையின் வழிகளிலும் எண்ணங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துடன் ஆயுள் காலம் முழுவதும் எம்முடன் சேர்ந்து வருகின்ற கலாசாரத்தின் அடிப்படையின் ஒரு பகுதியாக நீண்ட காலமாக இருந்து வருகின்றது. நட்புறவிலான உறவொன்றை முன்னேற்றுவதற்கும் ஐரோப்பிய தேசங்களுக்கும் இலங்கைக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வை அதிகரிப்பதற்கும் குறிக்கோள் கொண்ட ஒரு பகிர்ந்தளிக்கப்பட்ட சர்வதேச கலாசார அனுபவமே இந்த விழா



Vitus
Switzerland 2006
**இயக்குநர்: பிரெடி எம்.முறே**
**நேரம்: சனி.பி.ப.1.30**

வாகும்.

" Chandani The Daughter of the Elephant Whisper" என்ற விருதை வென்ற விளக்கப் படத்தை திரையிடுவதே இந்த வருட விழா நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இது தனது தந்தையைப் போன்று யானைப் பாகனாக வர விரும்பும் 16 வயதான இலங்கைப் பெண்ணின் கதையாகும். இது ஒக்ரோபர் 16 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூதுக் கலையகத்தில் மண்டபத்தில் திரையிடப்படும்.

யாழ்ப்பாணத்தில் இந்த விழா எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 16 வரை நடைபெறும். தினமும் படங்கள் திருமறைக் கலா மன்றத்தின் கலைத்தூதுக் கலையகத்தில் மண்டபத்தில் மு.ப.10.30, பி.ப. 1.30 மற்றும் பி.ப. 3.30 ஆகிய நேரங்களில் திரையிடப்



Chandani: The Daughter of the Elephant Whisperer
*Chandani und ihr Elefant*
Germany 2009
**இயக்குநர்: ஆர்னே பேக்கென்ஸ்ரொக**
**நேரம்: ஞாயிறு பி.ப.3.30**

படும். யாழில் விழா நிகழ்ச்சி மொத்தமாக 7 திரைப்படங்களை உள்ளடக்கியிருக்கும். சகல திரைப்படங்களுக்குமான அனுமதிகள் இலவசம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் (நவோதயா பாடசாலை)

*தரம்-ஐந்து 2011 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*


க.கவினா-191
மாவட்ட நிலை 2


தே.தீபிகா
178


கோ.அனுசன்
178


த.அசோகன்
171


நா.டிலக்ஸிகா
170


தே.ஜதுர்சன்
168


மு.ஜொகிஸ்
166


சி.கிதியோன்
162


க.லாவண்யா
160


அ.கோபிகன்
158


றொ.மேரி சண்ஷியா 155


ஜெ.விபுசனா
152


ஜெ.கஜவதனி
152

இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 52 மாணவர்களையும் இவர்களது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த எமது பாடசாலை அதிபர் வே. விநாயகமூர்த்தி மற்றும் ஆசிரியர்களான திருமதி செ.சின்னத்துரை, திருமதி சு.ஜெகநாதன், திருமதி ஜெ. ஜெனகன் அவர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த மாணவர்கள் மேலும் கல்வியில் சிறப்படைய எல்லாம் வல்ல வேம்படி விநாயகனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.


## மாற்றுத் திறனாளிகளுக்கு போட்டிகள்

சுன்னாகம்,ஒக்.12

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி வள நிலையத்தின் ஏற்பாட்டில் உலக மாற்றுத் திறனுடையோருக்கு போட்டிகள் இந்த வருடம் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

'வலு இழப்புடன் கூடிய நபர்களுடன் ஒன்றாக இணைந்து சாதகமான உலகைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் இந்தப் போட்டிகள் நடத்தப் பட உள்ளன.

கோட்ட,வலய மட்டங்களில் இந்தப் போட்டிகள் நடத்தப் படவுள்ளன. மூன்று பிரிவுகளாக கட்டுரை, பேச்சு,தனி இசை, குழு இசை, தனி நடனம், குழு நடனம் ஆகிய போட்டிகள் இடம் பெறவுள்ளன. அதுடன் வில்லுப்பாட்டு, நாடகம்ஆ கியன திறந்த போட்டிகளாக நடத்தப் படவுள்ளன.

(வ-38)


## மனோதத்துவ வைத்தியம்

*(General Psychotheraphy)*
*பிரபல மனோதத்துவ நிபுணர்*

**Dr. P. ஆறுமுகம்**

T.P-0719315664,0777569205

**மீண்டும் யாழில்**

17.10.2011 வரை மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா 300/=

ஆரம்பநிலை மனநோயை விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்த வித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

**கமால் ரூறிஸ்ற் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)**
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில், 392, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



*மன்/தலை மன்னார் பியர் அ.த.க பாடசாலை*
*அதிபர்*
**செ. செல்வரஞ்சன்** (J.P)
(S.L.P.S)

அவர்கள் மன்னார் கல்வி வலயத்தில் சிறந்த அதிபராக (300-1000 பிள்ளைகள்) தேர்வு செய்யப்பட்டு சர்வதேச ஆசிரியர் தினமான (06.10.2011) அலரிமாளிகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பாராட்டினையும் ''பிரதீபா பிரபா'' விருதினையும் பெற்று கௌரவிக்கப்பட்டமைக்காகவும், தலை மன்னாரில் 25 வருடமாக சேவையாற்றி வெள்ளிவிழா காண்பதனையும் சிறப்பித்து வெள்ளிவிழா நாயகனை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் இதே பாடசாலையின் ஆசிரியை
செல்வி **யேசுதாசன் டிலானி**
சிறந்த ஆசிரியராக தெரிவுசெய்யப்பட்டு ''பிரதீபா பிரபா'' விருதினைப் பெற்றுக்கொண்டமையையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**தலைமன்னார் பியர் அ.த.க பாடசாலை**
**ஆசிரியர்கள், மாணவர்கள்.**

# என்னத்தைச்...
# ...சொல்ல?!

### காணியைப் பிரிந்து விட்டீர்களா?

இன்று பிரக்கிராசிமார் வீட்டில இரவு பகல் என்று இல்லாமல், ஒரே தொலைபேசி மணி அடித்தபடியே இருக்குது. ''அற்றோணிப் பவர்'' அடிப்பதில இப்ப பிரக்கிராசி, நொத்தாரிசுமாருக்குப் பிழைப்பு அமோகம். ஏனிந்த மணி இப்படி அடிக்குதென்றால், எல்லாம் சுயநலம் தான். பிறநாட்டுக்காறரின் காணி பூமிகளைப் பதியச் சொல்லி இங்கே ஒரே பரபரப்பு. சில கிழடுகள் பிளேன் ஏறி வந்து துடியாய்த் துடிக்கினம்.

என்ரை காணி, உன்ரை காணி, எங்கோ கிடக்குதென்று பூட்டன், பூட்டி கூட காணிக் கந்தோரில காவல் இருக்குதுகள். பகல் பத்து மணிமுதல் பின்னேரம் மூன்று மணிவரை காணிக்கந்தோரில, காணி தேடும் படலம் ஓயாது நடக்குது.

இலண்டனால, கனடாவால வந்தவை, கால்முகம் கழுவாமல், மாட்டிய சட்டையோடு, உறுதிதேடி அலையுதுகள். ''பத்துக்காணி'' உறுதி இருக்குதையா, எங்கடை காணியைக் கண்டு பிடியுங்கோ. இப்படிக் கெஞ்சாமல் கெஞ்சுதுகள்.

நாங்கள் வெள்ளைக் கொடி பிடித்து பொங்குதமிழ் புக்கை பொங்கியது குற்றமோ? என்று கேட்பாரு முண்டு.

காணி, பூமியை, உறுதிக்கட்டைக் காவிக் கொண்டே ஓடிப்போனோம் என்று கொழும்புக் கோஷ்டிகளும் உறுதிதேடித் திரியினம்.

மெத்தப் படித்த கொழும்பு அப்புக்காத்து, இது மனித உரிமை மீறல் விட்டுக் கொடுக்க வேண்டாம் என்று முழங்குகிறார்.

போன சித்திரையில் தன்ரை காணியை வித்துப் போட்டு தெகிவளையில வீடு வாங்கினவர் தான் இந்தப் பிரக்கிராசி. போன நல்லூர் திருவிழாவுக்கை 3 பரப்புக் காணியை புருசனை இழந்த விதவைகளுக்கு எழுதிவிடன் என்று கேட்க, பொங்கி எழுந்த கனகம்மா தான் இப்ப ஆட்சி உறுதி எழுதி ஐயனார் கோவிலுக்குக் கொடு என்று, அற்றோணித் தத்துவம் அனுப்புகிறா. ''நாலு பிள்ளைகளோடு நடுத்தெருவில நிற்குது நல்லம்மா என்று கனகம்மா இரங்கவில்லை. இவளவையின்ரை காணியைப் பறிக்கத் தான் வேணும் என்கிறார் கடைக்காரக் கதிரித் தம்பி. இவர் கனகம்மாவின் கட்டிய புருசனின் தம்பி.

'' தெருவோரம் கிடக்கின்ற சொறிநாய்களைக் கொல்லக்கூடாது'' என்ற மகிந்தரின் சிந்தனையில் தமிழற்றை காணிகளுக்கு தடம் போடும் திட்டம் விசித்திரமானது. உதுக்கிளை கனசங்கதிகள் உள்ளடக்கம் என்கிறார் உருத்திராபதி. இவர் முந்திக் காணிக்கந்தோர் ஓ.ஏ. ஆகக் கடமை பார்த்தவர். குறி சுடாத மாடெல்லாம், அரசாங்க மாடு என்று கருதுவதாக முன்பு பறையடித்து வன்னியிலை குறிசுட்ட காலம் ஒன்று உண்டு. இப்போ, உரிமைக்கு உறுதி காட்டாத காணி பூமி அரசுக்கு சொந்தமென்று அறிவித்தல் வரப்போகுது. இதைக் கேட்ட சின்னத் தங்கம் அக்கா, இக்கணம், முடியாத குமரெல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தம் என்றும் சொல்லுவினம் போலை கிடக்குது என்கிறா!.

சின்னத்தங்கம் அக்கா இப்பத்தைய எம்.பி மாரில எரிஞ்சு விழுகிறா. மெத்தப்படிச்ச இந்த எம்.பி மார் ஏனப்பா இஞ்ச வந்து கூட்டம் போட்டு, (சாத்வீகமாக) ஒரு பொழுதும், ஒருபோதும் பதிய விடமாட்டோம் என்று முழங்கலாமே என்று தனித் தவில் அடிக்கிறா அவ. இது ஒரு நியாயமான திட்டம் போலைத்தான் எனக்கும் படுகிது... !

பிரசண்டன்

# கண்டி, நுவரெலியா தோல்விக்கு ரணில் காரணம் கூறவேண்டும்

## ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க கூறுகின்றார்

கொழும்பு,ஒக்.12

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டைகள் என்று கூறப்படும் கண்டி, நுவரெலியா மாநகர சபைகளை ஐ.தே.க. இம்முறை பறிகொடுத்துள்ளது. எமது கட்சியின் ஆதிக்கம் பல வருடங்களாகத் தொடர்ந்த இந்தச் சபைகளில் தோல்வி ஏற்பட்டதற்கான காரணத்தை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தியே ஆகவேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள், கட்சியின் தற்போதைய நிலைவரம் என்பன தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

கொழும்பு மாநகரசபையை நாம் கைப்பற்றுவது என்பது வழமையானதொரு விடயம். அது அனைவருக்கும் தெரியும்.

இதனை உணர்ந்துதான் அரசு ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து சிலரைப் பிரித்தெடுத்தது. கட்சியிலிருந்து பல்டியடித்தவர்களை மேயர் வேட்பாளராகக் களமிறக்கியது.

கொழும்பு மாநகரசபையை மட்டும் கைப்பற்றியதாக நாம் திருப்தியடைய முடியாது. ஏனெனில், எமது பிரதான இரண்டு கோட்டைகளான கண்டி மாநகர சபை, நுவரெலியா மாநகரசபை ஆகியவற்றை இழந்துள்ளோம். இது கட்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தால் எமக்கு வெற்றி வாய்ப்பு இன்னும் அதிகரித்திருக்கும்.

எமது ஆலோசனைகளைப் புறக்கணித்த கட்சித் தலைவர் தோல்விக்கான காரணத்தைத் தெளிவுபடுத்தியே ஆகவேண்டும்.

கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்றியதன் மூலம் கட்சிக்குள் நிலவிய அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டதாக சிலர் நினைக்கின்றனர். இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. கட்சி தலைமைத்துவத்துள் மாற்றம் அவசியம் என்பதே எமது குழுவின் நிலைப்பாடு. அதற்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம் - என்றார். (ச-சி)

# வரட்சிநிலை விரைவில் நீங்கும்

கொழும்பு, ஒக்.12

பருவமழை பெய்யக்கூடிய சாத்தியங்கள் வாயுமண்டலத்தில் படிப்படியாக அதிகரித்து வருவதால் தற்போது நிலவும் வரட்சிநிலை விரைவில் நீங்கிவிடும் என்று வானிலை அவதான நிலையத்தின் பேச்சாளர் சமிந்த டீ.சில்வா தெரிவித்துள்ளார்.

மாலையில் நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பொழியும் வாய்ப்புகள் உள்ளன. கடந்த சில மாதங்களாக வரண்டுபோய்க் கிடந்த பொலநறுவை, கவுடுல்ல, ஹிராந்துருகோட்டே போன்ற பகுதிகளில் கணிசமான மழை பெய்துள்ளதால் வரட்சி நிலை ஓரளவு நீங்கியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். கவுடுல்ல பிரதேசத்தில் 70.5 மில்லி மீற்றர், பொலநறுவையில் 50 மி. மீ. ஹிராந்துருகோட்டேயில் 48 மி. மீ. மழை பெய்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் நாட்டின் சில பாகங்களில் பனிக்கட்டியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பும் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தின் சர்வதேச ஆசிரியர் தின விழா சங்கத்தின் சிரேஷ்ட துணைத்தலைவர் திருமதி மகேந்திரா தலைமையில் கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்களைக் காணலாம். (25)

# கொழும்பு மாநகர சபையை அதிகார சபையாக்கும் திட்டத்தை ஐ.தே.க. தடுத்து நிறுத்தும் என்கிறார் ரணில்

கொழும்பு,ஒக்.12

கொழும்பு மாநகர சபையை ஓர் அதிகார சபையாக மாற்றும் திட்டத்தை ஐ.தே.க. வெற்றிகரமாக தடுத்து நிறுத்தும் என்று அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பு நகரை அபிவிருத்தி செய்வதற்காக அதை கொழும்பு மாநகர அதிகார சபையாக மாற்றும் தனது திட்டத்தை அரசு முன்னெடுத்துச் செல்லும் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறியமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: குறைந்த வருமானம் பெறுவோரின் வீடுகளை இடிப்பதை நாம் தடுத்து நிறுத்தியதைப் போன்று கொழும்பு மாநகர அதிகார சபைத் திட்டத்தையும் நாம் தடுத்து நிறுத்துவோம். கொழும்பில் தோல்வியைத் தழுவிய பின்னரும் அரச தரப்பினர் எப்படி இவ்வாறு பேசலாம் - என்றார். (ச-சி)

# முஸம்மிலை ஐ.தே.க நிறுத்தியதால் மு.காவின் வாக்கு வீதம் சரிந்தது

## அமைச்சர் டலஸ் கூறுகிறார்

கொழும்பு நகர் முஸ்லிம், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவே முஸம்மிலை மேயர் வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி முன்னிறுத்தியது. முஸ்லிம் மக்களும் முஸம்மிலை ஏற்றுள்ளனர். இதன் காரணமாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்குகள் உடைந்தன

- இவ்வாறு அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

கொழும்பு மாநகரசபைக்கு முஸ்லிம் ஒருவரே மேயராகத் தெரிவாகவேண்டும் என்பதை முன்னிறுத்தியும், வீடுகள் உடைப்பு, சந்தைகளை இடமாற்றுதல் உள்ளிட்ட விடயங்களைத் தேர்தலில் முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டது. அத்துடன், கொழும்பு வாழ் முஸ்லிம் மக்களதும், தமிழ் மக்களதும் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த மக்கள் மத்தியில் முஸம்மிலை ஐக்கிய தேசியக் கட்சி சந்தைப்படுத்தியது.

முஸ்லிம் மக்களும் முஸம்மிலை ஏற்றுக்கொண்டனர். கடந்த 2002ஆம் ஆண்டுத் தேர்தலில் கொழும்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 11.6 சதவீத வாக்குகளைப் பெற்றது. இந்தநிலையில், இம்முறை அந்த வாக்கு வீதம் 2 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

கொழும்பில் 60 சதவீதமான தமிழ் வாக்காளர்களும், 40 சதவீதமான சிங்களவர்களும் உள்ளனர். இந்தநிலையில், மிலிந்த மொறகொடவை மேயர் வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

எனினும், இதில் ஜனாதிபதி தலையிட்டு இன, வேறுபாடு பார்க்காமல் மொறகொடவை களமிறக்குமாறு கூறினார். அதன் படி அவரை களமிறக்கினோம். நீதியான தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டோம்.-என்றார். (ச-சி)

# தமிழ் இலக்கிய விழா மன்னாரில் 14,15 ஆம் திகதிகளில் நடைபெறும்

மன்னார், ஒக்.12

வடமாகாணத் தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலாளரும் அரச அதிபருமான என். வேதநாயகன் தெரிவித்தார்.

கடந்த 7, 8ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த வட மாகாணத் தமிழ் இலக்கிய விழா பிற்போடப்பட்டிருந்த நிலையில் தற்போது இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பாக மீளாய்வுக் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது நிறுத்தி வைக்கப்பட்ட வட மாகாணத் தமிழ் இலக்கிய



விழாவை எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இன்று புதன்கிழமை நிகழ்வுகளை ஒத்திகை பார்ப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் அரச அதிபர் என்.வேதநாயகன், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், கலைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-601)

# இன விகிதாசார அடிப்படையிலேயே வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம்

## செல்வம் எம்.பி.வற்புறுத்துகிறார்

மன்னார், ஒக்.12

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் இன விகிதாசார அடிப்படையிலேயே இடம்பெறவேண்டும்.

இவ்வாறு வற்புறுத்திக் கூறியுள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக் கலநாதன்.

தற்போது மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளராகப் புதியவர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் நிலையிலேயே செல்வம் அடைக்கலநாதனின் இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

தமது கோரிக்கையின் பிரகாரம் இனவிகிதாசார அடிப்படையில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் இடம்பெறாதுவிடின் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(க-601)

# துணுக்காய் அ.த.க.பாடசாலையில் சிறப்பான ஆசிரியர் தின நிகழ்வுகள்

துணுக்காய், ஒக்.12

துணுக்காய் அ.த.க.பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

கடந்த ஆறாம் திகதி முற்பகல் 11 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி த.இரத்தினகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வுக்கு முன்னதாக பாடசாலையின் ஆசிரியர்கள் 21 பேரும் மாணவர்களால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பாடசாலை வளாகத்தினுள் அழைத்து வரப்பட்டனர். பின்னர் நிகழ்வுகள் ஒன்று கூடும் மண்டபத்தில் ஆரம்பமாகின.

சிரேஷ்ட மாணவத் தலைவன் வி.தனுசன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

பின்னர் அரங்க நிகழ்வாகக் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் ஆசிரியர்களின் சிறப்புப் பட்டிமன்றம், கலைநிகழ்வுகள் என்பன சிறப்பாக இடம்பெற்றன.

மேலும் கல்விளான் பாடசாலை, மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகாவித்தியாலயம், அனிஞ்சியன்குளம் பாடசாலை ஆகியவற்றிலும் வாணிவிழாவும் ஆசிரியர் தின நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாக நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-415)

# பத்தினியார் மகிழங்குளத்தை மண்ணிட்டு மேடாக்கும் முயற்சி

வவுனியா, ஒக்.12

வவுனியா, பத்தினியார் மகிழங்குளத்தினுள் வீடுகளை அமைக்கும் நோக்குடன் தனியார் சிலர் மண்ணை இட்டு நிரப்பி வருவதாக இந்தப் பகுதியைச் சேர்ந்த கமக்கார அமைப்புகளும் பொதுமக்களும் புகார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 150 ஏக்கர் வயல் நிலத்தை உள்ளடக்கிய பத்தினியார் மகிழங்குளம் பல விவசாயிகளின் பொருளாதாரத்துக்குப் பேருதவி புரிந்து வருகின்றது. இந்தக் குளத்துக்குப் பட்டைக்காடு, வைரவபுளியங்குளம் ஆகிய குளங்களிலிருந்து நீர் கிடைக்கின்றது. தற்போது வரட்சி காரணமாகக் குளத்தின் நீர்வற்றிய நிலையில் சிலர் வீடுகளை அமைப்பதற்காக மண்ணை இட்டு மேடாக்கி வருகின்றனர். இதனால் குளத்தின் நீரேந்தும் பிரதேசத்தின் அளவு குறைந்து வருகின்றது. இதனால் தாம் விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலை தோன்றுமென விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இது குறித்துக் கமநல கேந்திர நிலையத்திலும் வவுனியா மாவட்டச் செயலாளரிடமும் தாம் முறையிட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இந்தக்குளத்தை அழகுபடுத்தும் திட்டம் என்ற பெயரில் மண்ணிட்டு நிரப்பியுள்ளமையால் அந்தப் பகுதி வாகனத் தரிப்பிடமாக மாறியுள்ளதாகவும் சிலரின் தொழில் நிலையங்களாகக் காணப்படுவதாகவும் சமூக மாற்றத்துக்கான மக்கள் பேரவையினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க)

# குளங்களின் வாய்க்கால்கள் பராமரிப்பு

அக்கராயன், ஒக்.12

குளங்களின் வாய்க்கால்களைப் பராமரிப்பது விவ்சாயிகளின் முக்கிய பணியாகும் எனத் தெரிவித்துள்ளார் அக்கராயன் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.கதிர்காமநாதன்.

அக்கராயன் ஆரோக்கியபுரம் கிராமத்தில் உள்ள பாலங்குளத்தின் கீழான வாய்க்கால்களைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் தொடக்க நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீர்முகாமைத்துவ வாரத்தை முன்னிட்டு ஒவ்வொரு கமநல சேவை நிலையப்பிரிவிலும் உள்ள சிறிய குளங்களின் கால்வாய்கள் துப்புரவு செய்யப்படுகின்றன.

இதனடிப்படையில் பாலங்குளத்தின் வாய்க்கால்களைத் துப்புரவு செய்யும் பணி இன்று ஆரம்பமாகின்றது. குளங்களின் வாய்க்கால்களைத் துப்புரவாக வைத்திருப்பதற்குக் கமக்கார அமைப்புகள் மற்றும் விவசாயிகள் தொடர்பங்களிப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (410)

# பஸ் புறப்படும் நேரத்தை மாற்றக் கோரிக்கை

அக்கராயன், ஒக்.12

யாழ்.நகரிலிருந்து காலை 6.30 மணிக்கு பூநகரி வழியாக அக்கராயன் செல்லும் அரச பஸ்ஸை 6மணிக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அக்கராயன் பாடசாலைகளுக்குத் தினமும் பணிக்குச் செல்லும் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காலை 6.30 மணிக்குப் புறப்படும் பஸ் அக்கராயனை 9 மணிக்குப் பின்னரே வந்தடைகின்றது.

அரைமணி நேரம் முன்னதாகப் பஸ் புறப்பட்டு காலை 8.30 மணிக்கு அக்கராயனை வந்தடைய முடியுமெனவும் ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டது.

பஸ் காலை 6 மணிக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்கு ஆசிரியர்கள் முன்பு ஒருமுறை வேண்டுகோள் விடுத்தபோதிலும் பயன் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-410)

# அக்கராயனில் இரு நிகழ்வுகள்

அக்கராயன், ஒக்.12

அக்கராயன் மகாவித்தியாலயத்தில் வாணிவிழா, ஆசிரியர் தின நிகழ்வு என்பன சிறப்பாக நடைபெற்றுள்ளன.

வாணிவிழாவையொட்டி பாடசாலையின் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதேவேளை ஆசிரியர் தின நிகழ்வின் போது மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து கௌரவித்தனர். ஆசிரியர்களும் மாணவர்களுக்குத் தமது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். (க-410)

# பொது மண்டபம்

அக்கராயன், ஒக்.12

ஆரோக்கியபுரம் கிராமத்தில் பொது மண்டபம் அமைக்கும் பணிகளில் பெரும் பகுதிக் கட்டட வேலைகள் நிறைவடைந்துள்ளதாக ஆரோக்கியபுரம் கிராமிய அபிவிருத்தி அமைப்பின் தலைவர் பா.கதிரேசன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொதுமண்டப வேலைகள் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 14 லட்சம் ரூபா செலவில் இடம்பெற்று வருகின்றன.

கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும் பொதுமண்டபம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும் கிராம மக்களின் சகல செயற்பாடுகளுக்கும் இந்தப் பொது மண்டபம் பேருதவியாக இருக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

(க-410)

# சிறு குற்றங்கள் புரிந்தவர்களுக்கு சமுதாய சீர்திருத்தச் சேவை

சிறு குற்றங்கள் புரிந்து நீதிமன்றங்களால் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்கள் சிறைக்குச் செல்லாமல் சமுதாய சீர்த்திருத்தச் சேவையாற்றுவது சிறைக்குப் பதிலான மாற்றுத் தண்டனை முறையாகும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தைச் சேர்ந்த சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தரான மு.அ.முகமது அனஸ்.

சிறு குற்றம் ஒன்றைச் செய்த காரணத்தால் நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட ஒருவர் தண்டப்பணம் செலுத்த வேண்டும் அல்லது சிறைக்குச் செல்ல வேண்டும். இதற்கு மாற்று வழியாக சமுதாய சீர்திருத்த சேவை சிறைக்குப் பதிலான மாற்று தண்டனை முறையாகும். இந்தப் பிரிவானது இரண்டு வருடத்துக்கு உட்பட்ட சிறைத்தண்டனை பெறுபவர்களை அனுமதிக்கின்றது.

இந்தத் திணைக்களத்தின் பிரதான நோக்கம் சிறைச்சாலைகளில் காணப்படும் அதிக இட நெருக்கடியை குறைத்தல் ஆகும். மேலும் கைதிகளுக்குச் செலவு செய்யப்படும் பணமும் குறைவடையும். இதனால் அரசின் பராமரிப்புச் செலவும் குறைவடையும். ஆண் கைதிகளாயின் குடும்பத்துக்கு உழைப்பதற்கு எவரும் இன்றிக் குடும்பம் சீரழியும். பெண்கள் சிறைக்குச் செல்வதால் குடும்பப் பராமரிப்பு உட்பட வீட்டின் சகல நடவடிக்கைகளும் செயலிழந்துவிடும். இன்னொருபுறம் அன்றாட செலவுக்கு வருமானமின்றிப் பெண்கள் தவறான வழிகளில் வருமானத்தை உழைக்க நேரிடும். பிள்ளைகள் பராமரிப்பு இன்றி தீயபழக்க வழக்கங்களைப் பழகுவதால் முழுக் குடும்பமே சீரழிய நேரிடும். சிறு குற்றவாளியான ஒருவன் சிறைக்குச் செல்வதால் சிறைச்சாலையில் உள்ள பெரிய குற்றவாளிகளுடன் பழகித் தீய பழக்க வழக்கங்களைப் பழகவும் சிறைவாசத்தின் பின் பெரிய குற்றங்களைச் செய்யவும் அதிக வாய்ப்பு உண்டு. அதனைக் கருத்தில் கொண்டே சமுதாய சீர்திருத்தத் திணைக்களம் உருவாக்கப்பட்டது.

எனவே சிறு குற்றவாளிகளைச் சிறைச்சாலைக்கு அனுப்பாமல் சமூகத்தினுள் வைத்து குற்றவாளிகளைச் சிறைச்சாலைகளில் செய்கின்ற அதே சேவையைப் பொது இடங்களில் செய்கின்ற அதேநேரம், அவர்கள் மீண்டும் குற்றங்களைச் செய்யாமல் ஆலோசனைகளும் வழங்கப்படுவதுடன் தேவை ஏற்படின் முறைசாராக் கல்வியை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் போதைவஸ்துப் பாவனையாளர்களுக்கு நிவாரணத் திட்டமும் வழங்கப்படும். மேற்கூறப்பட்ட நடவடிக்கை ஊடாகக் குற்றவாளிகளை சமூகத்தில் சீர் திருத்தப்பட்ட ஒரு சிறந்த நற்பிரஜையாக மாற அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது. சமுதாய சீர்திருத்தப் பிரிவானது பின்வரும் சேவைகளை மேற்கொள்கின்றது. அதாவது: சமுதாய சேவை, சமுதாய சீர்திருத்தம், மருத்துவ நிவாரணம், தொழிற்பயிற்சி, முறைசாராக் கல்வி என்பனவே அவையாகும்.

இந்தச் சேவைகள் மூலம் சமுதாயச் சீர்திருத்தத்துக்கு உட்படுபவர்களை ஒரு நிலைமைக்குக் கொண்டுவர முடிகின்றது. இதனால் குற்றவாளிகள் சமூகத்தில் சிறந்த ஒரு பிரஜையாக மாறுவதற்கு அதிக வாய்ப்புண்டு.

இது குற்றவாளிகள் வீட்டில் இருந்து கொண்டேபெறும் தண்டனை முறையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-601)

# பல்வேறு தடைகளைத் தாண்டியே மன்னார் நகரசபையின் செயற்பாடுகள்

## நகரசபை உறுப்பினர் குமரேஸ் ஆதங்கம்

மன்னார், ஒக்.12

பல தடைகளையும் இடையூறுகளையும் தாண்டியே மன்னார் நகரசபை தனது சேவைகளை மக்களுக்கு ஆற்ற வேண்டியுள்ளது இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் நகரசபை உறுப்பினர் இ.குமரேஸ்.

அண்மையில் மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட கீரி என்னும் இடத்தில் மன்னார் நகரசபைத் தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் பொது மக்களுடன் நிகழ்த்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கீரி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மன்னார் நகரசபைத் தலைவர் ஞானப்பிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் மற்றும் உறுப்பினர்கள் மன்னார் நகரசபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளை மக்களுக்கு எடுத்துக் கூறினர்.

அதன்போது மன்னார் நகரசபை உறுப்பினர் குமரேஸ் மேலும் கூறியதாவது:

மக்களின் நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலித்து அவற்றை எம்மால் முடிந்தவரை தலைவரின் வழிகாட்டுதலோடு நிறைவேற்றுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஆயினும் சிறு சிறு விடயங்களை முன்னெடுப்பதற்குக்கூட எமக்குப் பெரியளவில் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

பொதுச் சேமக்காலையைப் புனரமைத்தல், உள்ளக வீதிகளைத் திருத்துதல், தெருவிளக்குப் போடுதல், சீரான முறையில் குப்பைகளை அகற்றுதல் போன்ற பணிகளை முன்னெடுத்து வருவதுடன், சிறுவர் பூங்கா, பொழுதுபோக்குப் பூங்கா, மணிக்கூட்டுக் கோபுரம் அமைத்தல், கடைத் தொகுதிகளை நிர்மாணித்தல், மாரிக்காலத்திற்கு முன்பாக வடிகால்களையும் ஓடைகளையும் சீர்செய்தல் போன்ற பல்வேறு திட்டங்களை எம்மால் முடிந்தளவுக்கு முன்னெடுத்து வருகின்றோம். இத்தகைய வேலைத் திட்டங்களை நிறைவேற்ற நகர சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் இவற்றை நிறைவேற்றுவதில் தடைகள் தோன்றியுள்ளன.

உதாரணமாக பொழுது போக்குப் பூங்கா அமைப்பதற்கென்று மன் னார்ப் பாலத்தின் கீழுள்ள பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான பணிகளை முன்னெடுக்க முயலும்போது, இந்த இடம் வனவிலங்கு சரணாலயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்புப் பலகை போடப்பட்டுள்ளது.

நகரின் மையப்பகுதியில் வனவிலங்கு சரணாலயம் அமைவதை வேறெங்கும் காணமுடியாது. இந்த விடயம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. இன்னமும் தீர்வு காணப்படாமலேயே இந்தத்திட்டம் இடைநிறுத் தப்பட்டுள்ளது. அதே போன்று பொதுச் சவக்காலையில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது சில தனிநபர்கள் அந்த இடம் தமக்குச் சொந்தமானது என்று முன்னுக்குப்பின் முரணான தகவல்களைத் தருகின்றனர். இவ்வளவு தடைகளுக்கும் மத்தியில்தான் எமது தலைவர் அபிவிருத்திப் பணிகளை மேற் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றார். அவருக்கு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோர் முழு ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இப்பொழுது நகரசபையின் எல்லைக்குட்பட்ட வீதிகளில் தெருவிளக்குகள் பொருத்தும் பணியினை மேற்கொண்டுள்ளோம். இதற்காகச் சுமார் 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் 400 வீதி விளக்குகளைப் பொருத்தி வருகின்றோம்.

பல தடைகளை மீறி நாங்கள் எமது மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது மக்கள் எமக்கு வெறுமனே தெருவிளக்குப் போடுவதற்கும், சாலைகளைப் புனரமைப்பதற்கும் மட்டும் வாக்களிக்கவில்லை என்பதனை நன்குணர்ந்து எமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தடைகளையும் தாண்டி அபிவிருத்திப் பணிகளுடன் அரசியல் தீர்வுக்காகவும் முனைந்து செயற்பட்டு வருகின்றோம். எம்மால் முடிந்த அனைத்துப் பணிகளையும் நாம் செய்து வருவதுடன் எதிர்காலத்திலும் எத்தகைய தடைகள் வந்தாலும் அவைகளைத் துணிவுடன் முகங்கொடுப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். தேவை ஏற்பட்டால் எமது மக்களை அணிதிரட்டி நகரசபையின் செயற்பாடுகளுக்கு எதிராக சதி செய்பவர்களுக்கு எதிராகப் போராடவும் நாம் தயங்கமாட்டோம் என்பதனையும் இத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று அவர் மேலும் கூறினார்.(க-601)

# சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் கூட்டம்

வவுனியா, ஒக்.12

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் செயற்படும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் மற்றும் சட்ட உதவிகளை வழங்கும் நிறுவனங்களை ஒன்றிணைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இடம் பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடல் சேவாலங்கா மன்றத்தின் வவுனியா அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

கிராமிய ரீதியில் சட்டம் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் மக்களுக்குரிய சட்ட உதவிகளை வழங்குவதற்கும் இத்தகைய நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியம் தொடர்பாக இங்கு பலரும் எடுத்துக் கூறினர்.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய அறிவரசன் தமதுரையின்போது கருத்துத் தெரிவிக்கையில்:

வவுனியா மாவட்டத்திலுள்ள சமூக உள நலப் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. இதைப்போன்றே வேறு சில நிறுவனங்களும் ஒன்றிணைந்து சேவையாற்றுகின்றன.

ஆகவே, சட்ட ஆவணங்கள் மற்றும் சட்ட உதவிகளைப்பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயலாற்றுவதன் மூலம் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க முடியுமென்று கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் சேவா லங்கா மற்றும் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, மனித உரிமைகள் இல்லம், டெனிஸ் அகதிகள் பேரவை என்பன கலந்துகொண்டன. (க)

# செட்டிகுளம் முகாம்களில் வசிக்கும் மக்கள் கோம்பாவில் முகாமில் மீள்குடியமர்த்தப்படுவர்

முள்ளியவளை, ஒக்.12

செட்டிகுளம் பகுதியில் அமைந்துள்ள முகாம்களில் இன்னமும் தங்கியுள்ள மக்களை மீள்குடியமர்த்துவதாகக் கூறி கோம்பாவிலில் பெரிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

முன்னர் புலிகளின் பல முகாம்கள் அமைந்திருந்த திம்பிலிப் பகுதியிலேயே இந்தமுகாம் அமைக்கப்படுகின்றது. சீருடையினர் இந்த முகாமை அமைத்து வருகின்றனர். தற்போது புதுக்குடியிருப்பில் உள்ள மக்களும் இந்த முகாமைப் பார்வையிட்டுச் செல்கின்றனர். இந்த முகாம் பகுதியில் மீள் குடியமர்த்தப்படாத புதுக்குடியிருப்பின் சில பகுதிகளைச் சேர்ந்த மக்களும் குடியமர்த்தப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலைகளும் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை இரணைப்பாலையில் கடந்த 8 ஆம் திகதி மீள்குடியமர்வு இடம் பெறுவதாக இருந்தது. ஆனால் இது தள்ளிப்போகும் சாத்தியம் உள்ளதால் மக்கள் மத்தியில் ஏமாற்றம் குடிகொண்டுள்ளது.

அத்துடன் பரந்தன் - புதுக்குடியிருப்புச் சந்தியில் தேவிபுரம் சந்தியிலிருந்து தேவிபுரம் செல்லும் வீதியில் காடுகள் அழிக்கப்பட்டு முகாம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும் நேரில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (க-433)

## உன்னதமானவர்கள்...



உயிர்காக்கும் கொடை: மன்னார் பொது வைத்தியசாலையில் தேசிய சுகாதார வாரத்தின் இறுதி நாள் நிகழ்வாக குருதிக் கொடைய வழங்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. (601)

# வவுனியா தெற்கு பிரதேச சபையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

வவுனியா, ஒக்.12

வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு பிரதேசசபையால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகச் சபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரதேசசபை பொறுப்புக்களை ஏற்று 5 மாதங்களே கடந்த நிலையிலும் 27 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் மற்றும் வணக்கத் தலங்களில் பொருத்தப்பட்டுள்ள 50 இற்கும் மேற்பட்ட குழாய்க் கிணறுகள் புனரமைக்கப்பட்டுப் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. மேலும் குடிதண்ணீர் இல்லாத பகுதிகளுக்கு நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நெல்சிப் திட்டத்தின் கீழ் தாலிக்குளம் பாடசாலை வீதி, உக்கிளாங்குளம் மில்வீதி, கற்குளம் 3 ஆம் ஒழுங்கை என்பன தார் இடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் சிறப்புடன் நடைபெற்ற ஆசிரியர்தினம்

கிளிநொச்சி, ஒக்.12

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தினம் மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்றுள்ளது.

நிகழ்வுக்கு முன்னதாக ஆசிரியர்கள் வித்தியாலய முன்றிலிலிருந்து பான்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டதுடன், மாலைகள் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

பின்னர் வித்தியாலய மாணவர்களால் அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள் ஆசிரிய கீதத்தை இசைத்தனர். மாணவர்கள் ஆசிரியர்களை வாழ்த்தும் கவிதைகள், பாமாலைகள் போன்றவற்றை வழங்கினர்.

இந்த நிகழ்வுக்குப் பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(க-426)

# கொக்கிளாய் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் நாளாந்தம் பறிபோய்க் கொண்டிருக்கின்றன

## பிரதேச மக்கள் கூட்டமைப்பின் வன்னி எம்.பிக்களிடம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக்.12

பூர்வீகமாக வாழ்ந்த நிலங்கள் நாளாந்தம் பறிபோய்க் கொண்டிருப்பதாகக் கொக்கிளாய் பிரதேச மக்கள் நேற்று முன்தினம் அங்கு சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராத லிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மேற்படி வன்னி மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்கள் முல்லைத்தீவு, கொக்கிளாய் பிரதேசத்துக்குச் சென்று அந்த மக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இந்தக் கலந்துரையாடலிலேயே அந்தப் பகுதி மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து அவர்கள் தெரிவித்ததாவது:

நாளாந்தம் சிங்களக் குடியேற்றங்கள் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு தங்களுடைய வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழில் மறுக்கப்பட்டு சிங்களவர்களுக்கு அந்தத் தொழில் அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் தாங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் வீட்டு வசதியோ, மலசலகூட வசதியோ, வைத்தியசாலை வசதியோ இதுவரையில் அரசால் ஏற்படுத்தித் தரப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

மேலும் அந்தப் பகுதியில் முன்னர் அமைந்திருந்த கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, கொக்கிளாய் மருத்துவமனை, தபாலக நிலப் பகுதிகளை இராணுவம் வேலி போட்டு அடைத்து வைத்திருப்பதாகவும் தெரிவித்தனர். (க-எ-6)

# குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு மன அழுத்தம் ஏற்படும்



குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு மன அழுத்தப் பாதிப்பு அதிகம் உள்ளது என்று பச்சிளம் குழந்தைகள் குறித்த ஆய்வில் தெரியவந்துள்ளது. வோஷிங்ரன் பல்கலைக்கழக பச்சிளம் குழந்தைகள் பிரிவு ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வு முடிவுகளின் விவரம் வருமாறு:

பிரசவ காலத்துக்கு முன்னரே குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு மன அழுத்தப் பாதிப்பு மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாக உள்ளது.


குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி மற்றும் செயற்பாடுகள் ஏனைய குழந்தைகளுடன் ஒப்பிடும்போது குறைவாகவே இருக்கிறது. இதனால் அவர்களுக்கு மன அழுத்தப் பாதிப்பு அதிகமாகிறது.

குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தைகளின் உடலின் வெப்பநிலை குறைதல் அல்லது மாறுபடுதல், இரத்த சர்க்கரை அளவில் அடிக்கடி மாற்றம், தொற்று நோய்ப் பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளும் இருக்கின்றன. போதிய ஒட்சிசன் மூளைக்குக் கிடைக்காவிட்டால் அதன் திசுக்கள் மற்றும் புதிய செல் வளர்ச்சி பாதிக்கப்படும். இது மூளையின் ஒட்டுமொத்தச் செயற்பாட்டைப் பாதிக்கும். இதுவே மன அழுத்தப் பாதிப்புக்குக் காரணமாகிறது.

கர்ப்ப காலத்தில் உரிய மருத்துவ அறிவுரை மற்றும் சிகிச்சையால் கர்ப்பிணிகள் குறைப் பிரசவத்தைத் தவிர்க்க முடியும்.

குழந்தைகளின் எதிர்கால நலனை முன்னிட்டு இத்தகைய நடவடிக்கைகளில் கர்ப்பிணிகள் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

# கடலுக்குள் விழும் மலையின் ஒரு பகுதி



எவராலும் நம்ப முடியாதவாறு ஒரு மலையின் பாறைப் பகுதி கடலுக்குள் விழும் காட்சி இங்கிலாந்தின் கோர்ண்வோல் பகுதியில் இடம்பெற்றது.

இந்த மலையில் முதல் தூசுப்படலம் தோன்றி அடுத்த விநாடிகளில் அந்த மலையின் ஒரு பக்கத்தில் வெடிப்பேற்பட்டு கீழே கடலுக்குள் விழுந்தது.

இந்த அரிப்பு இந்தப் பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இந்தப்பாறைகள் விழுந்த பின்பும் அதிகளவு தூசுப்படலங்கள் காற்றில் கலந்திருந்தன. கடந்தவாரமும் 20 தொன்கள் நிறையுள்ள பாறைகள் 20 மைல்கள் தொலைவிலிருந்த நியூகுவே கடற்கரையின் அரிப்பினால் விழுந்திருந்தன.

# தானாக நகரும் கல்

அமெரிக்காவின் ரேஸ் டிரெக் பிளாஸா பிரதேசம் உலகப் பிரசித்தமானது. இதற்கு மரண வெளி என்று பெயர். ஏன் தெரியுமா? இங்கு கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனிதர்களோ, உயிரினங்களோ கிடையாது. பாலைவனம் போன்று பரந்து விரிந்து கிடக்கும் இந்த மர்ம பூமியில் கற்கள் தானாக நகர்ந்து செல்கின்றன. நீண்ட காலமாக நிகழ்ந்துவரும் இந்த மர்மத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவை நகர்ந்து சென்ற அடையாளங்கள் தெளிவாகக் காணப் படுகின்றது.

இங்குள்ள கற்கள் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் முழுப் பிரதேசத்தையும் சுற்றி வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சில சமயங்களில் இரு கற்கள் ஒரே நேரத்தில் பயணத்தை ஆரம்பிக்கும். சில சமயங்களில் அவற்றில் ஒரு கல் வலது பக்கமாகவோ, இடது பக்கமாகவோ திரும்பி தனது பயணத்தை தனியாகத் தொடர்வதுண்டு. இந்தக் கற்கள் பின்னோக்கி நகர்ந்த சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்கின்றன. இவை நகரும் தூரம் 10 ஆயிரம் அடிகளை விட



அதிகமாகும். சில கற்கள் ஒரு அடி மட்டுமே நகர்கின்றன. இந்த மர்மப் பிரதேசம் குறித்து முதன் முதலில் 1948 ஆம் ஆண்டு தகவல் வெளியானது.

நிலத்துக்குள் இருக்கும் ஒருவித சக்தியே கற்கள் நகர்வதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சிறிய கல்லொன்று வருடம் முழுவதும் இரண்டரை அங்குலம் மட்டுமே நகர்கின்றபோதும் 36 கிலோ எடையுள்ள கல்லொன்று ஆண்டுக்கு 659 அடிகள் நகர்ந்திருக்கிறது.

கல்லின் அளவுக்கும் அவை நகர்வதற்கும் எதுவித தொடர்பும் இல்லை.

இந்தப் பாழடைந்த மர்மமான பிரதேசத்தில் மனித நடமாட்டம், இல்லாவிட்டாலும் கற்களின் நடமாட்டமும் அதன் ஆய்வுகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

# சிந்தனைத் துளிகள்

* பணம் சேர்ப்பது மட்டும் வாழ்க்கை அல்ல. நல்ல மனங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.
* நல்லவற்றைப் பாறையில் எழுது, தீயவற்றைப் பனிக்கட்டியில் எழுது.
* நல்லதை விதை, தீயதைப் புதை.
* நம்பிக்கையே இனிமையான எதிர்காலத்தை அமைக்கிறது.
* செய்வதைத் திருந்தச் செய்வதே வெற்றிக்கு வழி.
* ஒழுக்கமுள்ள மனிதன் பெருந்தன்மையும் மரியாதையும் அன்பும் நிறைந்த சொற்களைப் பேசுவான்.

**கி.கஜலக்ஷி,**
தரம் 8ஏ,
யாழ்.வண்ணை நாவலர், மகா
வித்தியாலயம்.

# பாம்புத் தலையோடு கூடிய பிரமிட்

புகழ்பெற்ற அரச சிதைவுகளில் பாம்பின் தலையமைப்பைப் போன்ற சிறப்புமேடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மெக்சிக்கோ நகரின் சிதைவுகளிலேயே அகழ்வாராய்ச்சியாளர்கள் இவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். அந்தப் பகுதியில் ஏதாவது அரச பரம்பரையினரின் புதைகுழி இருக்கலாம் என்று 5 ஆண்டுகளாகத் தேடிவந்தனர். ஆனால் அப்படியான எந்தவிதப் புதைகுழியும் அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தப் பாம்பு மேடைப்பகுதி 15 யார் விட்டத்தில் காணப்பட்டதுடன் கி.மு. 1469ஆம் ஆண்டில் கட்டப்பட்டிருக்கலம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.



இங்கு பாம்பின் தலைகள் போன்ற 19 மேடைகள் வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. இந்தப்பகுதி 2006 இல் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் தற்போதுதான் முழுதாக இந்தப் பாம்பு மேடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

# முஸ்லிம்களுக்கும் பேச்சில் இடம் வேண்டும் தேர்தல் முடிவு இதனையே வெளிப்படுத்தியுள்ளது

## முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் கூறுகிறார்

கல்முனை, ஒக்.12

நாட்டில் யுத்தம் மௌனித்து இனப்பிரச்சினைக்கான பேச்சு தொடரும் இந்தச் சந்தர்ப்பத்தில், முஸ்லிம் சமூகமும் இந்த பேச்சில் நிச்சயம் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற செய்தியை கல்முனை மாநகர சபைத் தேர்தல் முடிவுகள் இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் உரத்துக் கூறியுள்ளன.

இவ்வாறு, அக்கரைப்பற்று மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீட உறுப்பினரும், கட்சியின் கல்முனை மாநகரசபைத் தேர்தல் கண்காணிப்புக் குழு உறுப்பினருமான எஸ்.எல்.எம். ஹனிபா மதனி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

"நாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான மூன்றாம் கட்டத் தேர்தலில் கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

முஸ்லிம்களுக்கான தென்கிழக்கு அலகின் முக்கிய தலைநகராகக் கருதப்படும் கல்முனை மாநகரசபைத் தேர்தலில் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளுக்கப்பால் முஸ்லிம் மக்கள் ஐக்கியத்தைக் கடைப்பிடித்து நமது தேசிய விடுதலை இயக்கமான முஸ்லிம் காங்கிரஸை அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெறச் செய்துள்ளதுடன், மாநகர ஆட்சியில மர்த்தி வரலாற்றுச் சாதனையையும் நிலை நிறுத்தியுள்ளனர்.

இந்த வெற்றி கல்முனை மாநகரம் வாழும் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமன்றி இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் கௌரவப்படுத்தியுள்ள தீர்க்க தரிசனமிக்க சாதனை வெற்றியாகும்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்காகவும், எமக்கான ஒரேயொரு குரல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை வலுப்படுத்தி நிரூபணம் செய்ய ஜனநாயக ஆயுதமான வாக்குகள் மூலம் கடந்த தேர்தல்களில் எடுத்துக் காட்டினர்.

அதே போன்றே முஸ்லிம் தேசியத்தை வலியுறுத்தியும், எமது ஒரே குரல் முஸ்லிம் காங்கிரஸ்தான் என்பதை நிரூபணம் செய்தும் கல்முனை மாநகர சபைத்தேர்தலில் முஸ்லிம் மக்கள் வாக்களித்துள்ளனர்.

எனவே இந்த வரலாற்றுப் பெருமைமிக்க வெற்றியை ஈட்டித்தந்துள்ள கல்முனை மாநகரம் வாழ் முஸ்லிம் மக்களுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிக்க முஸ்லிம் சமூகம் கடமைப்பட்டுள்ளது-இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# புல்மோட்டைப் பொலிஸ் பிரிவு மீண்டும் திருமலை பொலிஸ் நிர்வாகத்தின் கீழ்



திருகோணமலை,ஒக்.12

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டை பொலிஸ் பிரிவு 15 வருடங்களுக்குப் பின் மீண்டும் திருகோணமலை மாவட்ட பொலிஸ் நிர்வாகப் பிரிவுடன் இணைக்கப்பட்டது.

கடந்த 15 வருடங்களாக புல்மோட்டை பொலிஸ் நிர்வாகப் பிரிவு அநுராதபுரம் பொலிஸ் நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் பொதுமக்கள், நாடாளுமன்ற பிரதிநிதிகள், பொதுநிறுவனங்கள் பல தொடர்ச்சியாக விடுத்த வேண்டுகோளைஅடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் திருகோணமலையுடன் புல்மோட்டை பிரிவு இணைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை புல்மோட்டை பிரதான பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அநுராதபுரம் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நந்தன விஜயரெட்ண உத்தியோகபூர்வ ரீதியில் திருகோணமலை பொலிஸ் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் ரத்மல் வின்ன பண்டாரவிடம் புல்மோட்டை பொலிஸ் பிரிவின் பொறுப்புக்களைக் கையளித்துள்ளார்.

மீண்டும் புல்மோட்டை பொலிஸ் பிரிவின் நிர்வாகம் திருகோணமலைக்கு மாற்றப்பட்டமை தமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.(ச)

# ரயில் மோதுண்டு கணவன் பலி; மனைவி படுகாயம்

தலவாக்கலை, ஒக். 12

தலவாக்கலை ரயில் நிலையத்திற்கருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டியிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்ட தம்பதியரில் கணவன் சம்பவ இடத்திலேயே மரணமானதுடன், மனைவி படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் தலவாக்கலை பிரதேசவாசியான பெர்னாண்டோ ஜோன் பீற்றர் (வயது-58) என்பவரே உயிரிழந்துள்ளார். அவரது மனைவியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் மரண விசாரணை லிந்துல வைத்தியசாலையில் நடைபெற்றது. இந்த விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)



கல்முனை மாநகரசபைத் தேர்தலில் எதிரும் புதிருமாக பரப்புரையிலீடுபட்டிருந்த மு.கா. வேட்பாளர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மற்றும் ஐ.ம.சு.முன்னணி வேட்பாளர் எ.எம்.றியாஸ் ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்ற பின்பு இருவரும் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். (25)

# பலாங்கொடையில் இரு பஸ்கள் மோதியதில் 16 பயணிகள் காயம்

கொழும்பு, ஒக். 12

பலாங்கொடை வேகபிட்டிய பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரண்டு தனியார் பஸ்கள் மோதிக்கொண்டதில் காயமடைந்த 16 பயணிகள் பலாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றனில் இருந்து பலாங்கொடை நோக்கிப் பயணித்த பஸ்ஸும் பலாங்கொடையில் இருந்து பின்னவெல நோக்கிப் பயணித்த பஸ்ஸுமே இவ்வாறு மோதிக் கொண்டுள்ளன.

இந்த விபத்தில் பத்து ஆண்களும், ஆறு பெண்களும் காயமடைந்துள்ளனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

# கல்முனை மாநகர மேயர் நியமனம் மக்கள் விருப்புக்கேற்பவே அமையும்

## பிரதியமைச்சர் சேகுதாவூத் தெரிவிப்பு

கல்முனை, ஒக். 12

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனநாயகக் கட்சி என்ற வகையில், மக்கள் வழங்கிய விருப்பின் அடிப்படையிலேயே கல்முனை மாநகரசபை மேயர் நியமிக்கப்படுவார்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார். கல்முனை மாநகர மேயர் நியமனம் எவ்வாறு இருக்குமெனக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஜனநாயகக் கட்சி என்ற வகையில் மக்கள் வழங்கியுள்ள விருப்புக்கு அமையவே கல்முனை மாநகர மேயர் நியமிக்கப்படவுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் உரிமைக்கான கட்சி என்பதையும் முஸ்லிம்களின் அபிலாஷைகள் முஸ்லிம் காங்கிரஸ் மூலமே வென்றெடுக்கப்பட வேண்டும் என்ற செய்தியையும் கல்முனை மாநகர சபைத் தேர்தல் மூலம் கல்முனை மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த காலங்களை விட இம்முறை அமைத்த தேர்தல் வியூகத்தின் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கல்முனை மாநகர சபைத் தேர்தலில் 11 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. கல்முனைமாநகரமேயர் நியமனம் மக்கள் வழங்கிய விருப்பின் அடிப்படையிலும் ஜனநாயக அடிப்படையிலுமே இடம் பெறும் - என்றார். (ச)

# பெண் தபாலதிபர் கொலை; கணவருக்கு விளக்கமறியல்

நாவலப்பிட்டி,ஒக்.12

நாவலப்பிட்டி, கலபொடை தோட்டத்தில் பெண் தபாலதிபர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அவரின் கணவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நாவலப்பிட்டி நீதிவான் பூர்ணிமா கமகே உத்தரவிட்டார். கலபொடை தோட்டத்தில் தாபலதிபராகக் கடமையாற்றி வந்த பிசோமெனிகே கடந்த 29ஆம் திகதி இரவு அவரின் வீட்டில் வெட்டிக்கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்தவரெனவும் இவர் ஏற்கனவே திருமணமாகி இரு பிள்ளைகளின் தந்தையாவாரெனவும் பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை நாவலப்பட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயவிக்கிரமசேகர தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# சவச்சாலையில் வைக்கப்பட்ட சடலங்கள் மாறிய சம்பவம்

மாத்தளை,ஒக்.12

மாத்தளை வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சடலங்கள் உறவினர்களிடம் மாறிமாறி ஒப்படைக்கப்பட்டதால் ஏற்பட்ட பரபரப்பு பொலிஸாரின் தலையீட்டால் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

கித்துள் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து மரணமான கொலஹென்வத்த பிரதேசவாசியான ஏ.எம்.சந்திரசேன மற்றும் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட இம்புலன்தண்ட துணுகேவத்த பிரதேசவாசியான கே.எம். முத்துபண்டா என்ற இருவரினது சடலங்களே இவ்வாறு மாறி ஒப்படைக்கப்பட்டுள்ளன. மரண விசாரணையின் பின்னர் வைத்தியசாலையில் வைத்தே இரு சடலங்களும் தவறுதலாக மாறி ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்ட மாத்தளை பொலிஸார் சடலங்களைச் சரியாக உறவினர்களிடம் ஒப்படைத்து பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளனர். ஏதோ பொருள்கள் தான் மாறி ஒப்படைக்கப்படும் என்றா நினைக்கிறீர்கள் நாளை நமது சடலங்களும் மாறலாம்! (ச-5)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
இறை வழிபாடுகள் மூலம் அமைதி பெறும் நாள். தொல்லை கொடுத்த சிலரே, தோள் கொடுக்க முன் வருவர். சில விடயங்களில் மற்றவர்களின் தலையீடு இல்லாமல், சுதந்திரமாகச் செயற்பட முற்படுவீர்கள். உடன் பணிபுரிவோர் அனுசரணையாக நடந்து கொள்வர். தேக ஆரோக் கியக் குறைபாடுகள் நீங்கி, தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள்.

**இடபம்:**
மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். அடுக்கடுக்காகக் குவியும் வேலைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். சிலர் தங்களின் வேலைகளை உங்கள் தலையில் சுமத்தி விட்டுத் தப்பித்துக் கொள்ளலாம். உடலுக்கு ஒவ்வாது எனத் தெரிந்தும் சில பொருள்களை அதிகமாகச் சாப்பிடுவீர்கள்.

**மிதுனம்:**
உறவினர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். வியக்கத்தக்க செய்திகளைக் கேட்கலாம். அதிக செலவில் திட்டமிட்ட வேலை ஒன்று, குறைந்த செலவில் முடியலாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். தொழில், வியாபார ரீதியான பண வரவுகளைப் பெறலாம். தம்பதியர் அன்யோன்யம் கூடும்.

**கடகம்:**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பணப்பிரச்சினை தீரும் வகையில் புதிய வரவுகள் வந்து சேரும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். தொழில் சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையலாம்.

**சிங்கம்:**
நிதானம், பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். மனக் குழப்பங்கள் தீர கோயில்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவீர்கள். சில வேலைகளில் தீவிரமாக இறங்கி விட்டு, பின் அதைப் இடைநடுவில் விட்டு விடலாம். சிலருக்கு கடன் கொடுத்து உதவி செய்வீர்கள். உதவி பெற்ற சிலரே, உங்களை உதாசீனம் செய்யும் வகையில் நடக்கலாம்.

**கன்னி:**
வீடு தேடி முக்கிய செய்திகள் வரலாம். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள், நல்ல விதமாக முடிவுக்கு வரும். அலைச்சல் இருந்தாலும், சில விடயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். சொத்துப் பிரச்சினைகளில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும்.

**துலாம்:**
விலையுயர்ந்த பொருள் ஒன்றை வாங்குவீர்கள். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உங்களின் அனுபவங்களைப் பற்றி பலர் மத்தியில் பெருமையாகப் பேசுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனை ஒன்று நிறைவேறும். நண்பர்களால் செலவுகள் உண்டாகலாம்.

**விருச்சிகம்:**
மகிழ்ச்சி, உற்சாகம் அதிகரிக்கும் நாள். புதிய பொறுப்புகள் தேடி வரலாம். உறவினர்கள் சிலர் மூலம் புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமான முடிவுக்கு வரும். மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அதை இன்று நீங்களே செய்ய நேரிடலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

**தனுசு:**
வீண் பழிகள் விலகி, பாராட்டுக்களைப் பெறுவீர்கள். மனதில் ஒன்று வைத்துக் கொண்டு, வெளியில் ஒன்று பேசும் நபர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, முன்பின் பார்த்திராத ஒருவர் உதவி செய்யலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். மற்றவர்களுக்காகச் செலவு செய்யலாம்.

**மகரம்:**
குடும்ப உறுப்பினர்களுடன் வெளியூர் பயணங்கள் செல்லலாம்.பெற்றோர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். அதிக அலைச்சலைத் தரும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடியும். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றிப் பெருமை சேர்ப்பர்.

**கும்பம்:**
நண்பர்களிடம் பேசும் போது கவனம் அவசியம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். புதிய முயற்சிகளில் பொறுமை, நிதானம் அவசியம். கடனாக வாங்கிய பணம் ஒன்றை, உடனே கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரிகள், வேலையாள்களின் திடீர் விடுமுறையால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**மீனம்:**
போட்டிகள், எதிர்ப்புகள் குறையும் நாள். குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். தொழில் ரீதியான பண வரவுகளைப் பெறலாம். கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நீண்ட நாளாகப் பார்க்காத நண்பர் ஒருவரைப் பார்க்கலாம்.

# வீழி... எழுந்...

"மெலிதை கொன்று வலிது வாழல்'' என்பது இயற்கை உயிர்ப்பியல் தத்துவங்களில் ஒன்று. ஆயினும் ''உயிர்காக்க ஓடும் சிற்றினத்தின் ஓர்மம், பசி தீர்க்க விரட்டும் பேரினத்தின் வேகத்திலும் பெரிது'' என்பதே எப்போதும் அனுபவத்தெளிவு.

விலங்கினங்களின் பரிசோதனை விதிகளாக, மேற்கூறப்பட்டவை ஒப்பிடப்பட்டபோதிலும் இன்றைய உலகநியதியில் பல்வேறு நாடுகளின் மக்கள் கூட்டங்களிடமும் மேற்கண்டவை, அடிக்கடி திணிக்கப்பட்டு இன்றேல் திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்படுவது சாதாரணமாகிப்போயுள்ளது.

வல்லரசுகள் என்று தம்மைப் பிரகடனப் படுத்துவோரும், ''வல்லரசுளாகி'' விடக் கால எல்லை குறித்து வைத்துவிட்டுக் களமிறங்கி உயிர் சுரண்டுவோரும், ''பிராந்திய வல்லாதிக்கம்'' எனும் பேராசைத் தீக்குத் தீனியாக ''இன்னமும் வேண்டும் உயிர்ப்பலி'' என்று அதிகார வரம்பை அடிக்கடி அகட்டிக் கொண்டேயிருப்போருமாக , வளர்முக நாடுகளில் ''கோடு'' போட்டு ''கெந்திப்பிடித்து'' விளையாடுவோருக்குக் குறைவில்லை உலகில்!

சின்னஞ்சிறிய தீவில் ஏகத்துக்கும் பிணக்குகளும், பிரச்சினைகளும் மண்டிக் கிடப்பதற்கு அவ்வப்போது வேலி தாண்டி வந்து போன பல ''வெள்ளாடுகள்'' தான் முக்கிய காரணம் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒடுக்கப்பட்ட இனத்தின் உணர்ச்சித் தீண்டலுக்கும், ஆயுதப் போராட்டத்துக்கும் மறைமுகத் தொட்டிலாகி ''ஆடிக்'' கொண்டு, மறைவில் ''பிள்ளையையும்'' கிள்ளி விட்டுத் தமது தேவைகளை நிறைவேற்றிவிட்டுப் போய்க்கொண்டேயிருந்த உலக நாடுகளின் கபடம் சொல்லிமாளாது.

இனப்பிரச்சினை என்கின்ற மரத்தின் பல்வேறு கிளைகளில் மதப்பிரச்சினை, மொழிப்பிரச்சினை கூடவே பிரதேசவாதம் எனும் பில்லி சூனியங்களையும் அவ்வப்போது ஏவி விட்டு சிறுபான்மைப் பிரதிநிதிகளைப் பழிவாங்கும், ''மெலிதைக் கொன்று வலிது வாழல்'' தத்துவத்தை நிரூபித்ததில் எம்முள்ளூர் தலைவர்களும் சற்றும் சளைத்தவர்கள் அல்லர்.

மாவட்டங்களுக்கு மாவட்டமாக, ஏதோ ஒரு வேரறாத தொடர்பில், தம் இனத்தின் பொதுப்பட்ட பாரம்பரியங்களையும், பண்பாட்டுச் சூழலையும், கலாசாரப் பின்னணியையும் பொறுப்பு வாய்ந்த இறுக்கத்துடன் பின்பற்றி ஒழுகி வந்த எல்லாச் சிறுபான்மையினங்களின் அமைதியான வாழ்வோட்டத்துக்குள்ளும் ஏதாவது ஒரு வடிவத்தில் புகுந்து குழப்பிவிட்டு, அவர்களின் அமைதியின்மையில் குளிர்காய்வது என்பது பேரினத்தோரின் முக்கிய ''பொழுதுபோக்கு''களில் ஒன்று.

எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடிய, இலகுவில் மோதலாக மாறிவிடக்கூடிய விடயங்களைத் தேடிக் கண்டு பிடித்து அடித்துவிட்டு, ''அம்பயராக'' மாறி, நாம்தான் தீர்ப்பும் சொல்வோம் என்று அடம்பிடிக்கும் அற்புதக்கலையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். காலம் காலமாக இப்படியான வீரதீரங்களைப் புரிந்து, மிகப்பெரிய அனுபவச் சான்றிதழ்களைக் கையோடு கொண்டு அலை பவர்கள் எப்போதோ குறிவைத்த விடயம்-''தமிழ னுக்கு ஏன் தனியொரு பண்பாடு?''

தமக்கு நேரம் வந்த போதெல்லாம் எம் அடிமடியில் கைவைக்கத் தயங்காத உச்ச போக்கிரித்தனம் அவ்வப்போது ஏதேதோ எம்மினத்தின் எட்டு மூலைகளிலும் காவலுக்கிருந்த ''அட்டதிக்குப் பையன்களால்'' தள்ளிப் போடப்பட்டது. ''பூட்டிய வீட்டில், சத்தமிட்ட கதையாக முன்பிருந்த காலங்களில் தூர இருந்து ஏவப்பட்ட ''விஷ அம்புகள்'', எம் படலையைத் தாண்டவே பயப்பட்டு முறிந்தன என்பது வரலாறு.

''எல்லாவற்றுக்கும் இலகுவில், எடுபட்டுப் போகும்'' குணம் எம்மினத்தின் வரமல்ல, சாபம்! என்று எம்மைவிட நன்கறிந்த தேவையாளர் களினால் இலகுவில் சபலத்துக்குள் விழுந்து, ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழைமையை, நவீனத்து வத்துக்கு, விலை கொடுத்தோம் என்பது அப்பட்ட மான மெய்.

திட்டமிடப்பட்டு எதிர்கால சமூகத் தூண்களான இளைஞர்களுக்குத் தேசிய சிந்தனை மழுங்கடிப்பையும், இறந்த காலங்களின் வலிகளைத் தாங்கும் அடையாளங்களின் விழுங்கடிப்பையும் திருப்திகரமாக முடித்துக் கொள்வதே தமக்கான நிகழ்காலத் தேவை என்னும் நிதர்சனத்தை மறைத்துக் கொண்டு, ''அபிவிருத்தி'' என்ற பெயரில் அள்ளிக் கொடுக்கும் குறுநில மன்னர்களுக்கு, எடுபிடி வேலை செய்யத்தான் எம்மிடம் ஏராளம் ஆள்கள் உண்டே? என் செய்ய?

பெரும்பாலான பத்திரிகைகளும், பல்தேச தொலைக்காட்சிகளும் வாய் வலிக்கக் கத்திக் கதறியழுத விடயங்கள் கடந்த மூன்று வருடங்களுக்குள், குறிப்பாக யாழ். குடாநாட்டில் எண்ணிலடங்காதவை.

''எப்போதும் போல நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலச் சர்ச்சைகள்'', ''நகர மையத்தில் புல்லுக்குளத்தைப் புனரமைத்து நட்சத்திர விடுதியமைத்தல்'', ''நகரில் அடுக்குமாடி நவீன கடைத்

> தொண்ணூறு சதவீதத்துக்கு மேல் படித்தவர்களையே பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ்.மாநகர சபையைக் கண்மூடித்தனமாகத் தாரை வார்த்தை, இன்றைய தினத்திலும் ஏதோவொரு தவறணை வாசலில், வடக்கின் வசந்தத்து மதகில் , வாசகசாலையொன்றின் வாசல் திண்ணையில் குந்தியிருக்கும் சாமானியனின் வாய் கொஞ்சம் ஏளனத்துடன் இழுத்து விடுவதை தடுத்து விடமுடியாது, அதில் தப்புமில்லை!



# னும்

# ந்து...

**கொள்ளிக் கட்டை எடுத்துத் தலை சொறிந்த நிலையாக யாழ். மாநகர சபை என்ற பலம் வாய்ந்த, கேள்வி கேட்கக் கூடிய ஜனநாயக 'லகான்' கைமாறியதன் தாக்கம் இன்றும் தெரிகிறது.**




தொகுதி கட்டடக் குத்தகைகளில் குளறுபடி'', ''சங்கிலிய மன்னனைச் சரித்து வீழ்த்தி, புதுச் சிலையும் பெயர் பொறிப்பு வில்லத்தனங்களும்'', ''பல்கலைக்கழகத்தில் நிர்வாகக் குழுத் தெரிவும், புதிய உபவேந்தர் நியமனமும்'', இறுதியாக ''பழைய பூங்காவினுள் பட்டுக் குஞ்சரம் பூட்டிய அலவாங்குகளின் அகலிப்பு'' என்று குதறல் காயங்கள் பலவற்றில் சில இவை!

''கொள்ளிக்கட்டை எடுத்து தலை சொறிந்த'' நிலையாக யாழ். மாநகரசபை என்ற பலம் வாய்ந்த, கேள்வி கேட்கக் கூடிய ஜனநாயக ''லகான்'' கைமாறியதன் தாக்கம் இன்றும் தெரிகிறது.

''வைத்திருந்தால் மட்டும் என்ன வைகுண் டமாகவா மாற்றியிருப்போம்?'' என்று கேள்வி எழுவது தவிர்க்க முடியாததேயாயினும், அரசியல் பலத்தின் மூடிய கதவுகளை, அதிகார பலம் எனும் வெற்றுக்கைகளால் தட்டித் திறக்க முடியா விடினும், ''தூங்க'' விடாமல் செய்திருக்க முடியு மில்லையா?

தொண்ணூறு சதவீதத்துக்கு மேல் படித்தவர் களையே பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ். மாநகர சபையைக் கண்மூடித்தனமாகத் தாரை வார்த்ததை, இன்றைய தினத்திலும் ஏதோவொரு ''தவறணை வாசலில்'', ''வடக்கின் வசந்தத்து மதகில்'', ''வாசகசாலையொன்றின் வாசல் திண்ணையில்'' குந்தியிருக்கும் சாமானியனின் வாய் கொஞ்சம் ஏளனத்துடன் இழுத்து விடுவதை தடுத்து விடமுடியாது, அதில் தப்புமில்லை!

இதுவொன்றும் ''அறியாமல் செய்த தவறென்று'' வசனம் பாடிவிட முடியாது. பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்ந்துள்ள குடிமக்களை பிரதிநிதிகளாகக் கொண்ட மாநகரசபையின் ஆட்சிக் கட்டில், அநியாயமாய் பறிபோனதற்கு ''அசமந்தமாய் இருந்த'' கர்த்தாக்கள், இன்று நடக்கும் 'அநாகரிகங்களை' கண்டு நெளிவதையும் நன்கே தெரிந்து வைத்துள்ளார்கள் கிராமத்து மக்கள். ''குற்றம் செய்தவனுக்கு இணையாக, குற்றத்துக்கு துணை போனவனும் குற்றவாளியே'' எனும் சட்டவாக்கியத்தில், அவர்களுக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லாததற்குக் காரணம், ''தவறுகள் திருத்தப்படக் கூடியன!'' எனும் அனுபவப் பட்டறிவு!

''இலகுவில் போக்கிவிட முடியாது'' என்று முற்றிப்போய்விட்ட இளவட்டங்களின் வயதுப் பிறழ்வுகள், எக்காலத்திலும் நடக்காத ''புதிய தொழில்களின்'' கூடாரமாக மாறியுள்ள நகரமையம், கண்டு கொள்ளாத ஆட்சியாளர்கள் மற்றும் அதிகார மையங்கள், ''தெரிந்தே தவறு செய்யும் பெரிய இடங்கள்'' என்று புண்பட்ட எம்மினத்தில் நிரந்தரமாகப் பாய்ந்துள்ள கோடரிகளின் காம்பில்கூட ''கைவைக்க முடியாத பயம்'', நாமே நம் தலையில் அள்ளிப் போட்டுக் கொண்ட மண்ணில் ஒரு பகுதி! இவை அனைத்தையும் கெட்ட கனவாக மறந்து விடச் செய்யும், ''மாற்றமில்லாத மாற்றம்'' ஒன்றைத் தேடிய நம் பயணம் இன்றும் ஆரம்பிக்கக் கூட இல்லை (?) என்பதுதான் மிகப் பெரிய சோகம்!! தெள்ளிய அரசியலறிவும், கூரிய உலக விடய அவதானிப்பும், அதிகவனமாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு முன்னோக்கிய சுவடும், உலக அரங்கில் எம்மை நிச்சயம் தோளுயர வைக்கும் என்பதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் எம் தமிழ் இளைஞர்களுக்கு நிறையவே உண்டு என்பதே, இன்றைய நம்பிக்கை! ✱

■ செந்தூரி

## வாழ்வின் பொருள்



ஒரு பெரிய பாராட்டு விழா நடந்து கொண்டிருந்தது. ரயில் நிலையத்தில் வேலை செய்த ஒருத்தருக்குத்தான். அந்தப் பாராட்டு விழா.

அதுவும் சாதாரண தொழிலாளியாக வேலை செய்து கொண்டிருந்த ஒருத்தருக்கு அந்தப் பாராட்டு விழா. பல முக்கியமான தலைவர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள், அவரைப் பற்றிப் பேசுவதற்காக.

அந்தத் தொழிலாளி அன்றுதான் அவருடைய வேலையில் இருந்து ஓய்வு பெறுகிறார். எல்லோரும் தான் பதவியிலிருந்து ஒரு நாள் ஓய்வு பெறுகிறார்கள். இருந்தாலும் எல்லோருக்கும் இந்த அளவுக்குப் பெரிதாக விழா நடந்ததில்லை. ஆனால் இவருக்கு நடக்கிறது. அது ஏன்? காரணம் இருக்கிறது. என்ன காரணம் என்பது அவரைப் பற்றிப் பல பேர் பேசியபோதுதான் புரிந்தது.

ஒருத்தர் பேசினார் ''இன்றைக்குப் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்ற இந்தப் பெரியவர் இருக்கிறாரே இவர்; ஏனைய எல்லோரைப் போல சாதாரணமானவர் அல்லர். தன்னுடைய கடமையிலே கண்ணாக இருந்தவர்; கடமையிலிருந்து அவர் தவறியதே இல்லை; என்றைக்கு இந்தப் பதவியில் சேர்ந்தாரோ அன்றையில் இருந்து இன்றைக்கு வரை அவர் ஒரு நாள் கூட லீவு எடுத்ததில்லை. இது ஒரு பெரிய சாதனை'' என்றார் அவர்.

இன்னொருத்தர் பேசினார்; ''அவர் இந்த வேலையில் எப்படிச் சேர்ந்தாரோ அப்படியே கடைசி வரைக்கும் ஒரு சிறிய பதவியுயர்வு கூடக் கிடைக்காத போதும் அவர் மனம் சலிப்படையாமல் தளச்சியடையாமல் தொடர்ந்து வேலைக்கு வந்தார்; தன்னுடைய கடமையைச் செய்தார்.

இன்னொருத்தர் பேசினார்; ''ஒரு சமயம் அவருடைய மனைவியின் உடம்புக்கு ஏலாமல் வந்தது. அந்தச் சமயத்தில் கூட மனைவியாரை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு நேராக வேலைக்கு வந்துவிட்டார்'' என்றார். இப்படி இவர்களெல்லாம் பேசியது உண்மைதான்.

அப்படித்தான் அந்தப் பெரியவர் நடந்து கொண்டிருந்தார். ஒரு நாள் கூட கடமையில் இருந்து தவறியது இல்லை; லீவு நாள் கூட அவர் வேலைக்கு வந்து விடுவார். அவருடைய வேலை என்ன தெரியுமா? தினமும் ரயில் நிலையத்துக்கு வருவார்; கையிலே ஒரு சுத்தியலோ இரும்புத் துண்டோ வைத்திருப்பார். ரயில் வந்து நிற்கும். உடனே இவர் தனது கடமையை ஆரம்பித்து விடுவார். அதாவது இஞ்சினில் இருந்து ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்துக் கொண்டு வருவார்.

ஒரு பெட்டியும் இன்னொரு பெட்டியும் இணையும் இடத்தில் கையில் உள்ள சுத்தியலால் இரண்டு தட்டுத் தட்டுவார். மறுபடியும் வருவார். அடுத்த இரண்டு பெட்டிக்கும் நடுவாகப் போவார். அங்கேயும் வழக்கம் போல் சுத்தியால் தட்டுவார். இப்படியே கடைசிப் பெட்டிவரைக்கும் போவார். இதுதான் அவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த வேலை. இதை அவர் ஒழுங்காகக் செய்தார். அந்த ரயில் போய் அடுத்த ரயில் வந்து நிற்கும். மறுபடியும் இவர் வேலையை ஆரம்பித்து விடுவார். இந்த வேலையை அவர் கடைசிவரைக்கும் செய்து முடித்திருக்கிறார்.

அதனால்தான் அவருக்கு இந்தப் பாராட்டுவிழா. பல பேர் பரிசு கொடுத்தார்கள்; பொன்னாடை போர்த்தினார்கள்; நற்சான்றிதழ் பத்திரம் வழங்கினார்கள். எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு கடைசியாக அவர் நன்றி தெரிவித்துப் பேசினார்.

''எல்லோரும் என்னை அளவுக்கு அதிகமாகப் புகழ்ந்து பேசுகிறீர்கள்; ஏதோ என் கடமையைச் செய்தேன்; அதற்கு மாதம் மாதம் சம்பளமும் வாங்கிக் கொண்டேன். இன்றைக்கு ஓய்வு பெறுகிறேன் ;அவ்வளவுதான். இதற்குப் போய் இவ்வளவு பெரிய விழா தேவை இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

ஆனாலும் இந்தக் கடைசி நேரத்தில் ஒரு சந்தேகத்தை உங்களிடம் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இவ்வளவு வருடங்கள் கடமை தவறாமல் வேலை செய்தேன். உண்மைதான். ஒவ்வொரு ரயிலின் ஒவ்வொரு பெட்டியையும் தவறாது தட்டியிருக்கிறேன். ஆனால் ஒரு விடயம்; ஏன் அப்படித் தட்டினேன் என்பது இந்த நிமிடம் வரைக்கும் எனக்குத் தெரியாத ஒன்று; தட்டச் சொன்னார்கள்; தட்டினேன்'' என்றார். எப்படி இருக்கிறது இந்தக் கதை.

இந்தக் கதை யாருக்காக என்று நினைக்கிறீர்கள். ஏன் வாழ்கிறோம் என்று தெரியாமலே இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களே சில பேர். அவர்களுக்காகத்தான்.

**கோ.சுவாமிநாதன்**



சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் 'அம்பிகை அருளாலே...' இசை இறுவட்டின் இரண்டாவது பாகம் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழகத்தினரின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இறுவட்டை வெளியிட்டு வைக்கிறார். (ம)

# கற்றலுக்கு எப்போதும் இன, மத வேறுபாடு இல்லை; மனத்தூய்மையே மாணவர்களை நல்வழிப்படுத்தும்

**யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி கூறுகிறார்**

யாழ்ப்பாணம், ஒக்.12

கற்றலுக்கு எப்போதும் இன மத வேறுபாடு கிடையாது. ஒவ்வொருவருடைய மனத்தூய்மையுமே அவர்களை நல்வழிப்படுத்தும். அதனை மாணவர்களுக்கு விளக்கி வைக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க.

யாழ். மாவட்டப் படைகளின் தலைமையகத்தின் சமூக நலத்திட்டத்தின் கீழ் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியுடைந்த மாணவர்கள், நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்று ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த வர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ். மாவட்ட படைத்தலைமையகத்தின் பொதுசனத் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

கற்றலுக்கு ஏற்றமுறையில் நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவரிடமும் இருக்க வேண்டும்.இதற்கு கவிஞர்கள், அறிஞர்கள் கூறிச் சென்ற கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துரைத்து அதன்வழி மாணவர்கள் தமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் நிறைவேற்ற வழிகாட்டிகளாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

மாணவர்களின் கற்றலுக்கு உகந்ததாகத் திருவள்ளுவர் பல கருத்துக்களைக் கூறியுள்ளார். அவர் கூறிய கருத்துக்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒவ்வொன்றாக எடுத்துக்கூற வேண்டும்.

மாணவர்கள் எதிர்கால சந்ததியினர் என்பதை நாம் உணரவேண்டும். அதனால் அவர்களை வழிப்படுத்தக் கூடிய பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து அவர்களின் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.- என்றார். (ச-86)

# பெண்களின் முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக பெண்கள் அமைப்புகள் செயற்படவேண்டும்

**வடமாகாண ஆளுநரின் பிரதம செயலாளர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஒக்.12

பெண்களின் முன்னேற்றத்துக்காகவும்,சிறுவர்களின் கல்விச் செயற்பாடு, பாதுகாப்புக்கும் உந்துசக்தியாக பெண்கள் அமைப்புகள் செயற்பட வேண்டும்.

இவ்வாறு வடமாகாண ஆளுநரின் பிரதிப் பிரதம செயலாளர் எஸ்.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

ஸ்திரிமேளா அமைப்புடன் யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து 'கண்காட்சியும் தொடர் கருத்தரங்குகளும்' 2 நாள்கள் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு அரச சார்பற்ற சமூக அபிவிருத்தி நிறுவனங்கள், பெண்களுக்கு வருமானம் ஏற்படுத்தக் கூடியவகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பெண்களுக்கு ஏற்றவகையில் சிறுகைத்தொழில் நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து கிராம மட்டங்களில் பயிற்சி அளிக்க வேண்டும்.

கிராம மட்டங்களில் உள்ள சில பெண்கள் தமது சுய தொழில் வருமானத்துக்காக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறார்கள். ஆனால் அவற்றுக்கான சுகாதார விழிப்புணர்வுகளோ, கட்டட வசதிகளோ இல்லை. இதனால் அந்த உணவுகளை சுகாதார நிறுவனங்கள் தடை செய்யும் சந்தர்ப்பங்களும் உண்டு.

அரசியல் அறிவுகளை தெளிவுபடுத்துவதன் மூலம் அவர்கள் வாழ்வில் தீர்மானங்களை சுயமாக எடுக்க முடிகின்றது.

பாதுகாப்புக்கும், சிறுவர்களுடைய கல்விக்கும், உயர்வான சிந்தனைகளுக்கும் பெண்கள் அமைப்புகள் சிறந்த வழிகாட்டிகளாக அமைய வேண்டும்.- என்றார். (ச-311)

## ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக்.12

தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றில் கடமையாற்றி கடந்த ஒரு வருட காலத்தில் ஓய்வுபெற்ற 3 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், 4 அதிபர்கள், 12 ஆசிரியர்கள் ஆகியோர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

.வலயக் கல்வி அலுவலகத்தினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஆசிரிய தின விழாவில் இவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.கே.சத்தியேந்திரம்பிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:

**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்**

திருமதி வை.கணேசபிள்ளை, திருமதி ஆர்.பாலசுப்பிரமணியம்,திருமதி ச.கோகுலதாசன்.

**அதிபர்கள்**

மு.பாலசுப்பிரமணியம் (மட்டுவில் ம.வி), நா.அருட்சோதி (கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை) , ந.நவரத்தினராசா (வரணி ம.வி), ப.செல்லத்துரை (கைதடி கலை வாணி வித்தி).

**ஆசிரியர்கள்**

செல்வி.பா.புஷ்பராணி- (மட்டுவில் கமலாசினி வித்தி), ந.அருட்சோதிவர்ணன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.அரியதாஸ் (மட்டுவில் ம.வி.-பிரதி அதிபர்), திருமதி தி.இந்திரராசா (வரணி ம.வி), திருமதி தெ.கிருஷ்ணசாமி (மீசாலை வீரசிங்கம் ம.வி), திருமதி வி.சிவகுரு (மீசாலை விக்கினேஸ்வரா ம.வி), திருமதி த.சிவஞானசுந்தரம் (நாவற்குழி ம.வி), த.சரவணபவன் (மட்டுவில் ம.வி), எஸ்.ரி.இரத்தினம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி சி.பாலசுப்பிரமணியம் (கொடிகாமம் அ.த.க. பாடசாலை), திருமதி கே.குமாரசாமி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி வ.வைகுந்தநாதன் (மட்டுவில் சாந்தநாயகி). (ச-207)

# வடமாகாண ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

*(நேற்றையத் தொடர்ச்சி)*

தரம் 12 - கிறிசிகா நாகேஸ்வரன் கிறிஸ்ரி, (இளவாலை கன்னியர் மடம்), பிலோனி கமலினி மில்ஸ் (உடுவில் மகளிர் கல்லூரி), பி.ஜனந்தன் (வ/தமிழ் மத்தி மகா வித்தி).

தரம் 13 - ரி.நிரோஜினி (வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), அன்றுயா ஜெயநாதன் (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), குமரசாமி சுபரதன் (யா/ஹாட்லிக் கல்லூரி).

**உரத்து வாசித்தல்**

தரம் 3 - காயத்திரி சூரியகுமாரன் (சென். ஜோன் போஸ்கோ வித்தி), மதுமிதா சிவகுமாரன் (சென் ஜோன் போஸ்கோ வித்தி) அருள்செல்வன் கார்த்திஜேயன் (வ/தமிழ் மத்திய மகா வித்தி).

தரம்4 - ஆர்த்திகா திருக்குமார் (யா/ இந்து ஆரம்பப் பாடசாலை), டர்சிகா குகநேசன் (வ/ இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகாவித்தி), கீர்த்தனா ராஜமுகுந்தன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

தரம் 5 - ஆரோன் மெல்வின் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), பவதரணி கருணாதரன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), கிருசிகா ராஜமோகன் (ம/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**அபிநயப் பாடல்**

ஆரம்பப் பிரிவு (1-2) - 2007 (உடுவில் மகளிர் கல்லூரி), 2003 (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), 2008 (ம/சென்.சேவியர் மகளிர் கல்லூரி).

ஆரம்பப் பிரிவு (3-5) - 2028 (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), 2023 (யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), 2029 (ம/சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி).

**குழுப் பாடல்**

இடை நிலைப் பிரிவு (6-9) - 2047 (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), 2048 (ம/சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தி), 2045 (யா/மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை), 2044 (வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

உயர்தரப்பிரிவு (10-13) - 2062 (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), 2067 (உடுவில் மகளிர் கல்லூரி), 2064 (வ/இறம்பைக்குளம் மகளிர் மத்திய மகாவித்தி).

**திறந்த நாடகம்**

தரம் (3-13) - 2132 (வ/தமிழ் மகாவித்தி), 2130 (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), 2131 (கிளி/கிளிநொச்சி மகா வித்தி).

**கதை சொல்லல்**

தரம் 6 - ஜெகதீஸ்வரன் ஜெயதீவிகா(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), யோகேந்திரன் சம்பவி (யா/மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை), டிலக்சனா தமிழ்ச்செல்வன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

தரம் 7 - கோபிகா புவனேந்திரன் (யாழ்ப்பாணக் கல்லூரி), வித்யா நவரட்ணசிங்கம் (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மெசேல் பெனோ பெனடிற் ((யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மாதங்கி கோபாலகிருஷ்ணன் (யாழ்ப்பாணக் கல்லூரி).

தரம் 8 - நிவேதா நேசராஜன் (யாழ்ப்பாணக் கல்லூரி), உதய சங்கர் சங்கவி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பெலினி திருக்குமரன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆரணி பாலசிங்கம் (யா/இந்து மகளிர் கல்லூரி).

தரம் 9 - கார்த்திகா ரட்ணம் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) சாரகா கணேசகுமாரன் (யாழ்ப்பாணக் கல்லூரி), கருணாகரன் தனுசயன் (வ/தமிழ் மத்திய மகா வித்தி) விதுரா கனகலிங்கம் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**விவாதம்**

உயர்தரப் பிரிவு (10-13) - 2102 (ஹாட்லிக் கல்லூரி), 2104 (வ/தமிழ் மகா வித்தி), 2107 (யாழ்ப்பாணக் கல்லூரி).

*(முற்றும்)*

# வலி தர வேண்டாம்

வலிகாமம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்கள் முழுவீச்சில் நடந்து கொண்டிருந்தன. மாணவர்கள் சார்பில் நிகழ்வு நடத்தப்படுவதாகச் சொல்லப்பட்டாலும் நிறுவனத்தின் இயக்குநரே முன்னின்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

''எல்லா ரீச்சர்ஸுக்கும் கட்டாயம் நாலைஞ்சு மாலையாவது போடவேணும். இப்ப மழையில்லாத்தால பூப்பிடுங்கி மாலை கட்டுறது பிள்ளையளுக்கு கஷ்டமாயிருக்கும். அதால மாலையை ஓடருக்கு எடுப்பம். வழமை மாதிரி ரீச்சர்ஸுக்கு ஏதாவது அன்பளிப்பும் குடுக்க வேணும். அதைவிட எல்லாருக்கும் கூல்ரிங்க்ஸ், பிஸ்கட் குடுக்காட்டி நல்லாயிருக்காது'' நிர்வாக இயக்குநர் நிகழ்வுக்கான திட்டத்தை சொல்லிக் கொண்டேபோக அந்த நிறுவனத்தில் உயர் வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு வயிறு கலங்கத் தொடங்கிவிட்டது.

''இவ்வளத்துக்கும் எப்பிடியும் பத்தாயிரத்துக்கு கிட்டத் தேவைப்படுமே? என்பதே அவர்களின் பயத்துக்குக் காரணம். ஆனால் அதற்கும் நிர்வாக இயக்குநர் ஒரு திட்டம் வைத்திருந்தார். '' நான் சொன்னபடி நிகழ்வைச் சிறப்பாகச் செய்து முடிக்க நிறையச் செலவாகும். அதை ரியூட்டறி முழுக்கப் பொறுப்பேற்க முடியாது. அதுக்காண்டி பிள்ளையளிட்டையும் வசூலிக்கிறது சரியில்லை. அதால எங்கட ஏரியாவில இருக்கிற கடையளில ரீச்சர்ஸ்டேக்கு காசு தரச்சொல்லி கேப்பம். கட்டாயம் தருவினம். இந்த வேலையை நீங்கள்தான் முன்னுக்கு நிண்டு செய்யவேணும்''என்று சொல்லியவாறு ஓ.எல் மாணவர்களின் பக்கம் கையைச் சுட்டிக்காட்டினார் நிர்வாகி.

அதற்குப் பின்வந்த நாள்களில் ஓ.எல். மாணவர்களுக்கு கஷ்டகாலம்தான். குறித்த பகுதியில் உள்ள எல்லாக் கடைகளுக்கும்- ஒன்றுகூடத் தவறவிடாமல்- கையில் நன்கொடைக் கொப்பியோடும் வாயில் யாசக வார்த்தைகளோடும் மாணவர்கள் திக்விஜயம் செய்யத்தொடங்கினர்.

இந்த நிதி வசூலிப்புக்காக அந்தத் தனியார் கல்வி நிறுவனத்தில் விசேட சலுகைகளும் செய்யப்பட்டன. நிதி சேகரிப்பில் ஈடுபடும் மாணவர்களுக்கான பல வகுப்புகள் இரத்துச் செய்யப்பட்டன அல்லது அரைவாசி நேரம் மட்டுமே போதிக்கப்பட்டன.

ஆனால் மாணவர்கள் வகுப்புக்குக் கட்டாயம் வர வேண்டும். அங்கு மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு ஏரியாவாகப் பிரித்து அவர்களை வழியனுப்பி வைப்பார் நிர்வாகி. பலிக்கடாக்கள் போல தலையாட்டிவிட்டு மாணவர்களும் 'வசூல்ராஜா'க்களாக மாறி, நிதி சேகரிக்கச் செல்வர். ஆனால் கடைக்காரர்களிடம் பணம் பெறுவதென்பது கல்லில் நார் உரிப்பதை விடவும் கடினமானது. ஏன்? எதுக்கு? எவ்வளவு? இதால எங்களுக்கு என்ன லாபம்? உங்கட வாத்திமாருக்கு நாங்கள் ஏன் காசு தரவேணும்? முந்தியெல்லாம் இப்பிடியோ செய்யிறனீங்கள்? என்று ஆயிரத்தெட்டுக் கேள்விகள். இவ்வளவற்றுக்கும் மாணவர்கள் பொறுமையாகப் பதில் சொன்ன பின்னர் கடைசி அஸ்திரத்தை கடைக்காரர்கள் எய்வார்கள்.

தம்பியவை! நான் ஒண்டும் செய்ய ஏலாது. நான் சம்பளத்துக்குத் தான் வேலை செய்யிறனான். எதுக்கும் பொஸ் வந்த பிறகு வாங்கோவன் என்று வழியனுப்பி வைக்கமுயற்சிப்பார்கள். பல கடைகளில் இந்த சம்பளத்துக்கு வேலை செய்யிறன் என்ற வாசகத்தை அந்தக் கடையின் முதலாளிமாரே சொல்வதுண்டு. அப்படியும் அழுங்குப் பிடியில் காசுவாங்காமல் போக மாட்டோம் என்கிற கணக்கில் மாணவர்கள் காத்திருந்தால் வேறுவழியின்றி காசு கொடுத்தவர்களின் பட்டியலை வாங்கி நோட்டமிட்டுவிட்டு, கடைசியாக எந்தக் கடைக்காரர் காசு போட்டாரோ அவர் கொடுத்த தொகைக்குச் சற்றும் அதிகமாகாத தொகையை எழுதிவிட்டு, '' அப்பன்! காசுக்கு நாளைக்கு வாங்கோ'' என்று ஒற்றைச் சொல்லை உதிர்த்துவிட்டு கடை வேலைகளில் மூழ்கிவிடுவர். அதன்பிறகு பலநாள்கள் கடந்த பின்னர்தான் காசு கொடுக்கப்படும். அதுவரை அலைய வேண்டும்.

இப்படி அலைந்து, அவமானப்பட்டு, வியர்வை சிந்தி பாடவேளைகளைத் தியாகம் செய்து, மாணவர்கள் சேகரித்துக் கொடுத்தகாசில் கிறாண்டாக ஆசிரியர் தினத்தை தன் நிறுவனத்தில் கொண்டாடி முடித்துவிட்டார் நிர்வாகி.

எங்கட போட்டி ரியூசன்காரர் பொறாமைப் படுகிற அளவுக்கு பெரிசா விழாவைச் செய்துபோட்டம் என்று கொலரையும் தூக்கிவிட்டுக் கொண்டார் அவர். இத்தனைக்கும் மாணவர்களின் உழைப்பை அவர் பெரிதாக எடுக்கவேயில்லை.

ஆசிரியர் தினத்துக்கு மாணவர்கள்தானே பாடுபடவேண்டும் என்கிற சிந்தனையால்தான் அவர் மாணவர்களின் செயலை மறந்தும்கூட விழாவில் பாராட்டவில்லைப் போலும்.

இதேபோன்று பல பாடசாலைகளில்- குறிப்பாக நகரின் முன்னணிப்பாடசாலைகளில் - ஆசிரியர் தினத்துக்காக மாணவர்களிடம் ஒரு குறிப்பிட்டதொகை அறவிடப்பட்டுள்ளது.

உண்மையில் இத்தகைய செயல்கள் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதற்கான நோக்கத்தையே சிதைத்துவிடும் தன்மை கொண்டவை. தங்களுக்கு கல்வியெனும் கடலைப் புகட்டிய ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்காக, அவர்களை மதித்து வணங்கி, மாலையிட்டு, அவர்களின் துணை எப்போதும் தமக்குக் கிடைக்க வேண்டுமென அவர்களிடம் ஆசி பெறுதல் அன்றைய தினத்தின் முக்கிய நோக்கமாகும். ஆனால் ஆசிரியர் தினத்துக்காக கடை, கடையாக ஏறி இறங்கி பணம் வசூலித்துக் கொண்டு வாருங்கள் என்றோ, இல்லா விட்டால் இவ்வளவு காசை ஆசிரியர் தினத்துக்காகக் கட்டுங்கள் என்பதோ மாணவர்களிடத்தே இந்த ஆசிரியர் தினம் ஏன்தான் வருகுதோ? இது வராமல் விட்டால் நாங்கள் நிம்மதியா இருக்கலாம் என்ற எண்ணத்தைத் துளிர்க்கச் செய்துவிடும். ஆடம்பர விழாக்களையோ, ரொபி மாலைகளையோ அல்லது பரிசுகளையோ ஆசிரியர்கள் வேண்டுவதில்லை. அவர்கள் மாணவர்களின் அன்பையும் மரியாதையையுமே வேண்டி நிற்கின்றனர்.

எனவே ஆசிரியர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக மாணவர்களின் முதுகுகளில் தேவையற்ற சுமைகளை ஏற்றாமல், அவர்கள் இதயபூர்வமாக தமது கல்வித் தெய்வங்களுக்கு மரியாதை செலுத்தும் சூழலை அதிபர்கள் மற்றும் தனியார் நிறுவன நிர்வாகிகள் ஏற்படுத்த வேண்டும். ★

கோணல் கோலங்கள்

**ஓடுகாலி**


# ஆறாம் ஆண்டில் அளப்பிலாத் துயரில்



அமரர் கணபதி இராசதுரை B.Ed, MA, SLPS-1

முன்னாள் அதிபர், யாழ்/ மத்திய கல்லூரி (1996 - 2005)

தோற்றம் : 28.09.1947

மறைவு : 12.10.2005 (விஜயதசமியில்)

தேவைகள் அழைக்கும் தேவதூதனே

கல்விப் புலத்தில் கணபதி இராசதுரை
சொல்லிச் செயற்பட்ட செயற்பாட்டுக் காலம்
நல்லிதயம் கொண்டோரால் அலசும் ஆவணமாய்
துல்லியமாய் எம்மவர்க்கு என்றும் வழிகாட்டும்

அழிந்த மத்தியத்தை அபார முயற்சியினால்
தெழிந்த திட்டமதால் புனரமைத்த செயல்திறனும்
நெழிந்த பாத்திரமாய் வடபுலத்தில் கல்விநிலை
மொழிந்த கருத்துரைகள் உயர்த்திவிட்ட புதுமை கண்டோம்

வளப்படுத்தல் முறைகளென்று பலதிட்டம் இன்று உண்டு
களத்தில் நீர் காட்டியது அன்றே நாம் தெரிந்து கொண்டோம்
தளத்தில் திட்டமிட்ட நவோதய முறைகள் போல்
குளத்தில் தாமரையாய் மத்தியத்தில் நாம் கண்டோம்

தூரநோக்கு கொண்டவராய் துடிப்புடன் செயற்பட்ட
வீரமிகு இராசதுரை வீழ்த்தப்பட்ட வகையறிந்து
ஈரவிழி காயாமல் இன்றும் இருக்கின்றோம்
தீரர்கள் தேவையென வரலாறு அழைக்கிறது

கோவைகள் தாங்குகின்ற சுயதேவை ஆளணிகள்
பாவைகள் ஆடல்போல் ஆடிடும் காலமதில்
கூவைகள் கூவுகின்றார் ஓடி வருவீரா...?
தேவைகள் அழைக்கின்ற தேவதூதராய்.....

கல்வி சமூகமது சொல்லிய வார்த்தை இது
சொல்ல முடியாத சோகம் சுமக்கின்ற
வெல்லமுடியாத வீழ்ச்சியொன்றைக் கண்டு நிற்கும்
நல்லவரை நம்பிநின்ற குடும்ப உறவுகள்

சோகம் சுமந்து நின்று ஓரவிழி நீர்கசிய
தாகம் தனைக் காட்டும் உங்கள் முக ஞாபகங்கள்
வேகமது தருவதுவாய் வளர்ப்பு முறை எமக்குதவும்
பாகமாய் அமைந்தவரே பூசிப்போம் வாழும்வரை.

குடும்பத்தினர், கல்விச்சமூகத்தினர், நட்பினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேசிய ரீதியில் தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் நல்லாசிரியராக தேர்ந்தெடுக்கப்பட்டு 06.10.2005 இல் அன்றைய ஜனாதிபதியிடமிருந்து - ''வித்தியா கீர்த்தி ஸ்ரீ சம்மனா'' விருது பெற்ற எமது பாடசாலை ஆசிரியை

திருமதி

**செல்வரத்தினம் மனோன்மணி**

(சிரேஷ்ட ஆசிரியர்)

அவர்களையும்



தேசிய மட்டத்தில் தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் நல்லாசிரியராக தெரிவுசெய்யப்பட்டு 06.10.2011 அன்று ஜனாதிபதியிடமிருந்து - ''பிரதீபா பிரபா'' விருது பெற்ற எமது பாடசாலை ஆசிரியை

திருமதி **கதிர்காமநாதன் கனகேஸ்வரி**

(BA, Dip. in Ed)

அவர்களையும் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று கல்விச் சமூகத்தை உயர்த்திட வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை

வித்தியாலயம் - வரணி.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

"ஆசிரியர் பிரதீபா விருது"

2011 வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுள் சிறந்த ஆசிரியருக்கான விருதினைப்பெற்ற சங்கீத ஆசிரியை

**திருமதி கலைவாணி-புஸ்பராஜன்**

அவர்கள்அலரிமாளிகையில் மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களால் கௌரவிக்கப்பட்டமையையொட்டி அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம். இன்று தனது பிறந்த தினத்தை கொண்டாடும் ஆசிரியை அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



யா/தேவரையாளி

இந்துக் கல்லூரி, கரவெட்டி

வாழ்த்துபவர்கள்:

அதிபர், ஆசிரியர்கள்

ஊழியர்கள், மாணவர்கள்

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011**

**சித்தியடைந்த மாணவர்களுக்கான**

### பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு **16.10.2011 ஞாயிற்றுக்கிழமை** பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள **சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்)** நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இயக்குநர்.**

## மரண அறிவித்தல்

திருமதி **சிவஞானசுந்தரம் நேசமணி**



மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 359/34 நல்லலெட் சுமி அவெனியூ, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞான சுந்தரம் நேசமணி நேற்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞான சுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம்-மங்களம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-காசுபதி தம்பதிகளின் அன்பு மருமகளும் அமிர்தசிங்கத்தின் அன்புச் சகோதரியும் சிவசேகரம் (ரூபின்ஸ் நிறுவனம்), ஞானசேகரம் (ஆசிரியர், யாழ்.கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்) சிவராகினி, பத்மா ஆகியோரின் அன்புத்தாயும் வசந்தா, பொற்சிலை, வசந்தகுமார் (சிங்கர்), ராம்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் சந்திரமதியின் அன்பு மைத்துனியும் Dr.மனோராஜின் (சுகாதார வைத்திய அதிகாரி, கண்டி-பன்னல) அன்பு மாமியும் மெக்சி பாரதா, ரூபின் பிரகாஸ் விஜித் பாரத், விஜித் சரண்யா, லதாங்கி ரூபினி, கிசோக்குமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

357/34, நல்லலெட்சுமி அவெனியு,
கோயில் வீதி,நல்லூர்.

**தகவல்:**
குடும்பத்தினர்.


### அவுஸ்திரேலியா செல்ல விரும்புகின்றீர்களா?

உங்களுக்குரிய பூரண ஆலோசனைகள் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திசைகாட்டி**

(முன் மாதிரியான ஆலோசனை நிறுவனம்)

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண்வீதி,யாழ்ப்பாணம்.
0214914527


## விளை நிலத்தின் வித்தகரை பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. செல்லத்துரை தங்கராஜா

தேசிய விவசாய வியாபாரச் சபையினால் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 28.08.2011 அன்று நடைபெற்ற சிறந்த விவசாயிகளுக்கான விருது வழங்கும் விழாவில் யாழ்.மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்காகப் பாராட்டி வாழ்த்துவதோடு தொடர்ந்தும் நலமோடும் வளமோடும் முயற்சியுடன் உயர்ச்சி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய்

துரைசிங்கம் குடும்பத்தினர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2011 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவின் போது கௌரவ கலாநிதி பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட செஞ்சொற் செல்வர்

### ஆறு. திருமுருகன்

அவர்களைப் பல்லாண்டு காலம் சிறப்புற வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**

பெறாமக்கள், மருமக்கள்,
மயூரேசன் - லாவண்யா,
கமலகுமார் - கேதுஷா,
வி. ஸ்ரீவிசாகன், வி.ஸ்ரீவித்தகன்,
கு.தாயினி, கு.விசாரதன், கு.வேதப்பிரியன்,
ந.உசேனி, ஆ.விதூஷன், ஆ.தர்மிதா,


நிறுவனங்கள் தமது கணக்குகளை கணனிமயப்படுத்தியுள்ளன.

கணக்கியல்துறை மாணவர்களே!

உங்கள் தெரிவு நிச்சயமாக கணனிக்கணக்கியலாகவே இருக்கவேண்டும்.

நீங்களும் கணனிக்கணக்கியலில் வல்லுனராக இன்றே இணையுங்கள்....

சகலவகையான கம்பனிகணக்குகளையும் கணனிமயப்படுத்தும்படியான 100% பயிற்சியளிக்கப்படும்.

**DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING**

உலகின் முன்னணியிலுள்ள **Accounting Software** களான
**Quick Book + ACCPAC + MYOB / Tally** ஊடாக..

இக் கற்கைநெறியினை கணக்கியல்துறை மாணவர்கள், பல்கலைகழக, உயர்தொழினுட்பகல்லூரி மாணவர்கள், கணக்கியல்துறையில் வேலைசெய்வோர், வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், கணக்கியல்துறை ஆர்வலர்கள் அனைவரும் தொடரலாம்.

வார/வாரஇறுதி வகுப்புக்கள்

அலுவலர்களிற்கான விசேட மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பமாகிறது.

**COMPUTER EXPRESS**
No 15, Sirampiyadi Lane, (Off Stanly Rd)
Jaffna. 0212228250, 0774907444

வகுப்புக்கள் ஆரம்பம்:
15/10/2011 } 11AM
16/10/2011 } 04PM


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
ஞானசேகரம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சிவஞானசுந்தரம் நேசமணி**

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி கழகம்,**
**யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.**

# செய்தித்துளிகள்

களனி - உதான மாவத்தைமுனையிலுள்ள களனி கங்கையில் மூழ்கி மூவர் உயிரிழந்துள்ளனர். 19, 27 மற்றும் 59 வயதுடைய மூவரே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கியுள்ளனர். இவர்களைக் காப்பாற்ற நேற்று முன்தினம் காலை சென்றவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

* * *

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் சாட்சிகளைப்பெற கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் அறிக்கை ஒன்றை வெல்லம்பிட்டிய பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றில் சமர்ப்பித்ததையடுத்து எதிர்வரும் 20ஆம் திகதி சாட்சியங்களைப் பதிவுசெய்ய சாட் சியங்களை அன்றைய தினம் முன்னிலைப் படுத்துமாறு நீதிமன்றம் பொலி ஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

* * *

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் கண்காணிப்பதற் காக இலங்கை வந்திருந்த இந்தியக் குழு, இந்தத் தேர்தல் தொடர்பில் அறிக்கை ஒன்றை நேற்றுமுன்தினம் தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

தேர்தலைக் கண்காணிக்கவென தேர்தல்கள் ஆணையாளரின் அழைப்பின் பேரில் அறுவர் அடங்கிய இந்தியக் குழு இலங்கைக்கு வருகை தந்திருந்தது.

* * *

காலி, மீட்டியாகொட, ஆழிப்பேரலை நினைவு இடத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மீட்டியாகொட பொலிஸார் இதுகுறித்த விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

* * *

தலைமன்னார், புதுக்குடியிருப்பு இதன் கடற்கரை ஓரத்தில் கரை யொதுங்கிய நிலையில் மீனவர் ஒரு வரது சடலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த 63 வயதுடைய குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்

* * *

மஞ்சள் நிறக் கோட்டின் ஊடாக வீதியைக் கடக்கத் தவறிய 900பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான மெக்ஸி புறொக்டர் தெரிவித்தார். மஞ்சள் கோட்டின் ஊடாக வீதியைக் கடக்கத் தவறுபவர்களுக்கு ஆயிரம் ரூபா முதல் மூவாயிரம் ரூபாவரை அபராதம் விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

* * *

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் புதிதாகப் பாதுகாப்பு சமிக்ஞை கட்டமைப்பு ஒன்றை அமைக்க ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## புத்தகக் கண்காட்சி

தென்மராட்சி, ஒக்.12

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை பொது நூலக மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

யாழ். ஆல் சிலோன் டிஸ்ரிபியூடர்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் கண்காட்சியில் புத்தகங்கள் விற்பனையும் இடம்பெறும். வாசிப்பு கலாசாரத்தை மேம்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கல்விமான்கள் புத்தகப் பிரியர்கள், வாசகர்கள் ஆகியோரை கலந்து கொண்டு பயன் பெறுமாறு தேசிய வாசிப்பு மாத செயற்பாட்டுக்குழுத் தலைவரும் நகரசபை தவிசாளருமான சி. தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (ச-207)

# வளம் குறைந்த காலத்திலும் கற்பித்தலில் திறம்பட செயலாற்றிய அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



அல்லைப்பிட்டியில் சைவ சமயத்தை புகட்டும் நோக்கில் உரு வானது தான் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

இந்தப் பாடசாலை 1934 ஆம் ஆண்டு அல்லைப்பிட்டியைச் சேர்ந்த பொன்னம்பலம் சிதம்பரநாதன் என்பவரால் அமைக்கப்பட்டதாகும். அன்றைய காலம் தொடக்கம் சிறப்பாக இந்தப் பாடசாலை செயற்பட்டு வந்தது.

1990 இல் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக இந்தப் பாடசாலையின் கட்டடங்கள் மற்றும் ஆவணங்கள் முற்றாக அழிவடைந்தன.

இதனால் பாடசாலை வளங்களை இழந்து பொலிவிழந்து விளங்கியது. இந்த நிலையில் பாடசாலைக்கு அயலில் உள்ள இந்திரசித் என்பவரின் வீட்டில் தொடர்ந்து பாடசாலை இயங்கியது.

இடம்பெயர்ந்த மக்கள் அல்லைப்பிட்டிக்கு மீளக் குடியேறத் தொடங்கியதும் இந்தப் பாடசாலையின் மாணவர்களின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

1934 இல் இந்துப்போட்டின் (சைவ வித்தியா விருத்திச் சங்கம்) உதவி பெற்று இயங்கிய இந்தப் பாடசாலையை 1960 இல் அரசு பொறுப்பேற்றுக்கொண்டது.

இதனை அடுத்து பல கட்டடங்கள் அமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் திறப்பாக இடம்பெற்றன. மாணவர்கள் இணைப்பாடவிதானசெயற்பாடுகள் மற்றும் விளையாட்டுக்களிலும் சிறமையான பெறுபேறு களைப் பெற்றனர்.

அத்துடன் தேசிய மட்டத்திலும் சிறந்த பெறுபேறுகளை அடைவதில் கவனம் செலுத்தப்படு வதாகவும் அதிபர் திருச்செல்வம் கூறுகின்றார்.

மீலாத்தின விழாவை முன்னிட்டு யாழ். ஒஸ்மானியத் கல்லூரியில் நடைபெறும் மீலாத்தின நிகழ்வுகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை வழங்குகிறார்கள். இங்குள்ள மாணவர்களின் வில்லிசை நிகழ்வுகள் அந்த விழாவில் கலந்து கொள்ளும் முஸ்லிம் மற்றும் பிரமுகரிகளி டையேபெரும் வரவேற்பைப் பெறுகின்றது என்பதில் மாணவர்களிடத்தில் ஒரு மகிழ்ச்சி தென்படுகின் றது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் உதவிகளுடன் வெளிநாடுகளில் உள்ள சிலரும் உதவுகின்றனர். பெற்றோரை இழந்த இரண்டு பிள்ளைகளின் கல்விக்காகக் கோப்பாய் ஆசிரியர் கலா சாலை முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கர சால் ஒவ்வொரு மாதமும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் அவரது பங்கு முக்கிய இடம் வகிக்கிறது. பாடசாலைக்கான பெற்றோர், ஆசிரியர் சங்கமும் இருக்கிறது. எனினும் அவர்கள் பெருமளவில் கவனம் செலுத்துவதாக இல்லை. வெளிநாட்டில் உள்ள அன்பர்களின் உதவியுடன் இரண்டு தொண்டர் ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் இறுதித் தவணைப் பெறுபேறுகளின் திறமைச் சித்திக்கான நிதியுதவிகளும் வழங்கப்படுகின்றது.

இந்தப் பாடசாலைக்கான விஞ் ஞான் கூடம் கடந்த ஜூலை மாதத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை, நூலகம், கணினி அறை, செயற் பாட்டறை என்பன துரிதமாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வளம் குறைந்த காலத்திலேயே திறமையான நிலையில் இருந்த கற்பித்தல் செயற்பாடுகள் இன்றைய நிலைக்கு ஏற்ப மேலும் விருத்தியடைய வேண்டியது அவசியமானதாகும். எனவே கல்வித் திணைக்களமும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் அல்லைப்பிட்டியின் எதிர் காலத்துக்காகச் சிந்திக்க வேண்டிய மக்களும் தமது கடமைகளை இந்தப் பாடசாலைக்கு வழங்க முன்வர வேண்டும்.

**லக்ஸ்மன்**

*(முற்றும்)*

## இதயம் கனிந்த ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்





**பிறப்பு:**
*24.10.1943*

**இறப்பு:**
*12.10.2009*

**சிங்கராஜா அலோசியஸ் தர்மராஜா**
(S.D.W. அம்பாறை. கச்சேரி)

'இன்றே நீ என்னுடன் வான்வீட்டில் இருப்பாய்'
அன்பின் திருவுருவாய் அரவணைத்துக்காத்த - ஆளுர்
குலவிளக்கே அணையாத ஒளி விளக்கே
ஈராண்டு என்றாலும் இருநூற்றாண்டுகள்
சென்றாலும் என்றும் ஆறாது உங்கள் நினைவு
நாள்தோறும் தவிக்கின்றோம் உங்கள் பிரிவை எண்ணி
நல்வழிகாட்டி நாள்தோறும்
எமையெல்லாம் வழிநடத்தி வந்த - அன்புத் தந்தையே
என்றும் எமக்கு நல்வழி காட்டுமையா
எமக்காய் இறைவனிடம் மன்றாடுமையா - நீர்
என்றும் இறைவன் பாதம் தன்னில் அமர்ந்திருக்க
நாள்தோறும் உமக்காய் இறைஞ்சுகின்றோம்.

17,Dr, சுப்பிரமணியம்,
சுன்னாகம்,

**என்றும் உங்களின் இனிய நினைவுகளுடன்:**
*மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.*

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள்- 2010

1. வணிக முதற் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக முதற் தேர்வு - 2010 (பழைய பாடத்திட்டம்)
3. வணிக இரண்டாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
4. வணிகமாணி பகுதி - I- 2010 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக மூன்றாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
6. வணிகமாணி பகுதி - II 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்)
7. வணிகமாணி பகுதி - III - 2009 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 03.11.2011 (வியாழக்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 01 | வணிக முதற்தேர்வு - 2010 (புதியபாடத்திட்டம்) | 03.11.2011- 12.11.2011 | 9.00 - 12.00 |
| 02 | வணிக முதற் தேர்வு- 2010 (பழைய பாடத்திட்டம்) | 03.11.2011- 12.11.2011 | 9.00 - 12.00 |
| 03 | வணிக இரண்டாம் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்) | 14.11.2011- 21.11.2011 | 9.00 - 12.00 |
| 04 | வணிகமாணி பகுதி I - 2010 ( பழைய பாடத்திட்டம்) | 14.11.2011- 21.11.2011 | 9.00 - 12.00 |
| 05 | வணிக மூன்றாம் தேர்வு- 2010 (புதிய பாடத்திட்டம்) | 22.11.2011- 28.12.2011 | 9.00 - 12.00 |
| 06 | வணிகமாணி பகுதி -II 2009& 2010 (பழைய பாடத்திட்டம்) | 22.11.2011- 28.11.2011 | 9.00 - 12.00 |
| 07 | வணிகமாணி பகுதி- III- 2009 (பழைய பாடத்திட்டம்) | 29.11.2011- 05.12.2011 | 9.00 - 12.00 |

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்ட வணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 24.10.2011 திங்கட்கிழமை தொடக்கமும் பழைய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 27.10.2011 வியாழக்கிழமை தொடக்கமும் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
10.10.2011

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்,பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புழுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது. வவுனியா-19,20 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு-021-2220288.

தலை முடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

Head Office Colombo - 011 4874854

# சவேந்திர சில்வாவுக்கு எதிராகத் தாக்கலான வழக்குக் குறித்து அரசு விளக்கும்

## மொஹான் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.12
ஐ.நா. சபையின் இலங்கைக்கான பிரதி நிரந்தரப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக இலங்கை அரசு விளக்கமொன்றை முன்வைக்கவுள்ளதாக அமைச்சரவையின் சட்ட ஆலோசகர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் உத்தியோகபூர்வ நடவடிக்கை தொடர்பாகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)



கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரையின் மணிவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை கலாநிதி த.கலாமணி மக்கள் வங்கி கொடிகாமம் கிளையின் முகாமையாளர் க.சிறீதரன் ஆகியோர் இணைந்து மணிவிழா மலரை வெளியிட்டு வைக்கின்றனர். (121)

# சொப்பிங் பை கட்டுக்களில் பைகளின் தொகை குறைவு

## பாவனையாளர்கள் விசனம்

கொழும்புத்துறை,ஒக்.12
யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்பட்டு வரும் சொப்பிங் பை கட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ள தொகையை விட குறைவான பைகளே காணப்படுவதாக வர்த்தகர்களும், பாவனையாளர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சொப்பிங் பை கட்டு ஒன்றில் 100 பைகள் எனக்குறிப் பிடப்பட்டுள்ள போதிலும் அவற்றுள் 90 இற்கும் குறை வான பைகளே காணப்படுகின்றன.

இவ்வாறு பைகள் குறைத்து பொதி செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டதையடுத்து சுண்டுக்குளிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கிராம அலுவலர் ஒருவர் தாம் வாங்கிய சொப்பிங் பைக் கட்டில் உள்ள பைகளைக் கணக்கிட்டார். 88 பைகளே காணப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சில சொப்பிங் பை உற்பத்தி நிறுவனங்கள் யாழ்ப்பாணத்துக்கென்று இவ்வாறு குறைத்துப் பொதி செய்து அனுப்புகின்றனவா? என்று பாவனையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அதே வேளை சில்லறைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் சில கம்பனிகளின் இவ்வாறான மோசடியால் தாம் நட்டத்தை சுமக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (ச-135)

# புதிய தலைவர்களின் பெயர்களைத் தரக் கோரிக்கை

கொழும்பு,ஒக்.12
உள்ளூராட்சி சபைகளுக்கான தலைவர்களின் பெயர்களை இன்று புதன்கிழமை தேர்தல் செயலகத்துக்கு அறிவிக்குமாறு சம்பந்தப்பட்ட கட்சிகளின் செயலாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேயர், பிரதிமேயர், தலைவர், உப தலைவர் ஆகிய பதவிகளுக்காக நியமிக்கப்படுகின்றவர்களின் பெயர்களைத் தேர்தல்கள் செயலகத்துக்கு அனுப்பிவைக்க அந்தந்தக் கட்சிகளின் செயலாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஏ.எஸ். பீ.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அனைத்துப் பெயர்களையும் உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலை இவ்வார இறுதிக்குள் வெளியிட முடியும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ச-சி)

# போதைப்பொருள் பாவிப்போரை கணக்கெடுக்க நடவடிக்கைகள்

கொழும்பு, ஒக்.12
போதைப்பொருள்களை அதிக அளவில் பாவிப்போர் குறித்த கணக்கெடுப்பொன்றை மேற்கொள்வது குறித்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு கவனம் செலுத்தி வருகிறது.

பொலிஸ் நிலையங்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மட்டத்திலிருந்து இதுகுறித்த தகவல்களைத் திரட்டி உரிய கணக்கெடுப்பொன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு கணக்கெடுப்பு இதற்கு முன்னர் எந்தவொரு நிறுவனத்தாலும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தக் கணக்கெடுப்பு மூலம் நாட்டில் பயன்படுத்தப்படும் போதைப் பொருளின் அளவு குறித்து தெரிந்து கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் மட்டும் 142 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்த போதிலும் போதைப் பொருள் பாவனை தொடர்ந்து இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் நாட்டுக்குள் போதைப் பொருளைக் கடத்திவரும் நடவடிக்கைகள் தொடர்வதாக நம்ப முடிகிறது என்று பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ச)

# போலி நாணயங்களை விற்றவர் கைது

கொழும்பு,ஒக்.12
புதையலில் இருந்து பெறப்பட்டது எனக்கூறி போலி தங்க நாணயங்களை விவசாயி ஒருவருக்கு கொடுத்து அவரிடமிருந்து ஐந்து லட்சம் ரூபா பணத்தையும் ஓட்டோ ஒன்றையும் வாங்கினார் என்ற சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக அரலகங்வில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் ராஜமந்திரி தெரிவித்துள்ளார்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

Galaxy Cabs
Call us 021 - 3201201
35/= Per km

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
முகப்பருக்களுக்கு
International Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது.
வவுனியா-19,20 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078, 011-2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021-4923416, 021-2220288.
Head Office Colombo - 011 4874854

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/செட்டிபுலம் அ.த.க.பாடசாலை அதிபர்
C.F.சேவியர்
B.A.(Hon),PG Dip-in Edu.,
PG Dip-in Pub. Adm, M.Ed.
அவர்கள் ஜனாதிபதியால் அதிபர்கள் சேவையைக் கௌரவித்து வழங்கப்பட்ட 'ஆசிரியர் பிரதீபா பிரபா - 2011 விருது பெற்றுக்கொண்டமையை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/செட்டிபுலம் அ.த.க.பாடசாலை.

இலவசம்.....இலவசம்.....இலவசம்....

இலங்கையில் முதன் முறையாக நவீன இயந்திரங்களின் உதவியுடன் கரிஷ்மா அல்பத்தினை (With out cover) இலவசமாக கட்டி பெற்றுக்கொள்ளலாம்.
பிரதியாக்கங்களிற்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.







Befor : Rs. ~~50000~~ After : Rs.10000

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17,ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
தொ.இ. 021 222 1358

# முருகன், சாந்தன், பேரறிவாளன் வழக்கை உச்சநீதிமன்றுக்கு மாற்ற தமிழக அரசு எதிர்ப்பு


ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் மேன்முறையீட்டு மனுக்களை சென்னை உயர் நீதிமன்றத்தில் இருந்து உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றவேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்குத் தமிழக அரசு, உச்ச நீதிமன்றில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கைதிகள் மூலமும் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த கருணை மனுவின் மீதான தீர்ப்பு ஜனாதிபதியால் 11 வருடங்கள் தாமதிக்கப்பட்டுள்ளன என்ற காரணத்தின் அடிப்படையிலேயே அவர்கள் இந்தமனுவைசென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

தமிழ்நாட்டின்மேலதிக சட்டவாதி குரு கிருஷ்ணகுமார், மூவரின் இந்த மனுவை உயர் நீதிமன்றத்திலிருந்து வெளியே மாற்ற அனுமதிக்கக்கூடாது என வாதாடினார். நியாயமானதும், சாதாரணமானதுமான விசாரணையொன்றை மாநிலத்தில் நடத்துவதற்கான சூழ்நிலை சீர்குலைந்துள்ளது எனவும், மிதமிஞ்சிப் போயுள்ளது எனவும் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை அவர் மறுத்தார்.

அத்துடன், மனுதாரரான எல்.கே.வெங்கட், இந்த வழக்கு விசாரணையை சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் எனத் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரரின் சட்ட அந்தஸ்து பற்றி சந்தேகம் எழுப்பினார்.

மரண வரிசையில் இருக்கும் மூன்று கைதிகளினதும் சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ராம் ஜேட்மலானியும் இந்த வழக்கு மாற்றப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். சில வழக்குகளை இவ்வாறு மாற்றம் செய்வதற்கான 139'ஏ' ஷரத்தின்படி இத்தகைய மாற்றங்களைச் செய்யக் கூடிய அதிகாரம் இந்திய சட்டமா அதிபருக்கு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே உண்டென ராம் ஜேட்மலானி சுட்டிக்காட்டியிருந்தார்.

மனுதாரரான வெங்கட்டின் சட்டத்தரணி எல்.நந்தகுமார், மிதமிஞ்சிய விரோதமான - சீர்குலைவான - சூழ்நிலை மாநிலத்தில் நிலவும்போது சென்னை உயர் நீதிமன்றம் நியாயமானதும், சாதாரணமானதுமான விசாரணையை நடத்த முடியாது என வாதிட்டார்.

எல்லாத் தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதியரசர்கள் ஜி.எஸ்.சிங்கில் மற்றும் எஸ். ஜே.முக்கோ பாத்கயா இருவரும் இந்திய அரசு ஒருவார காலத்துக்குள் பதில் சத்தியக் கடதாசியை (Counter Affidavit) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தர விட்டதுடன், வழக்கின் மேலதிக விசாரணையை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (வ)

## கனிமொழிக்கு பிணை கிடைக்க வாய்ப்பு

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைதான கனிமொழியின் பிணை மனுவுக்கு சி.பி.ஐ. எதிர்ப்புத் தெரிவிக்காததால் பிணை கிடைக்க வாய்ப்புள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கனிமொழி டில்லி சிறப்பு நீதிமன்றத்தில் பிணை மனு கோரியுள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதி விசாரணைக்கு வருகிற நிலையில் கனிமொழியின் பிணை மனு மீது சி.பி.ஐ தரப்பில் எந்தவித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை.

இதனால் இந்த வழக்கில் இருந்து கனிமொழிக்கு பிணை கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்று தெரிகிறது.

முன்னதாக கனிமொழியின் சட்டத்தரணி டில்லி சிறப்பு நீதிமன்றத்தில் கனிமொழி ஒரு பெண் என்பதாலும், சிறு வயதில் ஒரு மகன் இருப்பதாகவும் அவருக்கு இந்த வழக்கில் பிணை வழங்கவேண்டும் என்று மனுத்தாக்கல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மீனவர் தாக்குதலைக் கண்டித்து பிரதமருக்கு முதல்வர் கடிதம்

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதலை நிறுத்தக்கோரி பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதி உள்ளார்.

அதில் அ.தி.மு.க ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது 16 முறை தாக்குதல் நடத்தி உள்ளது. இந்திய வெளியுறவு செயலாளரின் இலங்கைப் பயணத்தின் போதும் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றுள்ளது.

மண்டபம் கடற்பகுதியில் மீன் பிடித்தோரை இலங்கை கடற்படை விரட்டி அடித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை அரசிடம் இந்தியா கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

## கசாப்பின் மரண தண்டனைக்கு இடைக்காலத் தடை

டில்லி, ஒக்.12

கடந்த 2011 ஆம் ஆண்டில் மும்பையில் இடம்பெற்ற தாக்குதல் வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாபின் மரண தண்டனையை நிறைவேற்ற உச்ச நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்துள்ளது.

மும்பை தீவிரவாத தாக்குதல் வழக்கில் கடந்த மே மாதம் பாகிஸ்தான் தீவிரவாதியான அஜ்மல் கசாப்புக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (வ)



டில்லிக்கு வருகை தந்த செக் குடியரசின், வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் மார்ட்டின் குக்கார்கை, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா வரவேற்றார்.

## தாஜ்மஹாலுக்கு ஆபத்து இல்லை

### தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்து



உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் தாஜ்மஹால் இன்னும் 5 ஆண்டுகளில் அழிந்துவிடும் என்று நிபுணர்கள் குழு தெரிவித்ததற்குப் பதிலாக தொல்பொருள் ஆய்வுக் குழு தாஜ்மஹாலுக்கு ஆபத்தில்லை என்று தெரிவித்துள்ளது.

அண்மையில் இங்கிலாந்து பத்திரிகையில் வெளியான கட்டுரையில் தாஜ்மஹாலில் வெடிப்பு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறது. இன்னும் 5 ஆண்டுகளில் தாஜ் மகால் இடிந்து விடும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

பாரதீய ஜனதா கட்சியின் உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் ராம்சங்கர் கதேரியா மற்றும் வரலாற்று ஆய்வாளர் ஒருவரைச் சுட்டிக்காட்டி, அந்தப் பத்திரிகைச் செய்தி வெளியிட்டு இருந்தது.

இந்தத் தகவல் உலக அதிசயங்களின் ஆர்வலர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. இங்கிலாந்துப் பத்திரிகையில் வெளிவந்த செய்திக்கு இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தொல்லியல் துறை அதிகாரிகள் கூறுகையில்:

தாஜ்மஹாலுக்கு எந்த ஆபத்தும் இல்லை. நாம் நேரில் சென்று ஆய்வு நடத்தினோம். தாஜ்மஹாலில் எங்கும் எந்த விரிசலும் ஏற்படவில்லை. சுவரில் பதிக்கப்பட்டுள்ள மரங்கள் இத்துப் போகவில்லை. சேதம் எதுவும் இன்றி பலமாக உள்ளன. தாஜ்மஹால் யமுனை நதியின் கரையில் அமைந்துள்ளது. தற்போது அந்த நதி வறண்டு வருகிறது. இதனால் அச்சம் அடைந்த சிலர், தாஜ் மஹாலுக்கு ஆபத்து என்று வதந்தியை பரப்பி விட்டுள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள். (வ)

## இந்திய விமானப் படைக்கு அதிநவீன விமானங்கள்

காஸியாபாத், ஒக். 12

பல கோடி ரூபா மதிப்பில் இந்திய விமானப்படைக்கு போர் விமானங்களை வாங்குவதற்கான பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன என்று விமானப் படைத் தளபதி ஏர் மார்ஷல் என்.ஏ.கே.பிரவுனி தெரிவித்துள்ளார்.

இந்திய விமானப் படைத் தினத்தையொட்டி நடைபெற்ற அணிவகுப்பில் கலந்துகொண்டு அவர் பேசுகையில்:

பல பயன்பாடுகளைக் கொண்ட நடுத்தரப் போர் விமானங்களை விமானப் படையில் இணைக்க வுள்ளோம்.

இதற்குப் பாதுகாப்புத் துறை கடந்தவாரம் அனுமதி அளித்துள்ளது. புதிய விமானங்களை வாங்க விமானத் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து விலைப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. அவற்றை ஓரிரு தினங்களில் திறந்து முடிவெடுக்க உள்ளோம்-என்றார். (வ)

## மரண தண்டனைக் கைதிகள் மூவருக்கும் விடுதலை வேண்டும்

### கர்நாடகாவில் தி.மு.க. தீர்மானம்

பெங்களூர், ஒக்.12

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூன்று பேரையும் மரண தண்டனையில் இருந்து விடுவிக்க கர்நாடக மாநில ஆலோசனைக் கூட்டத்தில் தி.மு.க. தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கர்நாடக மாநில தி.மு.க. ஆலோசனைக் குழுக் கூட்டம் பெங்களூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது. மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் வி.தேவராசன், வி.எஸ். மணி உள்ளிட்டோர் உரையாற்றினர்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் 20 ஆண்டுகளாக மரண தண்டனைக் கைதிகளாக சிறையில் வாடும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரையும் அந்தத் தண்டனையில் இருந்து விடுவிக்க தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தப்பட்டது.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வேண்டுகோளுக்கு ஏற்ப மனிதாபிமான அடிப்படையில் மூவரின் மரண தண்டனையை ரத்துசெய்ய மத்திய அரசை கேட்டுக்கொள்கிறோம். தி.மு.கவினர் மீது பொய்யான வழக்குகளைப் பதிவுசெய்து சிறையில் அடைத்து சர்வாதிகார ஆட்சி நடத்தும் ஜெயலலிதாவுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய கட்சியினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **அம்பலவாணர் சந்திரசேகரம்**

(ஓய்வு பெற்ற உபஅதிபர்)

மலர்வு : 10.06.1924 உதிர்வு : 11.09.2011

*கடந்த 11.09.2011 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் அம்பலவாணர் சந்திரசேகரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரை மண்டபத்திலும் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்றன. இன்று (2011.10.12 ) புதன் கிழமை மு.ப 11 மணியளவில் சொர்ணாம்பிகை மண்டபத்தில் (தியாகி அறக் கொடை நிறுவனம் (ICT) 527, நாவலர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் ) ஆத்மசாந்திப் பிரார்த் தனையும், அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

ச.ஜெயபாலசந்திரன்( மகன்)
குடும்பத்தினர்

# தேவை

**கிளிநொச்சியில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு கிளிநொச்சிப் பிரதேசத்தில் வேலை செய்யக்கூடிய**

1) Civil Engineer (சிவில் எஞ்ஜினியர்)
2) Technical Officer(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
3) Mason(மேசன்)
4) Labour(கூலியாள்கள்)

**ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண் ணப்பதாரர் தொடர்புகொள்ள வேண்டிய தொ/எண் 0213734652**

# கண்ணீர் அஞ்சலி



பூத்துக்குலுங்கிய மலரொன்று
பொசுங்கிப்போனது ஏன் இன்று
பூத்துவொடி தனிக்கிறது பூக்களின்றி

*புங்குடு தீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வித்துவான்*
பொன்.அ.கணகசபை அவர்களின்
ஏக புதல்வன் கனகசபை காந்தியழகன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருப்பவர்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய கிராஞ்சியம்பதி சிவனை
வேண்டுகின்றோம்

*புங்குடுதிவு.* *குடும்பத்தினர்.*

# மரண அறிவித்தல்

## *திருமதி புஸ்பராஜா வரதலட்சுமி*

(தங்கம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி புஸ்பராஜா வரதலட்சுமி நேற்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-பரமேஸ்வரி தம் பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான தவமணி (சண்முகம்)-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் புஸ்பராஜா (ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் தஜீதரன்(கிராம அலுவலர்), மெஜிதா (இலங்கை வங்கி), விஜயதாப்(கனடா), துஜீஸ்காந் (சிறுவர் பராமரிப்புத் திணைக் களம்-வடமாகாணம்)ஆகியோரின் அன்புத்தாயும் சுதர்ஜினி , தினேஷன்(DRC), தாரணி ஆகி யோரின் பாசமிகு மாமியும் தரணிகா, சரண்ஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஜெயலட்சுமி, வீரசிங்கம், கனகசிங்கம், தர்மகுலசிங்கம், இரத்தினசிங்கம், அருந்தவ நாதன் ஆகியோரின் சகோதரியும் பத்மநாதன், சௌதாமினி குமரேஸ் வரன்(பாபு), ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அவரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.06, இராஜேஸ்வர வீதி, அரியாலை.

தகவல்: கணவர்.

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 04.07.1924
இறப்பு: 23.09.1991

## அமரர் S.R.பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்-கோவிலாக்கண்டி)

திதி: 12.10.2011

இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
விடுபேறு பெற்றவர்க்கு அஞ்சலிகள் பல

மீசாலை

பொ.கனகநாயகி (மனைவி)

# அருங்கலைப் போட்டியும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம்,ஒக்.12

அருங்கலைப் போட்டியும் கண் காட்சியும் நிகழ்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு தினங்கள் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அருங்கலைகள் பேரவையால் நடத் தப்படும் தேசிய பரிசு பெறுபவர்களைத் தெரிவு செய்யும் அகில இலங்கைக்கான போட்டி இதுவாகும். பாரம்பரிய கைத் தொழில் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் இடம் பெறும் இந்தப் போட்டிகளின் மாகாணப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கடந்த 30.09.2011 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-7)

# கொலன்னாவை ஸ்ரீல.சு.க. இணைப்பாளர் பஸில்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் வேண்டு கோளுக்கிணங்க, கொலன்னாவை தேர்தல் தொகுதியின் அனைத்து சமூக, அரசியல் இணைப்பாளராக அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தற்காலிகமாக நியமித்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வீடு வாடகைக்கு

கொக்குவில் அச்சக ஒழுங்கை இல.56 இல் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
0779592051, 0774546417

# USA Green Card

அமெரிக்கா விசா லொத்தர் விண்ணப்ப விவரங்களுக்கு,

**Penguin Book Shop,
B2-F23 Bloemendhal Flats,
Colombo-13.
T.P.0725110911,2438367**

# இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**புறொயிலர் இறைச்சி ரூபா 495/= மட்டுமே
நல்லூர் பாம் சென்ரர்
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.**

# வீடு வாடகைக்குண்டு

யாழ்.திருநெல்வேலியில் மூன்று படுக்கையறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. மூன்று வருட ஒப்பந்தத்தில் வழங்கப்படும்.

தொடர்பு: 0776059585, 0714841069

# காணி விற்பனைக்கு

வட மாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய் கோயில்பற்று, நீர்வேலி இறை, நிலப்பரப்பு 3 கிணற் றுடன் உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

தொடர்பு: 0776739776

# காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு இறை நெற்பரப்பு (4) நாலும், கிணறும், தென்னைமரங் களும் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

தொடர்பு: 0776739776

# மணமகன் தேவை

யாழ்ப்பாணம்,கௌரவ றோமன் கத்தோலிக்கம் தற்பொழுது கொழும்பில் வசித்து வருகின்ற அழகிய, சிவந்த, மெல்லிய, நல்ல குணமுள்ள, 5'3'' உயரம், 1981 ஆம் ஆண்டு பிறந்த B.Sc (Chemistry Special), M.Sc முடித்து Multi- National Company இல் தொழில் புரியும் மணமகளுக்கு படித்த, அழகிய, நல்லகுணமுள்ள மணமகனை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் எதிர் பார்க்கின்றோம்.

**தொடர்பு: 0778166011**

# காணி விற்பனைக்கு

தும்பளையில், வோல்டன் பிளேசில் காணியுடன் அரை வாசி கட்டப்பட்ட வீடும் உடனடி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.தரகர் தேவை யில்லை

தொடர்பு: 'அருளதம்'
சென்ற் லூர்ட்ஸ்லேன்,தும்பளை.
*தொலைபேசி-0776648754*

# கண்ணீர் அஞ்சலி



அமரர் **கனகசபை சின்னராசா**

*(ஓய்வு பெற்ற மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அதிகார சபை - கிளிநொச்சி)*

**அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.**

மாவட்ட முகாமையாளரும்,
சக உத்தியோகத்தர்களும்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - கிளிநொச்சி.

# கண்ணீர் அஞ்சலி



எமது மிருதங்கக் குருநாதர்
கலாபூஷணம் திரு. க.ப.சின்னராசா
அவர்களின் துணைவியார்
அமரர் பராசக்தி சின்னராசா
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

நா.சிவசுந்தரசர்மா , நா.சிவமனோகரசர்மா
மயிலணி,சுன்னாகம்.

# நீங்கா நினைவில் நான்காண்டுகள்

## அமரர் கோபாலபிள்ளை சுபாஸ்கரன்(சுபாஸ்)

| கண் மகிழ | | கண்நெகிழ |
|---|---|---|
| 03 . 04 . 1978 |  | 27 . 09 . 2007 |

திதி.பிரதமை (12.10.2011)

ஆண்டுகள் பல ஓடிமறைந்தாலும்-உந்தன்
அழகு முகமும் நினைவுகளும் அழிந்து விடுமா?
இறுதி வரை துணையிருப்பாய்- என்று
எண்ணியிருந்த எம் இதயங்களில்
இடியென இறங்கியது உன் இறுதி மூச்சு
அன்பால் அனைவரையும் கவர்ந்தவனே
அவனியில் எமை தனியே விட்டு
சென்றதேனோ
நிலையான சொந்தம் நீயென நம்பியிருந்து
நிலை குலைந்து போனோம்
நீ தடம் பதித்த இடமெல்லாம்-உன்
நிஜமான கதை பேசி படமொன்று நிழலாடுதடா.

நடராஜா வீதி,
வேலணை மேற்கு,
வேலணை -08.

**என்றும் உந்தன்
நினைவுகளுடன்
குடும்பத்தினர்.**

# கண்ணீர் காணிக்கைகள்



2ம் வருட சைவசித்தாந்த முதுகலைமாணி சக மாணவி
**திருமதி சிவசக்தி சோமநாதன்
அவர்களின் பாசமிகு தந்தை**
அமரர் **வல்லிபுரம் தம்பிராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.**

பிரிவுத்துயரைப் பகிர்வோர்:
பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
2ஆம் வருட சைவசித்தாந்த முதுகலை மாணி.

# கடாபியின் பிறந்த ஊரான சிர்த் நகர் புரட்சிப் படையினரின் கட்டுப்பாட்டில்

திரிபோலி,ஒக்.12

சிர்த் நகரின் அல்காசி பிராந்தியத்தை முழுமையாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். இதில் சிர்த் நகரப் பல்கலைக்கழகம், இப்ன் சீனா மருத்துவமனை மற்றும் கடாபி படையின் கட்டளைத் தளமாகப் பயன்படுத்தப்பட்ட அபுகன்டவுகு மாநாட்டு மண்டபம் ஆகிய முக்கிய தளங்களை கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து லிபியாவில் கடாபியின் பிறந்த ஊரான சிர்த் நகரை கைப்பற்றுவதற்கு இறுதிக் கட்ட மோதலை முடிக்கி விட்டுள்ளதாகவும் கடாபி ஆதர வுப் படை வசம் எஞ்சியுள்ள சிர்த் மற்றும் பானி வலீத் நகரங்கள் இன்னும் ஒருசில திணங்களில் விடுவிக்கப்படும் எனவும் இடைக் கால அரசின் த்லைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் அறிவித்துள்ளார்.



சிர்த் நகர மோதல் தீவிர மடைந்துள்ள நிலையில் கடாபி ஆதரவுப் படையின் 15 பேரைக் கைது செய்துள்ளதாக கிளர்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவர்களின் பெரும்பாலானோர் மொரித்தானிய நாட்டு கூலிப் படையினர் எனக் கிளர்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் சிர்த் நகரில் தொடர்ச்சியாக மோதல்கள் இடம் பெற்று வருவதாக அங்கிருக்கும் அல்ஜீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இடைக் கால அரசு சிர்த் நகரின் 70 வீதமான பகுதியை கைப்பற்றி யுள்ளனர். எனினும் கடாபி ஆதரவாளர்கள் வசமுள்ள 30 வீதப் பகுதியைக் கைப்பற்ற கிளர்ச்சியாளர்கள் கடுமையாகப் போராட வேண்டி இருக்கும். இந்தப் பகுதிகளை கைப்பற்ற அவர்கள் வீதிக்கு வீதி மோதலில் ஈடுபட வேண்டி ஏற்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிர்த் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 10 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

எனினும் இந்தப் பகுதியில் சிக்குண் டுள்ள பொதுமக்கள் குறித்த உறுதியான தகவல்கள் எதுவும் வெளியாக வில்லை.

சிர்த் நகரில் இருந்து கடந்த ஒரு சில தினங்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வெளியேறிய நிலையில் அங்கு இன்னும் பலர் சிக்குண்டிருப்பதாக நம்பப் படுகிறது.

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, ஒக்.12

ஜப்பானின் புகுஷிமா பகுதியில் நேற்று நண்பகல் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோளில் 5.5 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக் கத்தால் எந்த பாதிப்பும் ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை.சுனாமி எச்சரிக்கையும் விடப்பட வில்லை.

இந்த நிலநடுக்கத் தால் புகுஷிமா அணுமின் நிலையத்துக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று அதை இயக்கிவரும் டோக்கியோ மின்சக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் புகுஷிமாவில் இருந்து 245 கி .மீ தொலைவில் உள்ள டோக்கியோவில் பல அடுக்குமாடிக் கட்டடங்கள் அதிர்ந்துள்ளன.

## இந்தோனேஷியாவில் பறவைக் காய்ச்சல்; சகோதரர்கள் மரணம்

ஜகார்த்தா, ஒக் 12

இந்தோனேஷியாவில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கியதில் 2 சிறுவர்கள் பலியாகினர்.

இந்தோனேஷியாவில் போர்ட் புளூ என்ற வைரஸ் கிருமிகள் தாக்கியுள்ளதால் பெரும்பாலான கோழிகள் மற்றும் பறவைகள் செத்து மடிகின்றன. இந்த நோய் அங்குள்ள பாலித் தீவைப் பெருமளவில் தாக்கியுள்ளது.

இந்த நோய் தாக்கிய கோழி இறைச்சியை சாப்பிட்டவர்கள் பறவைக் காய்ச்சல் நோய்த் தாக்குதலுக்குள்ளாகி சாங்க்லா என்ற இடத்தில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி 10 வயது சிறுவனும், அவனது தங்கையும் உயிரிழந்தனர். மேலும் பலர்தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றனர்.



துருக்கிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அல்போனிய நாட்டு அதிபர் பமிர் டோபியை (இடது) தலைநகர் அன்காராவில் உள்ள கன்யா அதிபர் மாளிகையில் அந்த நாட்டு அதிபர் அப்துல்லாஹ் குல் (நடு) வரவேற்றார்.

## மாசுபடுதலை குறைக்க இத்தாலி முடிவு

வாகனப் புகையால் ஏற்படும் மாசுபாட்டை குறைக்க இத்தாலியின் மிலன் நகரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்து வாகனங்களுக்கும் 10 மணி நேரம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் பிடித்த படங்களின் மூலம் கிடைத்த தகவலின்படி ஐரோப்பிய நாடுகளில் மிலன் நகரில்தான் அதிக மாசுபாடு ஏற்படுவது தெரியவந்துள்ளது. இதை யடுத்து மிலனில் ஏற்படும் பல்வேறு மாசுபாடுகளைக் குறைக்க அந்த நாட்டு அரசு முடிவு செய்தது.

இதையடுத்து வாகனப் புகையால் காற்று மாசுபடுவதை மேலும் குறைக்கும் வகையில் ஞாயிறு காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை(10 மணி நேரம்) அனைத்து வாகனங்களுக்கும் வீதியில் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கர்கள் இருவருக்கு பொருளியல் நோபல் பரிசு





ஸ்ரொக்ஹோம்,ஒக்.12

அமெரிக்க ஆய்வாளர்களான தோமஸ் சேர்ஜன் மற்றும் கிறிஸ்தோபர் சிம்ஸ் ஆகியோர் 2011ஆம் ஆண்டுக்கான பொருளியல் துறைக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.

ஸ்ரொக்ஹோமில் நோபல் பரிசுக் குழுவினரால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் மெக்ரோ - பொருளியல் மற்றும் அரச பொருளாதார கொள்கைத் திட்டமிடல் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்தற்காகவே இவர்கள் நோபல் பரிசுக்குத் தெரிவாகியுள்ளனர்.

1895 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நோபல் பரிசில், பொருளியலுக்கான நோபல் பரிசு 1969 ஆண்டு தொடக்கமே வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நோபல் பரிசு வழங்கும் நிகழ்வு ஸ்ரொக்ஹோமில் எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## விசா கெடு பிடிகளைத் தளர்த்த ஆஸி. திட்டம்

மெல்பேர்ன்,ஒக்.12

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்துக்குப் படிக்கவரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விதத்தில், விசா கெடுபிடிகளைத் தளர்த்த, அந்த மாகாண அரசு திட்டமிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் படிக்க வரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை, அந்நாடு விசா கெடுபிடிகளை அதிகரித்த பின் கணிசமாகக் குறைந்து விட்டது. இந்நிலையில் ஆஸ்திரேலியா , வருமானம் அளிக்கும் கல்வித் துறையில் வெளிநாட்டு மாணவர்களை அதிகளவில் ஈர்க்கத் திட்டமிட்டுள்ளது. இதற்காக விசா கெடு பிடிகளைத் தளர்த்த முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து, அந்த மாகாண முதல்வர் டெட் பைல்லி கூறியதாவது:

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து படிக்க வரும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, அரசு முடிவு செய்துள்ளது. இதுகுறித்து பிரதமர் ஜூலியா கில்லார் டுடன் பேச உள்ளோம் என்றார்.

# சீனாவுடன் இணையும் எண்ணம் இல்லை

## என்கிறார் தாய்வான் அதிபர்

தாய்பெய் ,ஒக்.12

''சீனாவுடன் தாய்வான் சுமுகமான முறையில் இணைய வேண்டும்'' என்ற சீன அதிபர் ஹூ ஜிண்டாவோவின் கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார் தாய்வான் அதிபர் மா யிங் ஜியோவூ.



சீனாவில் 1911 இல் மன்னராட்சி அகற்றப்பட்டு ஒக்டோபர் 10ஆம் திகதி கோமின் டாங் கட்சித் தலைவரான சன் யாட் சென் தலைமையில் சீனக் குடியரசு நிறுவப்பட்டது. அதன் பின், கோமின் டாங் கட்சிக்கும், மாவோ தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நடந்த உள்நாட்டுப் போரில், கோமின் டாங் கட்சி தாய்வானை மட்டும் தக்க வைத்தது. அதனால், கோமின் டாங் கட்சி நிறுவிய சீனக் குடியரசாக தாய்வான் உருவானது.

இதன் நூற்றாண்டு விழா, சீனாவிலும், தாய்வானிலும் நடந்து வருகிறது.

இந்நிலையில், சீனத் தலைநகர் பீஜிங்கில் பேசிய அதிபர் ஹூ ஜிண்டாவோ, தாய்வானும் சீனவும் பழைய பகையை மறந்து, அமைதியாக இணைய வேண்டும் என்று கோரிக்கையை விடுத்தார்.

இதற்குப் பதிலளிக்கும் விதத்தில், தாய்வான் தலைநகர் தாய்பெயில் நடந்த விழாவில், அதிபர் மா யிங் ஜியோவூ பேசியதாவது;

தாய்வானின் ஜனநாயகத்தை சீனா பின்பற்ற வேண் டும். இணைப்பு இல்லை; விடுதலை இல்லை மற்றும் படைகளைப் பயன்படுத்துவதில்லை என்ற தாய்வானின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை.இந்தக் கொள்கைதான், தாய்வானில் பதற்றத்தைத் தணித்துள்ளது. சர்வதேச சமூகத்தின் உடன்பாட்டையும் ஆதரவையும் பெற்றுத் தந்துள்ளது. அனைவருக்கும் வளத்தைப் பகிர்ந்தளிக்கும், விடுதலையான ஜனநாயக நாட்டை உருவாக்குவதுதான், சீனக் குடியரசு நிறுவுநர்களின் நோக்கம். இவ்வாறு ஜியோவூ தெரிவித்தார்.

# ஞான பாஸ்கரோதயா கிண்ணத்தை சுவீகரித்தது மல்லாகம் ஸ்ரீமுருகன்

யாழ்ப்பாணம், ஒக்.12

ஞானபாஸ்கரோதய விளையாட்டுக்கழகத்தின் மென்பந்து கிரிக்கெற்றுப் போட்டியில் கிண்ணத்தைச் சுவீகரித்தது மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகத்தின் 92ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட அணிக்கு 9 பேர் பங்குகொள்ளும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரீமுருகன் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடிய ஸ்ரீமுருகன் அணி 12 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

தனு 3 நான்கு 6 ஆறுகள் அடங்கலாக 61 ஓட்டங்களையும் புனிதன் 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் சார்பாக நிரோஜ் 4 விக்கெட்டுக்களையும், சிந்துரன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 12 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இதில் கவிந்தன் 2 நான்குகள் 2 ஆறுகள் அடங்கலாக 31 ஓட்டங்களையும், நவதீப் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரீமுருகன் அணி சார்பாக கபில் 2 விக்கெட்டுக்களையும், ரஹீம், வரன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற ஸ்ரீமுருகன் அணிக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் ஆட்ட நாயகனாகவும் ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த தனு தெரிவு செய்யப்பட்டார்.

போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நிரோஜ் தெரிவு செய்யப்பட்டார். இவர் இந்தப் போட்டியில் ஹட்ரிக் சாதனை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடரின் நாயகனாக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த ரஹீம் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தச் சுற்றுப்போட்டியில் 40 அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# சென்.றோக்ஸ் உதைபந்தாட்டம்; அன்ரனிஸ், மைக்கல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.12

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் பாசையூர் சென். அன்ரனிஸ் வெள்ளை அணி, உரும்பிராய் சென். மைக்கல் 'ஏ' அணி ஆகியவை வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் 'பி' அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் 'ஏ' அணி மோதிக்கொண்டது.

இதில் உரும்பிராய் சென்.மைக்கல் 'ஏ' அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் வெள்ளை அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் வெள்ளை அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)



இலங்கை வங்கி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட வீரர்கள் (த-23)

# தேசிய மட்ட தடை தாண்டலில் முல்லைத்தீவு மாணவி நிவேதா

முல்லைத்தீவு, ஒக்.12

முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் மகாவித்தியாலயத்தின் தரம் 10 இல் கல்வி பயிலும் தேவேஸ்வரன் நிவேதா 17 வயது பெண்கள் பிரிவில் 400 மீற்றர் தடை தாண்டல் நிகழ்ச்சியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளார்.

இந்த மாணவி மாவட்ட மட்டப் போட்டியில் 800 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும், உயரம் பாய்தலில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். (த)



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.12

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் வைரவிழாவை முன்னிட்டு நடைபெறும் 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி நியூபவர் விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

***

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பிற்பகல் 3.45 மணிக்கு

*பாசையூர் சென்.அன்ரனிஸ் மருண் அணி எதிர் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம்.

மாலை 5 மணிக்கு

*குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் சிவானந்தா விளையாட்டுக்கழகம். (த-23)

# அல்வாய் மனோகரா வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.12

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வல்வெட்டித்துறை கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி கலட்டி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

# பிறிமியர் லீக் உதைபந்து பாடும் மீன் வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.12

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் பிரிவு III இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டன.

இதில் யாழ்ப்பாணம் குருநகர்பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# சதுரங்கப் போட்டி வார இறுதியில்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கொழும்பில் இடம்பெறவிருக்கும் சர்வதேச சதுரங்கப் போட்டி டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இதில் பங்கு கொள்வதற்காக யாழ்.மாவட்ட சதுரங்கச் சங்கம் நடத்திய சதுரங்கத் தெரிவுப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான இறுதிப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு வைத்தீஸ்வரக் கல்லூரியில் இடம் பெறுவுள்ளது எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)



தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கோட்ட சம்பியனாகிய வயாவிளான் மத்தியமகாவித்தியாலய உதைபந்தாட்ட அணியினர். (த-86)

# வென்றது நவிண்டில் நியூட்டன்

யாழ்ப்பாணம், ஒக்.12

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் வைர விழாவை முன்னிட்டு நடைபெறும் 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் ஆட்டம் ஒன்றில் நவிண்டில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் 18.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுஜீவன் 33 ஓட்டங்களையும், பிரதாப் 25 ஓட்டங்களையும், சஞ்ஜீவன் 21 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணி சார்பாக றொசான் 4 விக்கெட்டுக்களையும் தர்மிகன் 3 விக்கெட்டுக்களையும், சாந்தன் 3 விக்கெட்டுக்களையும், வீழ்த்தினர்.147 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூட்டன் விளையாட்டுக்கழகம் 17.2 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுரேஸ் 76 ஓட்டங்களையும், சாந்தன் 30 ஓட்டங்களையும், தர்மிகன் 28 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி சார்பாக பிரதாப் 4 விக் கெட்டுக்களையும், பகீரதன் 2 விக்கெட்டுக்களையும், சஞ் சீவன் 3 விக்கெட்டுக்களையும் தமது அணிசார்பாக வீழ்த்தினர். (த-23)

# ஐ.பி.எல். பாகிஸ்தானுக்கு பச்சைக்கொடி

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்களை சேர்ப்பது குறித்து எதிர்வரும் 14 ஆம் திகதி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று ஐ.பி.எல் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தான் வீரர்கள் பணம் கொழிக்கும் ஐ.பி.எல் போட்டியில் சேர்க்கப்படவில்லை. இந்த நிலையில் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீலுடன் சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு சென்றுவிட்டு திரும்பும் வழியில் விமானத்தில் செய்தியாளர்களிடம் சுக்லா கூறியது:

ஐ.பி.எல் போட்டியில் பாகிஸ்தானைச் சேர்ந்த நடுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். சில அணிகளுக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் பயிற்சியாளர்களாக உள்ளனர். இதேபோல் சில அணிகளின் அதிகாரிகளும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்.

அப்படியிருக்கையில் ஒட்டுமொத்த பாகிஸ்தானுக்கும் ஐ.பி.எல் போட்டியில் தடை விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. எனவே யாருக்கு எதிராகவும் தடை என்ற கேள்விக்கே இடமில்லை. பாகிஸ்தான் வீரர்களை ஐ.பி.எல் போட்டியில் சேர்ப்பது குறித்து ஆட்சி மன்றக் குழு கூட்டத்தின்போது விவாதிக்கப்படும். எனினும் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு ஐ.பி.எல் அணிகளின் உரிமையாளர்களிடமே உள்ளது. அவர்களை ஏலம் எடுப்பதா, வேண்டாமா என்பதை அணி உரிமையாளர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

ஐ.பி.எல் போட்டியின் போது வீரர்கள் காயமடைவதால்தான் சர்வதேச அளவிலான போட்டிகளில் பாதிப்பு ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது.

ஐ.பி.எல் போட்டியின்போது வீரர்கள் காயத்தோடும், களைப்போடும் இருந்தாலும்கூட, அவர்களை விளையாடும்படி வற்புறுத்தப்படுவதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை. வீரர்களின் காயத்துக்கு ஐ.பி.எல் போட்டியை மட்டுமே குற்றம்சாட்ட முடியாது. இந்தியா-இங்கிலாந்துத் தொடரில்தான் ஏராளமான வீரர்கள் காயமடைந்தனர். எனவே காயம் எப்படி வேண்டுமானாலும் ஏற்படலாம் - என்றார். (15)

# விதிமுறை மீறிய ஐ.பி.எல்.

சம்பியன்ஸ் லீக் தொடரில் விதிமுறைகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. பெங்களூர் அணியில் காயம் அடைந்த நனிஷ்க்குப் பதிலாகதான் கெய்ல் சேர்க்கப்பட்டார். ஆனால், இருவருமே ஆட்டங்களில் பங்கேற்றது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

நான்காவது ஐ.பி.எல் தொடருக்காக, கடந்த ஜனவரியில் நடந்த ஏலத்தில், மேற்கிந்தியதீவுகளின் வீரர் கெய்லை யாரும் கண்டுகொள்ளவில்லை. இதனிடையே தொடர் ஆரம்பமாகிய போது, பெங்களூர் அணியில் காயம் காரணமாக நனிஷ் நீக்கப்பட்டார். இவருக்குப்பதில், கெய்லை எடுத்துக்கொள்ள ஐ.பி.எல் நிர்வாகம் அனுமதி வழங்கியது. ஒரு வழியாக பெங்களூர் அணியில் இடம் பெற்ற கெய்ல், நான்காவது ஐ.பி.எல் தொடரில் 600 ஓட்டங்களுக்கும் மேல் குவித்தார்.

இதனிடையே, பெங்களூர் அணி சம்பியன்ஸ் லீக் தொடருக்குப் தகுதிபெற்றது. இங்குதான் விதிமீறல் நடந்தது. அதாவது, காயத்தினால் நீக்கப்பட்ட நனிஷ், இவருக்குப் பதிலாக வந்த கெய்ல் இருவருமே பெங்களூர் அணிக்காக விளையாடினர். ஐ.பி.எல் விதிப்படி காயத்தினால் ஒரு வீரர் நீக்கப்பட்டால், அந்த ஆண்டு முழுவதிலும் அவர் தொடரில் பங்கேற்ககூடாது. ஆனால் ஐ.பி.எல் தொடரில் நீக்கப்பட்ட நனிஷ், நான்கு மாத இடைவெளியில் சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்றார்.

தவிர, ஒரு அணி, வீரர்கள் ஏலத்திற்கு ரூ. 40 கோடி தான் செலவிட வேண்டும் என்று விதி உள்ளது. ஆனால், கெய்ல், நனிஷ் இருவரையும் அணியில் சேர்த்ததன் மூலம், பெங்களூர் அணி ரூ. 46 கோடி வரை செலவிட்டுள்ளது.

மும்பை அணி வேறுவிதத்தில் ஏமாற்றியுள்ளது. அதாவது சச்சின், ரோகித் சர்மா உள்ளிட்ட எட்டு இந்திய வீரர்கள் காயமடைந்ததால், விளையாடும் பதினொருவர் அணியில், 5 வெளிநாட்டு வீரர்களை சேர்த்துக்கொள்ள அனுமதி வாங்கினர். இந்த அணியால் உடற்தகுதி இல்லாதவர் என்று கழற்றி விடப்பட்டவர் யாதவ். இவர், உள்ளூர் தொடரில் 188 ஓட்டங்கள் அடித்தார்.

இதைத் தொடர்ந்து அரையிறுதியின் போது, யாதவ் தயாராகி விட்டார் என்று கூறி, மீண்டும் மும்பை அணியில் சேர்க்கப்பட்டார். இந்தச் செயலுக்கு கொல்கத்தா அணி கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து ஐ.பி.எல். தலைவர் ராஜிவ் சுக்லா கூறுகையில், சம்பியன்ஸ் லீக் தொடருக்கான விதிகள் குறித்து தொழில்நுட்ப குழுவுக்குத் தான் தெரியும். ·கெய்ல் பிரச்சினை போல, பல குற்றச்சாட்டுகள் வந்துள்ளன. இதுகுறித்த இறுதி முடிவு, உயர்மட்டக் குழுவில் எடுக்கப்படும், என்றார். (15)



# அசத்தும் அன்டி மூரே

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் ஓபன் ரெனிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, ஸ்பெயினின் ரபெல் நடாலை எதிர்கொண்டார். முதல் செட்டை நடால் 6-3 என்று கைப்பற்றினார். பின் முர்ரே இரண்டாவது செட்டை 6-2 என்று தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் அபாரமாக ஆடிய முர்ரே 6-0 என்று செட்டை கைப்பற்றினார். இறுதியில் முர்ரே 3-6, 6-2, 6-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணம் வென்றார். (15)

# சம்பியன் லீக் ஒரு பார்வை

சம்பியன்ஸ் லீக் தொடரில் முதன் முறையாக கிண்ணம் வென்று சாதித்துள்ளது மும்பை இந்தியன்ஸ் அணி. இந்தமுறை சச்சின் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் காயம் அடைந்த நிலையில், அணியை சிறப்பாக வழி நடத்திய ஹர்பஜன் சிங் தனது திறமையை நிரூபித்தார்.

இந்தத் தொடரின் தொடக்கத்தில் மிகவும் பலவீனமான அணியாக மும்பை இந்தியன்ஸ் இருந்தது. ஏனெனில் அணித்தலைவர் சச்சின் பெருவிரல் காயத்தால், தொடரில் பங்கேற்கவில்லை. தவிர, ரோகித் சர்மா, முனாப் பட்டேல், தொடக்க வீரர் ஜேக்கப்ஸ் உள்ளிட்ட எட்டு வீரர்கள் அணியில் இல்லை.

இவர்களுக்குப் பதில் இந்தியாவின் உள்ளூர் வீரர்களை வைத்தே சமாளித்தனர். இந்தியாவின் ஹர்பஜன் சிங் மீது நம்பிக்கை வைத்து, அணியின் தலைமைப் பொறுப்பை வழங்கினர். இவரது தலைமையில் லீக் சுற்றில், அசத்திய மும்பை அணி அரையிறுதியில் ஷொமசெட்டை வீழ்த்தி, முதன் முறையாக இறுதிக்கு முன்னேறியது.

இறுதியில் வலிமையான பெங்களூரை சந்தித்தது. இதில், சுழற்பந்து வீச்சாளர் சஹால் 3 பந்துப் பரிமாற்றங்களில் 9 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 2 இலக்குகள் வீழ்த்த, வெற்றி மும்பை வசமானது. கடந்த 2008 ஐ.பி.எல் தொடரில் 5 ஆவது, 2009 இல் 7 ஆவது இடம் பெற்ற மும்பை அணி, இந்த முறை முன்னணி வீரர்கள் இல்லாமல் சாதித்துக் காட்டியுள்ளது.

அணியின் முன்னணி பந்து வீச்சாளர் மலிங்க (இலங்கை) 10 இலக்குகள் வீழ்த்தியதுடன், துடுப்பாட்டத்தில் 68 ஓட்டங்கள் சேர்த்ததும், கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக அமைந்தது.

கெய்ல், டில்ஷான் என்ற இரு அதிரடி தொடக்க வீரர்களை வைத்திருந்தும், முதல் இரு ஆட்டங்களில் தோல்வியடைந்தது பெங்களூர் அணி. பின் சவுத் ஆஸ்திரேலியா, நியு சவுத்வேல்ஸ் அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் தொடர்ந்து இரு முறை 200 ஓட்டங்களுக்கும் மேல் விரட்டியடித்து அசுர பலத்துடன் இறுதியில் களமிறங்கியது.

இறுதியில் கெய்ல், டில்ஷான் கைவிட, விராட் ஹோக்லியும் சொதப்பினார். இப்படி துடுப்பாட்டத்தில் ஒட்டுமொத்தமாக கெய்லை மட்டும் நம்பியதால் எளிய இலக்கை கூட எடுக்க முடியாமல் தோல்வி அடைந்தனர். ஆனால் மும்பை அணியில் பொலார்ட் கைவிட்ட போதும், சதீஷ், யாதவ், ராயுடு என்று, அவரவர் தங்கள் பங்கிற்கு சராசரியாக ஓட்டங்கள் சேர்க்க, வெற்றி எளிதானது.

இதுகுறித்து அணித்தலைவர் ஹர்பஜன் சிங் கூறியது:

சச்சின், ரோகித் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இல்லாத நிலையில், நாங்கள் கிண்ணம் வெல்வோம் என்று யாரும் நினைத்துப்பார்த்திருக்க மாட்டார்கள். இதற்கேற்ப, இறுதி ஆட்டத்தில் குறைவாக ஓட்டங்கள் எடுத்த போதும், கடைசிவரை போராடுவது என்று முடிவெடுத்தோம்.

கெய்ல், டில்ஷான், விராட் ஹோக்லியை விரைவில் ஆட்டமிழக்கச் செய்தால் வெற்றி கிடைத்து விடும் என்று நம்பினோம். எல்லாம் சரியாக நடந்தது. அனைத்து வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, கடவுளின் கருணைப் பார்வையும் எங்களுக்கு கிடைத்ததால், கிண்ணம் வெல்ல முடிந்தது - என்றார்.

இந்த ஆண்டின் சிறந்த சீக்கிய விளையாட்டு வீரருக்கான விருதை ஹர்பஜன் தட்டிச் சென்றார். இது குறித்து வெளியான அறிக்கையில, கடந்த 1980 இல் பிறந்த ஹர்பஜன் சிங், சிறந்த பந்து வீச்சாளர். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக இலக்குகள் வீழ்த்திய இந்திய வீரர்களில் இரண்டாவது இடம், உலகளவில் 11 ஆவது இடம் பெற்றுள்ளார். சமீபத்தில் முடிந்த உலகக் கிண்ணத் தொடரில், இந்திய அணி கிண்ணம் வெல்ல முக்கிய பங்கு வகித்தார். இதனால் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)



துடுப்பாட்டத்தில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில், முதலிடத்தைப் பெற்ற வோர்னருக்கு (நியு சவுத்வேல்ஸ்) தங்கத்தினாலான துடுப்பு வழங்கப்பட்டது.



பந்து வீச்சில் 10 இலக்குகள் வீழ்த்தியதுடன், துடுப்பாட்டத்தில் 68 ஓட்டங்களும் எடுத்த, மலிங்க 'கோல்டன் போல்' விருதை தட்டிச்சென்றார்.

உதயன்
12 ஒக்ரோபர் 2011 புதன்கிழமை

## சமுத்திர தீர்த்தமாடினார் கோவிந்தன்



வரலாற்று பிரசித்தி பெற்ற வல்லிபுரமாயவனின் தீர்த்த உற்சவம் நேற்று பல்லாயிரக்கண அடியார்கள் திரண்டிருக்க பக்திபூர்வமாக இடம்பெற்றது. சுவாமி உள்வீதியில் உலா வந்து தீர்த்தமாடுவதற்காக வங்காளவிரிகுடா சமுத்திரத்தை நோக்கி பக்தர்கள் புடைசூழ பிற்பகல் 3.30 மணிக்கு புறப்பட்டார். மாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்று இரவு 7 மணிக்கு மீண்டும் ஆலயம் வந்தடைந்தார்.

# மாநகர சபை பிரதான அமைப்பாளராக ஜோன் ராமை நியமிக்க ரணில் தீர்மானம்

கொழும்பு, ஒக்.12

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் முஸம்மிலுக்கு அடுத்தபடியான கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்ற ஜோன் ராமை மாநகரசபை ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளராக நியமிப்பதற்கு ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளாரெனத் தெரிகிறது.

கூடுதல் விருப்புவாக்குகள் பெற்ற ஐ.தே.க. பட்டியலில் இரண்டாமிடத்தில் இருக்கும் ஜோன் ராம், பிரதி மேயராக நியமிக்கப்படவேண்டுமென்று ஐ.தே.க. தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இது குறித்து மேல் மாகாணசபை உறுப்பினர் ராம் நேற்று கட்சித் தலைவர் ரணிலுடன் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போதே ரணில் மேற்படி தீர்மானத்தை தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து மேல் மாகாணசபை உறுப்பினர் ராம் கூறியவை வருமாறு:-

கூடுதலான விருப்புவாக்குகள் பெற்ற காரணத்தால் அவரை பிரதி மேயராகக் கட்சி நியமிக்குமென்று எதிர்பார்த்தோம். ஆனால், இனவிகிதாசாரம் பேணப்பட வேண்டுமென்று எம்மிடம் சுட்டிக்காட்டப்பட்டது. என்றாலும் மாநகரசபையின் ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவியை ஜோன் ராமுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளனர். இது மகிழ்ச்சிக்குரியது.

ஏனெனில், மாநகரசபை ஆளும்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவி என்பது மக்களுக்கு அதிகபட்சமாக சேவையாற்றக்கூடிய முக்கிய பொறுப்புகளைக் கொண்டது. எனவே, கொழும்பில் ஜோன் ராமுக்கு வாக்களித்த மக்களுக்குச் சேவையாற்ற இந்தப் பதவி பெரிதும் பயன்படும். அதுவரை எமக்குத் திருப்திதான் - என்றார் மாகாணசபை உறுப்பினர் ராம். (ஒ-சி)

# ஐ.தே.க. தலைமையுடன் தொடர்பு படாதோர் தனிப்பட்ட விரோதத்தால் எம்மீது விமர்சனம்

## குமரகுருபரன் ஆவேசம்

கொழும்பு, ஒக்.12

அரசியல் கட்சிகள் முக்கியமான சில தருணங்களில் ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்துவதென்பது அரசியலில் சகஜமானதொரு விடயம் எனத் தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் நல்லையா குமரகுருபரன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்துடன் தொடர்புபடாதவர்கள் தனிப்பட்ட குரோதம் காரணமாக எதை எதையோ கூறுகின்றனர். இது அரசியல் நாகரிகமற்ற செயலாகும் என்றும் அவர் கூறினார்.

தேவை ஏற்படும்போது பேச்சுகளை நடத்துவதற்குத் தயாராக இருப்பதே அரசியல் முதிர்ச்சியாகும். இதுகூட புரியாமல் சிறுபிள்ளைத்தனமாகச் சிலர் அர்த்தமற்ற கதைகளைக் கூறுகின்றனர் எனவும் அவர் விமர்சித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்றுவரும் பேச்சுகள் மற்றும் அதனால் எழுந்துள்ள விமர்சனங்கள் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தலைநகர் தமிழ் மக்கள் எம்முடனேயே இருக்கின்றனர் என்பதை இத்தேர்தல் ஊடாக நாம் எடுத்துக்காட்டினோம்.

எமக்கு ஆணை வழங்கிய மக்களை ஏமாற்றும் அரசியல் வியாபாரிகள் நாம் அல்லர். மக்களுடனேயே நாம் இருப்போம்.

அரசியல் கட்சிகள் சில முக்கியமான தருணங்களில் பேரம் பேசுவதென்பது அரசியலில் தவிர்க்கமுடியாததொரு விடயம். அதுதான் அரசியல் கோட்பாடும்கூட.

ஜனநாயக மக்களின் வெற்றியை சகித்துக்கொள்ள முடியாத சிலர் எம்மை விமர்சிப்பது தொடர்பாக நாம் அலட்டிக் கொள்ள மாட்டோம் - என்றார் அவர். (ஒ-சி)

## மீனவர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழக மீனவர்களுக்கு பாக் ஜலசந்தி பகுதிதான் வாழ்வாதாரமாக உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

**நான் ஆட்சிக்கு வந்த பின் 16 தடவை தாக்குதல்**

அங்கு தமிழக மீனவர்களின் மீன் பிடிக்கும் உரிமையைப் பாதுகாக்கவும், மீனவர்களைப் பாதுகாக்கவும் அரசு அதிக முன்னுரிமை கொடுக்கிறது. எனது தலைமையிலான அரசு பொறுப்பு ஏற்ற பின்னர் இதுவரை 16 தடவை தமிழக மீனவர்கள், இலங்கையினரால் தாக்கப்பட்டும், துன்புறுத்தப்பட்டும் உள்ளனர் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

07.06.2011 அன்று இலங்கைக் கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட 4 இராமேஸ்வரம் மீனவர்கள், உங்களது கவனத்துக்கு என் மூலம் கொண்டுவரப்பட்ட பின்னர் 17.6.2011 அன்று விடுவிக்கப்பட்டார்கள். அதுபோல மீண்டும் 21.06.2011 அன்று 5 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 23 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டனர்.

இதுபற்றி நான் மீண்டும் உங்களுக்கு 23.06.2011 அன்று கடிதத்தின் மூலம் தெரிவித்தேன்.

எனினும் இலங்கைக் கடற்படையினராலும், சிங்கள மீனவர்களாலும் தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவது, துன்புறுத்தப்படுவது நீடித்தபடி உள்ளது. இத்தகைய தாக்குதலில் ஏராளமான மீனவர்கள் காயம் அடைந்துள்ளனர். தமிழக மீனவர்கள் பிடித்து வைத்திருக்கும் மீனை, சிங்களவர்கள் மிரட்டி திருடிச் சென்று விடுகிறார்கள். மேலும் தமிழக மீனவர்களின் படகுகள், வலைகள், திசை காட்டும் கருவிகள் போன்றவைகளைச் சேதப்படுத்தி நாசமாக்கி விடுகிறார்கள்.

**அச்சத்துடன் தொழிலுக்குச் செல்லும் இந்திய மீனவர்கள்**

இதனால் இந்திய மீனவர்கள் குறிப்பாக நாகப்பட்டினம், இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்க செல்லும்போது இலங்கைக் கடற்படையால் அல்லது சிங்களவர்களால் தாக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்ச உணர்வுடனே செல்கிறார்கள்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் கடந்த 8 ஆம் திகதி என்னைச் சந்தித்துப்பேசியபோது அவரிடம் நான், தமிழக மீனவர்கள் கடலில் தாக்கப்படுவதைத் துன்புறுத்தப்படுவதை விளக்கமாக எடுத்துக் கூறினேன். இலங்கை அரசுடன் பேசி தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும்படி கேட்டுக் கொண்டேன்.

ஆனால் அதே தினத்தன்று அதாவது கடந்த 8 ஆம் திகதி மாலையே, இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய், கொழும்பு போய்ச் சேருவதற்குள் இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டு, தமிழக மீனவர்களை விரட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் எல்லா தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் வெளியானது. தேசியப் பிரச்சினை தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படும் விவகாரத்தில் இந்தியா உடனே தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு இலங்கையிடம் இந்தியா கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்க வேண்டும். மேலும் தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதை, இந்தியர்களுக்கு எதிரான தாக்குதலாக மத்திய அரசு கருதவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய எல்லையில் பாகிஸ்தான், சீனா இராணுவம் அத்து மீறல் நடத்துவதைப்போல இலங்கைக் கடற்படையின் அத்துமீறல்களையும் இந்தியா பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டு மீனவர்கள் கடலுக்குள் தாக்கப்படுவதை தமிழ்நாட்டின் பிரச்சினையாகக் கருதாமல், இதை ஒரு தேசியப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.(ஒ-சி)

## மரண அறிவித்தல்கள்

### முருகன் நாகமுத்து

(மேசன் நாகமுத்து)



அச்சுவேலி தெற்கு, மாவடி வீதியைச்சேர்ந்த முருகன் நாகமுத்து நேற்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் முருகன்- சின்னப்பெட்டை தம்பதியரின் அன்பு மகனும், சின்னர்- சின்னப்பிள்ளைதம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் பாசமிகு கணவனும், சதாசிவம், புஸ்பவதி, ராம்குமார்(ஹொலன்ட்), யாழினி(சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும், முருகதாஸ், கோவிந்தன், கவிதா, லங்காதேவி அகியோரின் அருமை மாமனும், துவாரகா, திலக்சன், டிலக்ஷன், கலையுகன், கம்பிகா, கஷ்மிளா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி விதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா கனகரட்ணம்

(கனகர் - குப்பிளான்)

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் காளிகோயிலடி குப்பிளான் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கனகரட்ணம்.நேற்று(11.10.2011)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும்.சுதர்சினி (ஆசிரியை ஊரெழு கணேசா வித்தியாலயம்)சுதர்சன்,சுமிதாயினி. ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகையாவின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளி கோயிலடி,*
*குப்பிளான் வடக்கு, குப்பிளான்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## தாச்சிப் போட்டி

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்றுபுதன்கிழமை இரவு 7.30.மணிக்கு கைதடி துர்க்கா 'ஏ' அணியை எதிர்த்து கைதடி சித்தி விநாயகர் 'ஏ' அணி மோதும்.

(த-288)

## பிரமுகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மெக்ஸி புரொக்டர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கையை பொலிஸ் மா அதிபர் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஒ)

## முல்லேரியா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் கொழும்பை அண்மித்த பகுதிகளில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும்,சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான மெக்கி புரொக்டர் தெரிவித்தார்.

(ஒ-323)

## கண்ணீர் அஞ்சலி



எமது மிருதங்க ஆசான்
க.ப.சின்னராசா அவர்களின் அன்பு
மனைவி

*திருமதி*
*சின்னராசா பராசக்தி*

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மிருதங்க மாணவர்கள்.

## முல்லேரியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவர் கொல்லப்பட்டனர். துமிந்த சில்வா எம்.பி. உட்பட 10இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவத்தையடுத்து, யுத்தகளமாகக் காட்சியளித்த முல்லேரியா பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், முல்லேரியா பகுதியில் தற்போது நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்பு கின்றது என்றும், பதற்றநிலைமை தணிந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, படுகாயமடைந்த நிலையில் ஆபத்தான கட்டத்தில் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்த துமிந்த சில்வா எம்.பியின் உடல்நிலை தேறிவருகிறது என ஜயவர்தனபுர வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-சி)

## கடற்படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்களும், கடற்படையினர் இருவரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இரண்டு கடற்படைச் சிப்பாய்களும் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தவை வருமாறு:-

தெற்காசிய கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் அம்பாந்தோட்டை கடற்கரையில் கடந்த 8ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இதனை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இரவு கடற்கரையில் இசை நிகழ்ச்சியொன்று நடைபெற்றது.

இதன்போது கடற்படையினருக்கும், இளைஞர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இரண்டு கடற்படைச் சிப்பாய்களும், மூன்று இளைஞர்களும் காயமடைந்தனர்.

அம்பாந்தோட்டை துறைமுகப்பகுதியில் கடற்படையினரால் அமைக்கப்பட்டிருந்த சாவடியை அகற்றுமாறு அப்பிரதேசத்தில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். எனினும், அந்தச் சாவடியை அகற்ற முடியாது என கடற்படையினர் அறிவித்தனர்.

இந்த நிலையிலேயே மேற்படி மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும், இரு தரப்பினருக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை அம்பாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு நினைவிருக்கும். அவர்கள், அனைத்தையும் நன்கு கவனத்தில் எடுத்து பல பரிந்துரைகளைத் தெரிவித்திருந்தார்கள்.

எனது நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் நிச்சயமாக இலங்கை மக்களால் அமுல்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

இலங்கை அரசு எனது நிபுணர் குழு அறிக்கைக்குச் சாதகமான பதிலைத் தரும் என்று நான் நீண்ட நெடுங்காலம் காத்திருந்தேன். அதுபோல் அவர்கள் எனது நிபுணர் குழு அறிக்கையை அமுல்படுத்துவார்கள் எனவும் காத்திருந்தேன்.

சில வாரங்களுக்கு முதல் நான் எனது நிபுணர் குழு அறிக்கையை மனித உரிமைக் கவுன்ஸிலுக்கும் ஐ.நாவின் மனித உரிமை செயலாளர் நாயகத்திற்கும் பரிசீலிணைக்கு உட்படுத்துமாறு அனுப்பிவைத்திருந்தேன். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 2 வாரங்களுக்கு முன்னர் ஐ.நா. கூட்டத்தொடருக்கு அவர் வந்தபோது, நான் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தேன்.

இவ்விடயங்கள் தொடர்பாகவும் அவருடன் கலந்துரையாடினேன். அவர் எனக்கு, இலங்கைத் தமிழ் மக்களையும் அவர்களின் மனித உரிமைகளையும் பாதுகாப்பதாகவும் அதற்கு இலங்கைக்குள் அனைத்து நடவடிக்கையையும் எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார் - என்றார் பான் கீ-மூன். (ஒ-சி)

## அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திப்பில் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்த கட்டமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பத்மநாபா, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் தி.சிறிதரன் ஆகியோர் மாத்தாயுடனான சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த இரண்டு சந்திப்புகளின் போதும், வடக்கு , கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் இனப்பிரச்சினைக்கான அரசில் தீர்வு காண்பதில் கடைப்பிடித்துவரும் அக்கறையற்ற போக்குக் குறித்தும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் விவரித்துக் கூறியிருந்தனர்.

அதேவேளை, இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாயைத் தனியாகச் சந்திப்பதற்கு ஈ.பி.டி.பியின் பொதுச் செயலர் டக்ளஸ் தேவானந்தாவுக்கோ அந்தக் கட்சியின் பிரதிநிதிகளுக்கோ நேரம் ஒதுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இந்திய வெளிவிவகாரச் செயலருடன் தனியான சந்திப்புக்கு ஈ.பி.டி.பி. கடும் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது பயன் அளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

அதையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஈ.பி.டி.பி. சார்பில் டக்ளஸ் தேவானந்தா மட்டும் இந்திய வெளிவிவாகரச் செயலரைச் சந்தித்துள்ளார்.

ரஞ்சன் மாத்தாயை சந்திக்கும் தனது குழுவில் டக்ளஸ் தேவானந்தாவை இறுதி நேரத்தில் ஜனாதிபதி மஹிந்த சேர்த்துக்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-323)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்திலுள்ள அரச காணி ஒன்றிலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டுப் பிரேத் பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-சி)

Atlantic A/C
Tataவின் Voltas

யாழ் மண்ணில் Atlantic, Tataவின் Voltas போன்ற A/Cகளை தீபாவளியை முன்னிட்டு கவர்ச்சியான விலைக்கழிவுடன் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
5வருட உத்தரவாதம்
இணைப்பு, 3சேவிஸ் இலவசம்
60% மின் சேமிப்பு
JENIVA Traders
Edna Engineering (PVT)LTD
Authorized Dealer
(Air Conditoning & Refrigeration)
இல. 424 கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். தொ.பே:- 0213202270, 0759402314

## தீர்வு தொடர்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதாகவே நாடாளுமன்றப் பத்திரத்தில் அரசு முன்னர் குறிப்பிட்டிருந்தது. அதற்கு தமிழ்க் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் நல்லிணக்கத்துடன் தீர்வை எட்டுவது; அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது; அதற்கேற்ப அரசமைப்பை மாற்றுவது போன்ற விடயங்களை ஆராய்ந்து உரிய சிபாரிசுகளைச் செய்வதற்கு இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படுவதாக அதன் கருத்துரை மாற்றப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி இருந்தது. அப்படி மாற்றப்பட்டால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பது குறித்துக் கட்சி சாதகமாகப் பரிசீலிக்கும் என்றும் அது தெரிவித்திருந்தது.

இதனை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்டபடி - அது விரும்பியபடி - நாடாளுமன்றத் தெரிவுக் குழு பற்றியதான கருத்துரையைத் தாம் மாற்றியமைத்திருப்பதாக அரசுத் தரப்பு அறிவித்திருக்கிறது.

கடந்த வாரத்தில் கூட்டமைப்பின் தேசியபட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை அழைத்துப் பேசிய அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் அரச பேச்சுக் குழுவின் செயலருமான சஜின்வாஸ் குணவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்திருந்தார்.

கூட்டமைப்பு விரும்பியபடி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நோக்கம் பற்றிய கருத்துரை மாற்றப்பட்டிருப்பதால் அதில் அங்கம் வகிப்பதில் இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பிரச்சினைகள் இருக்காது என்ற சாரப்பட சஜின் வாஸ் குணவர்த்தன கருத்துத் தெரிவித்துள்ளார்.

திட்டவட்டமாக இதனை மறுத்துள்ள கூட்டமைப்பு, தம்முடனான பேச்சுக்களில் அரசு ஏதாவது ஒரு காத்திரமான அடைவை எட்டிய பின்னரே தெரிவுக்குழு பற்றிக் கவனம் செலுத்த முடியும் என்பதை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

குதிரைக்கு முன்பாகக் கரட் கட்டுவது போன்று தெரிவுக் குழு விவகாரத்தை பேச்சுக்கான ஊக்கியாக அரசு பயன்படுத்துவது தவறு என்பதையும் கூட்டமைப்பு அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் பேச்சில் காத்திரமான எந்த முடிவோ தீர்வுக்கான வரையறையோ எட்டப்படாத வரையில் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சேர்ந்து கொள்ளும் என்று அரசு எதிர்பார்க்கக் கூடாது என்றும் அரசுக்குக் கூறப்பட்டுள்ளது என்று உதயனுக்கு அறிய வந்தது. (உ)

உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...
City & Guilds
சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Engineering Qualifications

Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical

City & Guilds Progression Path
Postgraduate Diploma Level (NVQ Level 7) 12 months
Professional Engineer (Equivalent to BEng-UK)
Graduate Diploma Level (NVQ Level 6) 12 months → JOB
NCT/NCIT → Advanced Diploma Level (NVQ Level 5) 12 months → JOB
A/L → Diploma Level (NVQ Level 3) 12 months → JOB
O/L → Certificate Level (NVQ Level 2) 5 months
City and Guilds UK
பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும்,
கணிதப் பிரிவு,
விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்
Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.
அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.
இலகு தவணைக் கட்டண முறை.
City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.
மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது
0214 66 66 99 / 0771 067 394
SIPL JOB NETWORK
LEARNING PLUS
WORK PLACE LEARNING
SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk
Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

# யாழ். சமூகம் பற்றி பிறழ்வாக செய்தி வெளியிடும் தமிழ் இணையத் தளங்கள் குறித்து எச்சரிக்கை

## சுதந்திர ஊடகக்குரல் விடுத்தது

யாழ்ப்பாணம்,ஒக்.12

புலம்பெயர் நாடுகளிலிருந்து தமிழர்களால் இயக்கப்படும் சில தமிழ் இணையத்தளங்கள் தொடர்ச்சியாக யாழ்ப்பாண சமூகம் தொடர்பில் பிறழ்வான செய்திகளை வெளியிட்டு வருகின்றமை குறித்துச் தமிழ்ச் சமூகம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஊடக அமைப்பான சுதந்திர ஊடகக்குரல் வலியுறுத்தி உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்த அமைப்பு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புலம்பெயர் நாடுகளிலிருந்து தமிழர்களால் இயக்கப்படும் சில தமிழ் இணையத்தளங்களில் தமிழ்ச்சமூகம் தொடர்பாகவும்,தமிழர் கலாசாரம், வாழ்வியல், விழுமியங்கள் தொடர்பாகவும் அண்மைக் காலமாக வெளியிடப்பட்டுவரும் பிறழ்வான செய்திகள் தொடர்பாகத் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

தமிழ் சி.என்.என், நியூ ஜவ்னா ஆகியன உள்ளிட்ட சில இணையத்தளங்கள் யாழ்ப்பாண இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவர்கள், கல்வியாளர்கள், சமூகப் பெரியோர்கள் மற்றும் அதிகாரிகள் தொடர்பாகப் பல பிறழ்வான செய்திகளை வெளியிட்டு தமிழ்ச் சமூகம் பற்றித் தவறான விம்பத்தைப் புலம்பெயர் தமிழர்களிடமும் வெளியுலகிடமும் காட்ட முனைகின்றன.

செய்திகளை வெளியிடுவது என்ற பெயரில் தனிநபருக்கு எதிரான கீழ்த்தரமான வக்கிர எண்ணம் கொண்ட தாக்குதல்களை இந்த இணையத் தளங்கள் மேற்கொள்கின்றன. இதற்குப் பயன்படுத்தப்படும் ஒளிப்படங்கள் சம்பந்தப்பட்டவரின் தனிநபர் உரிமையைப்பாதிப்பதாக அவர்களின் சுய மரியாதையை இழிவேற்படுத்துவதாக அமைந்துள்ளன. இதனை அடிப்படை மனித உரிமை மீறலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இவ்வாறான செய்திகளில் கூடுதலாக பெண்களை இழிவுபடுத்தும் ஊடக வன்முறைப் போக்கு காணப்படுகின்றது. ஜனநாயகத்தை மதிக்கும், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நாடுகளில் வளமான வாழ்வையும் பாதுகாப்பான பின்புலத்தையும் கொண்டுள்ள இந்த இணையங்களில் சில இப்படிச் செயற்படுவது கவலையளிக்கிறது.

இத்தகைய இணையத்தளங்களில் வரும் செய்திகள் தரவு மூலங்கள் அற்ற , ஊடகவிழுமியமற்ற அறிக்கையிடலையே பின்பற்றுகின்றன.இது தொடர்பாகத் தமிழ ஊடகங்களும், தமிழ மக்களும் குறிப்பாகப் புலம்பெயர் மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்தப் பிறழ்வான ஊடகப் போக்குத் தொடர்பாக, காத்திரமான முன்னெச்சரிக்கை மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது ஊடகவியலாளர்களதும், ஊடக நிறுவனங்களினதும் ஒட்டுமொத்த சமூகத்தினதும் முக்கிய பொறுப்பாகும்.

எனவே இத்தகைய பிறழ்வுமிக்க ஊடகச் செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் , ஏற்கனவே தரவேற்றம் செய்யப்பட்டுள்ள இவ்வாறான பிறழ்வுமிக்க , ஊடகவிழுமியங்களுக்கு முரணான செய்திகள் மற்றும் உள்ளீடுகளை நீக்கி, ஊடகங்கள் சார்பாகவும்,ஒட்டுமொத்தச் தமிழ்ச் சமூகம் சார்பாகவும் விடுக்கப்படும் கோரிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் இணைய ஊடகங்களில் இத்தகைய ஊடகச் செயற்பாடுகள் தொடர்பாக தமிழ ஊடகக் குரல் தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதுடன் , இவ்வாறான போக்கை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்ளும்-என்றார். (உ-15)

90% Discount Upto + Free5 Diploma Course fee
Ms Office, DTP, Hardware & Networking
Accounting, Web Design, Business English



6 கற்கைநெறிகளில் ஏதாவது ஒரு கற்கைநெறியை தேர்வு செய்து ஏனைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிகட்டணமின்றி பயிலும் வாய்ப்பு
இன்றே உங்கள் <Name>,<Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
MCS Supported By UNDP/JRRP
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
324,Palaly Road,Parameswara Junction
facebook - mcsitcampus www.mcsitcampus.org

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
MyWay ஆசிரியரிடம் நேரடியாக பயிற்சிபெற.... கடைசி சந்தர்ப்பம்
A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளலாம்
திங்கள், புதன், வெள்ளி பிரிவில் சேர 12.10.2011 புதன்கிழமை இன்றும்
சனி, ஞாயிறு பிரிவில் சேர 15.10.2011 சனிக்கிழமையும் கடைசி நாளாகும்
காலம் : 1 - 3 மாதங்கள் கட்டணம் : 3000 மட்டும்
திங்கள்.புதன், வெள்ளி - 4 பிரிவுகள்
காலை 8-9.30, 9.30-11
மாலை 3-4.30, 4.30-6
சனி, ஞாயிறு - 4 பிரிவுகள்
காலை 8-10, 10-12
மாலை 2-4, 4-6
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

விற்பனையாகிறது
தரம் - 05 புலமைப் பரிசில் வினாத்தாள்கள் விடையுடன் 2011 ஆண்டு உட்பட 8 ஆண்டுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
விலை:- 300/=
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

படிவங்கள் விற்பனையாகிறது
1. மருந்துக் கலவையாளர்
2. S.L.A.S - (புதியது)
3. அபிவிருத்தி உதவியாளர்
4. ஆராய்ச்சி உதவியாளர்
5. தொழில் நுட்பவியல் விரிவாக்கல் உத்தியோகத்தர்
6. பட்டப் பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம்)
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

வெளிவந்து விற்பனையாகிறது
1. அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி P. உமாசங்கர் - 250/=
2. இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி P.உமாசங்கர் - 900/=
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

Quick Learning Course
Spoken English With Grammar
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வகுப்புகள் நடைபெறும்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
BCHS Tel: 021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935
No. 13A Annai Teresa Lane, Rambakulam, Vavuniya. Tel: 024 3245287
புதிய வகுப்புக்கள் 17.10.2011 ஆரம்பம்
Batch I 09.00 a.m. - 12.00 p.m.
Batch II 12.00 p.m. - 03.00 p.m.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

# செய்தித்துளிகள் ஒரே பார்வையில்

அரசால் வெற்றிகொள்ளப்பட்ட 21 உள்ளூராட்சி சபைகளுக்கான மேயர்கள், பிரதி மேயர்கள், தவிசாளர்கள் மற்றும் பிரதித் தவிசாளர்கள் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

*** *** ***

வீடொன்றில் திருடச்சென்ற இலங்கைத் திருடன் ஒருவன் வீட்டு உரிமையாளர் காட்டிய போலித் துப்பாக்கியை உண்மை என நம்பி அவரிடம் வசமாக மாட்டிக்கொண்ட சம்பவம் ஒன்று குவைத்தில் இடம்பெற்றுள்ளது.

*** *** ***

உடன் அமுலுக்கு வரும்வகையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் நிர்வாகசபை கலைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நிர்வாகசபையில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு காரணமாகவே இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், அடுத்த வாரம் புதிய நிர்வாகசபை நியமிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

*** *** ***

ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மறைவையொட்டி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கவலை வெளியிட்டுள்ளது.

மக்களுக்கு நிரந்தர அரசியல் தேவையை வழங்கிய பாரத லக்ஷ்மனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதாக அக்கட்சி வெளியிட்டுள்ள சோக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*** *** ***

கெப்பத்திகொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அய பிக்கேவெவ பிரதேச பௌத்த விகாரையில் உள்ள 7 வயதுடைய சிறிய பிக்குவை அந்த விகாரையின் விகாராதிபதி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

*** *** ***

நாட்டிலுள்ள பெரும்பாலான ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பலகையிலான இருக்கைகளில் சிலந்திகள் பெருகிக் காணப்படுகின்றன என்று ரயில் பயணிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

*** *** ***

விழிகளில் படலம் ஏற்படுகின்றமையால் வருடாந்தம் ஒரு இலட்சம் பேர்வரை பார்வையை இழக்க நேரிடுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

*** *** ***

நாடு முழுவதும் உள்ள சமாதான நீதவான்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. சமாதான நீதிவான்களின் பல்வேறு சட்டவிரோத செயல்கள் காரணமாக நாளாந்தம் முறைப்பாடுகள் பதிவாகி வருவதாக அமைச்சின் செயலாளர் சுகத் கமலத் கூறினார்.

(ஒ-சி)

வேலை வாய்ப்பு
நீங்கள் வாழ்க்கையில் முன்னேறும் இலட்சியமும் தன்னம்பிக்கையும் உடையவரா? அவ்வாறான இளைஞர், யுவதிகளுக்கோர் அரிய வாய்ப்பு!
மாதாந்தம் 25000/= ரூபாவுக்கு மேல் வருமானம் பெற விரும்புகிறீர்களா? அப்படியாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.
K.Kayanthan
T.P: 0217903283, 0773264922, 0757600607

## மரண அறிவித்தல்

### கந்தன் ஆறுமுகம்



புத்தூர் மணற்பகுதியைச் சேர்ந்த கந்தன் ஆறுமுகம் 11.10.2011 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், ஸ்ரீரஞ்சனிதேவி, ஸ்ரீசுகிர்தராணி, தர்மசோதி, ஜெகசோதி (ஜேர்மனி), ஸ்ரீபிரபா, ஸ்ரீநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராஜா, புஸ்பகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும், கவிஞர் வே.இளையகுட்டி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), வ.திருஞானசம்பந்தர் (ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் ப.தெ.வ.கூ.சங்கம், அச்சுவேலி), க.நவரட்ணம் (இலிகிதர், ப.தெ.வ.கூ.சங்கம், அச்சுவேலி), த.கருணாகரன் (DCSO, BOC யாழ்.) , சிவமலர், கௌரி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், வ.மாணிக்கம், செ.உருத்திராதேவி, காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, செல்லையா ஆகியோரின் சகோதரரும், இ.நிமலன் (ஆசிரியர்), சாருமதி, சாரங்கன் (ஆசிரியர்), கோகுலன் (ZOA யாழ்), கபிலன் (BOC கைதடி), பிரியதர்சன், தினமதனன், டினேஸ், கவிஸ்னா, நிருபா (BOC யாழ்), சாருஜா (கொமர்ஷல் வங்கி, நெல்லியடி), சஜந்தா (HNDA), விஷ்ணுதரன், வர்த்தினி, சிந்துஜன் (ஜேர்மனி), சாருஜன் (ஜேர்மனி), நீருஜன் (ஜேர்மனி), ஜனந்தன், றஜிந்தன், கோபிதன், கோபிதா, ருக்மன், மானஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், லதாங்கி, அபிநயன், நர்த்தனன், தரங்கினி, அட்ஷயன், பபிஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2011) வியாழக்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கவுடுதூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.திருஞானசம்பந்தர் (மருமகன்)

மணற் பகுதி,
புத்தூர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.